# திருக்கோயில்

மே 1976

13 JUL 1976



13 JUL 1976

# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்றாலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குனர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

(110)

முகப்பு :

திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரி அம்மன் திருக்கோயிலின் தோற்றம்.

# திருக்கோயில்

மாலை: ~~19~~ 18 | நள—சித்திரை-வைகாசி மே—1976 | மணி: 8

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

''திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தாதார்'களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**திரு. ஆணையர்,**
*அறநிலைய ஆட்சித் துறை,*
*சென்னை—600 034*

என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு (12) அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதழ்கள் தவறுது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-

## பொருளடக்கம்

இறைவனின் கருணை மதி மயக்கம் —ஆசிரியர்

ஞானசாரம் —ஆசிரியர்

அறநிலையத்துறையின் அரும்பணிகள்
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம் ஐ.ஏ.எஸ்., அறநிலைய ஆணையாளர்.

கண்டறியாதன கண்டேன்
—கவியோகி சுத்தானந்த பாரதியார்

ஆழ்வார்களும், நாயன்மார்களும்
—ந. ரா முருகவேள், M.A., M.O.L.

கந்த புராணம் —திருமுருக கிருபானந்தவாரியார்

வைத்தியநாதன் —ஆசிரியர்

திருவண்வண்டூர்த் திருமகள் கொழுநன்
—திரு. டாக்டர் ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.

மந்திரயோகம்
—திரு. கு. வரதராச பிள்ளை, B.A., திருச்சி.

திருநின்ற செம்மை
—ந. ரா முருகவேள், M.A., M.O.L.

சேக்கிழார் திருவாக்குண்மை
—சீலத்திரு. சோமசுந்தர நாயகர்

பொன்னப்பன் —மகாவித்துவான், பத்மவிபூஷண் திரு. பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்.

வாலி வழக்கு —''முதுபெரும் புலவர்'' திரு. புரிசை சு. முருகேச முதலியார்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

JL
ஒஉ௩ 211, N58
N76-18-8

# இறைவனின் கருணை மதி மயக்கம்

ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

158613

## முன்னுரை

தமிழ் மொழியானது, பக்தி உணர்வுப் பாடல்களுக்கு மிகவும் புகழ்பெற்றது. தமிழிற் போல உலகில் வேறு எம்மொழியிலும், பல்லாயிரக் கணக்கில் பக்தியுணர்வுப் பாடல்களைக் காண்டல் அரிது. ஆழ்வார்களும் நாயன்மார்களும், அவர்களின் வழி வந்த எத்துணையோ பல அருட்பெருஞ் சான்றோர்களும், பற்பல ஆயிரம் பக்தி இலக்கியப் பாடல்களைத் தமிழில் அருளிச் செய்துள்ளனர். அவற்றுள் திருவாசகம் என்பது, மிகவும் தலை சிறந்த தொன்றாகத் திகழ்ந்து வருகின்றது.

## திருக்கோத்தும்பி

திருவாசகத்தில், 'திருக்கோத்தும்பி' என்பது ஒரு சிறந்த பகுதி. அதன்கண் மாணிக்க வாசகர், இறைவன் தம்மை ஆட்கொண்டு செய்தருளிய பலப்பல தண்ணளிகளை, மிகவும் வியந்தோதிப் புகழ்ந்து போற்றுகின்றார். 'சிவனோடு ஐக்கியம்' என்னும் பொருளை இத்திருப் பதிகம் உணர்த்துவதாகச் சான்றோர்கள் கொண்டுள்ளனர். 'பிறமலர்களில் உள்ள சிறிதளவு தேனை விரும்பித் தேடி உழலாமல், பேரின்பமாகிய சிறந்த தேனைப் பெற்றுண்ணுவதற்கு இறைவனின் திருவடியாகிய தாமரை மலரிற் சென்று ஊதுவாயாக?' என வண்டை நோக்கிப் பாடும் முறையில் இத்திருப்பதிகம் அமைந்துள்ளது.

நான்ஆர்? என் உள்ளம்ஆர்?
ஞானங்கள் ஆர்? என்னையார் அறிவார்?
வானோர் பிரான் என்னை
ஆண்டிலனேல்; மதி மயங்கி
ஊனார் உடைதலையில்
உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே
சென்றுஊதாய், கோத்தும்பீ!

என்னும் பாடல், திருவாசகத்தில் 'திருக் கோத்தும்பி' என்னும் பகுதியில் வரும் ஒரு சிறந்த பாடல் ஆகும்.

## பாடலின் பொருள்

திருவாசகத்தில் அறிஞர்கள் அடிக்கடி எடுத்துக் காட்டும் மேற்கோட் பாடல்களுள் ஒன்றாகத் திகழும் சிறந்த பாடல் இது! நினைத் தொறும் ஊற்றெடுத்துச் சுரந்து பெருகும் பல, அரிய பெரிய கருத்துக்களை உட்கொண்டது இப் பாடல்! இதன் பொருள் வருமாறு:

''அரசவண்டே! தேவர்களின் தலைவன் ஆகிய சிவபிரான் என்னை வலிய வந்து ஆட்கொண்டருளியிராவிட்டால், நான் எத்தன்மையனாக இருந்திருப்பேன்? என் மனமானது எத்தகையதாக இருந்திருக்கும்? என்னுடைய உணர்வுகள் எவ்வகையினவாக இருந்திருத்தல் கூடும்? என்னை அடியவன் என்று உலகத்தில் யார் அறிந்திருப்பார்கள்? மதி மயங்கி, ஊன்நிறைந்த தலையோட்டில் பிச்சை எடுத்து உண்ணுகின்ற தில்லை யம்பலவனாகிய சிவ பிரானின், இன்பத் தேன் நிறைந்த திருவடித் தாமரை மலரினையே சென்றடைந்து, நீ ஊதுவாயாக!''

சிறந்த இப்பாடலின்கண் அமைந்துள்ள 'மதி மயங்கி' என்னும் தொடர், அறிஞர்களுக்குப் பெரிதும் மதி மயக்கம் தருவதாக விளங்கி வருகின்றது. இத்தொடருக்கு அறிஞர்கள் பலரும் பல வகைகளில் பொருள் கூறி வருகின்றனர். 'சிந்திப் பரியன, சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன' என்னும் நிலையில், இத்தொடரானது புதிய புதிய பொருள்களை யுணர்த்துவதாகத் திகழ்கின்றது. ''உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' எனத் தொல்காப்பியர் பணித்தருளியபடி, உணர்பவர்களின் அறிவு வலிமைக்கும் தவவலிமைக்கும் ஏற்ப, இத்தொடர் எத்துணையோ பல பொருள்களை உணர்த்த வல்லதாக இருக்கின்றது.

## இருவகை நூல்கள்

நூல்களை அறிவு நூல்கள் என்றும், அனுபவ நூல்கள் என்றும் இருவகையிற் பிரிக்கலாம். அறிவு நூல்களுக்குப் பொருள் அறிதலும் அறிவித்தலும் எளிதாக இருக்கும். ஆனால் அனுபவ நூல்களின் பொருளை எல்லோருமே உணர்தல் இயலாது. ஒரோவழி அறிஞர் சிலர் உணரப் பெற்றாலும், அதனை முறையே எடுத்துப் பிறர்க்கும் எளிதின் விளங்கும்படி உணர்த்துதல், எளியதொரு செயலன்று. இராமாயணம் பாரதம் அகநானூறு புறநானூறு போன்ற இலக்கியங்களுக்கு, நல்ல கல்வி உடையோர் எவரும் எளிதில் பொருள் அறியவும் அறிவிக்கவும் இயலும். ஆனால், தேவாரம் திருவாசகம் திருமந்திரம் போன்ற அனுபவ ஞானப்பெரு நூல்களுக்கு எத்தகைய கல்வி வல்லமை உடையவரேயாயினும், யாம் இவற்றின் பொருள் நலங்களையெல்லாம் ஐயமறத் தெளிந்து முற்றவுணர்ந்து கொண்டோம் என்று எண்ணவும் இயம்பவும், ஒரு சிறிதும் துணிவு கொள்ளார். வெறும் அறிவு நூல்களுக்காயின், ஒருவர் ஒரு நாளைக்குப் பலநூறு பாடல்களுக்கு உரை கூறலாம். ஆனால் அனுபவ ஞானப் பெரு நூல்களின் ஒரு சிறு தொடருக்குப் பொருள் காணப் பல ஆண்டுகள் முயன்றாலும் முடிவதில்லை.

*(1) அதனால்தான், திருவாசகம் திருமந்திரம் போன்ற அனுபவ ஞான அருட்பெரும் நூல்களுக்கு, முன்னைப் பெருஞ் சான்றோர்கள் எவருமே உரை எழுதத் துணிந்து முன் வந்திலர். இவ்வாற்றால் திருவாசகம் போன்ற தெய்வத் தமிழ் மறைத் திரு நூல்களுக்குப் பொருள் காணும் முயற்சியின் அருமைப்பாடு, இனைய தென்று யாவரும் அறியலாம்!

## மதி மயங்கி

எனினும், இத்துறையில் நம்மால் இயன்ற அளவு முயன்று பொருள் நலம் காண முற்படுதல், குற்றமாகாது. ஆதலின் 'மதி மயங்கி' என இத் திருப்பாடலில் வரும் தொடருக்கு எவ்வெவ்வகையிற் பொருள் கொள்ளலாம் என்பது பற்றி, ஈண்டு ஒரு சிறிது சிந்தித்து இன்புறுவோம்.

(1) 'மதி மயங்கி' என்பதற்கு, 'மதி மயங்கியவனாக நடித்து' எனப்பொருள் கொண்டு, அதனை 'உண்பலிதேர் அம்பலவன்' என்பதனோடு இயைத்து முடிபுகொள்ளலாம். இப்பொருளில் இத்தொடர் வினைஎச்சம் ஆகும். இது பொதுவாகப் பலிதேர்தலின் (பிச்சை எடுத்தலின்) இழிவைக் குறிப்பதாக அமையும்.

(2) 'மதி மயங்கி' என்பது, பிரமனைக் குறிப்பதாகக் கொண்டு, பிரமனின் 'ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்' என இயைத்தும் பொருள் கொள்ளலாம். பிரமன் தன்னையே முதல்வனாக எண்ணித் தருக்குற்று நின்றனன் ஆதலின், அவனை 'மதி மயங்கி' எனக் கொள்ளுதல் பொருந்தும். இப்பொருளில் இத்தொடர் வினையாலணையும் பெயர் எனவும், ஆறாம் வேற்றுமைத் தொகை எனவும் படும்.

(3) 'மதி மயங்கி' என்பதனை 'நானார்' என்பதனோடு மாட்டேற்று முறையால் இயைத்து, 'மதிமயக்க முற்றவன் ஆகிய யான் எத்தகையேன்' எனவும் பொருள் கொள்ளலாம்.

(4) 'மதி மயங்கி' என்பதனை 'ஆண்டிலனேல்' என்பதனோடு மொழி மாற்றி இயைத்தும் பொருள் கொள்ளலாம். இவ்வாறு கொள்ளின், இறைவனை மதிமயக்க முடையவனாகக் குறிக்கின்ற குற்றம் வரும் என்று அறிஞர்கள் பலரும் கருதுகின்றனர். நம் மதிமயக்கத்தால் இறைவனின் மீது மதிமயக்கமாகிய குற்றத்தை ஏற்றி உரைத்தல் பெரும் பாவமாகும் என்று அறிஞர்கள் கூறுவர். ஆயினும், இவ்வாறு பொருள் கொள்ளுதலும், ஒருவகையில் இறைவனுக்குப் பெருஞ் சிறப்பாகும். உண்மையிற் கூறலுறின், இவ்வாறு கொள்வதே இறைவனின் கருணைத் திறத்தினை யுணர்த்தும் சிறந்த நய உரையாகும் எனலாம்.

## 'தேய் மதியன்'

இறைவன் பேரறிவினன், முற்றுணர்வுடையவன், ஞான சொரூபன், என்பன அனைத்தும் உண்மை. ஆயினும் அவனுக்கும் மதி மயக்கம் உண்டு என்று கூறத் தட்டில்லை. அம்மதி மயக்கம், இறைவனுக்குக் குறையாகாமல், இறைவனின் பெருங் கருணைத் திறனை விளக்கும் நிறைவேயாகும். இம்முறையில் ஆராய்ந்தால், மாணிக்க வாசகர் இறைவனின் இயல்பைக் கண்டறிந்து புதிதாகவும், பொருத்தமாகவும், முதல் முதலாகவும் அமைத்த அன்புப் பெயரே (Sobriquet) 'மதி மயங்கி' என்பது எனவும் கூறலாம். பிறிதோர் இடத்தில் இறைவனை மாணிக்க வாசகர் 'குணமிலி' 'மானிடன்' 'தேய் மதியன்' என்றெல்லாம் நயமுறக் குறித்திருத்தலும் கருதத் தக்கது (நீத்தல் 46). கரியின் உரிப்பிச்சன், தோலுடைப் பிச்சன், நஞ்சுண் பிச்சன், சுடுகாட்டு எரிப்பிச்சன் என்றெல்லாம் அவர் பாடியிருத்தலும் (நீத்தல் 49) நாம் சிந்தித்து உணர்தற்குரியது. இவ்வாற்றால் இறைவனை மதிமயக்கம் உடையவனாகவும் உணர்ந்து, மாணிக்க வாசகர் குறிப்பிட்டதனை வலியுறுத்தும் வகையில், நாம் பல அமைவுரைகள் கூறலாம்.

அவைகளுள் சில வருமாறு:—

## வானோர் பிரான்

(1) இறைவன் 'வானோர் பிரான்' தேவர்களின் தலைவன். தேவர்களை அடிமையாகக் கொள்ளும் உரிமையும் சிறப்பும் உடையவன். அங்ஙனமாகவும் 'ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்டான்'. இஃது ஒன்றே அவன் 'மதி மயங்கி' என்பதற்குச் சாலும்.

''தாதாய்! மூவேழ் உலகுக்கும்
தாயே! நாயேன் தனையாண்ட
பேதாய்! பிறவிப் பிணிக்கோர் மருந்தே''
—திருவா 444

## நினைவின்றி

(2) இறைவன் நல்லவர்களையும் அன்பர்களையும், திறம் தெரிந்து தேர்ந்து ஆட்கொள்ளும் தன்மையனாதல் வேண்டும். ஆனால், பொல்லாதவனும், அன்பில்லாதவனும், பலப் பல குறைகளை யுடையவனுமாகிய என்னை ஆட்கொண்டான். ஆட்கொள்ளத்தகாத என்னை அவன் ஆட்கொண்டமைக்கு ஏதேனும் ஒரு காரணம் இருத்தல் வேண்டும். அடியவர்களை ஆட்கொள்ளுங்கால், அவர் நடுவே இருந்த என்னை அவன் பிரித்தறிய மாட்டாமல், அடியவனாகவே கருதி மதி மயங்கி நினைவின்றி ஆண்டுகொண்டான் போலும்!

நாயேனையும் இங்குஒரு பொருளாக
நயந்து வந்து
நீயே நினைவுஇன்றி ஆண்டுகொண்டாய்....
—அபிராமி அந்தாதி, 61

---

*(1) பொருத்தமான ஓர் அடைமொழியைக் கண்டு பிடித்து அமைத்தற்கு, உலகப் புகழ்பெற்ற வில்லியம்வொர்ட்ஸ்வொர்த் என்னும் பெருங்கவிஞருக்கு 43 ஆண்டுகள் ஆயின என்பது, ஈண்டு இயைபுபற்றி உணரத் தக்கது.

"Dorothy Wordsworth records in her 'Journal' her brother William had tried to seek an epithet for the Cuckoo, and only after 43 years found himself able to express the sound of the Cuckoo's 'Wandering voice.' "

—*J. L. Lowes*,
Convention and Revolt in Poetry.

## யாதும் பெற்றிலன்

(3) அடிமை கொள்ளும் தலைவராயினர், தம் நலன் கருதியே அடிமைகளை அமைத்துக் கொள்வர். அதுவே உலகியலிற் பலரிடத்தும் காணப்படும் உண்மை. ஆனால் இறைவனோ என்றால், தனக்கு ஒரு பயனும் பெறக் கருதாமல், எனக்கு நலஞ் செய்தற்கே என்னை ஆட்கொண்டருளினான். இஃதும் ஒருவகையில் மதி மயக்கமே அன்றோ?

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலொ சதுரர்?
அந்தம்ஒன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்?
—கோயில் 10.

## நகவேதகும் நாடகம்

(4) நல்லவர்களை உயர்த்துதலும், அல்லவர்களைத் தாழ்த்துதலுமே எங்கும் பொதுவாக நாம் காணும் நெறி. ஆனால் இறைவன் விண்ணோரைத் தாழ்த்தினான், புன்மையேனை உயர்த்தினான். தகுதி எதுவும் இல்லாத என்னை ஆட்கொண்டான். எம்பிரான் செய்த நாடகம் நகைப்பையே தருகின்றது (சதகம்-10) என மணிவாசகர் கூறுதல் கருதின், இறைவன் மதி மயங்கி யாதல் தெளியப்படும்.

## ஆசு தோஷி

(5) உலகத்துத் தலைவர் என்போர், அற்பப் பொருள்களுக்கு ஆசைப்படார். ஆசைப்படின் அவர் தலைவர் எனற்குத் தகுதியுடையவராகார். இறைவனோ அற்பப் பொருள்களையும் விரும்பி ஏற்று மகிழ்பவன். அதனால் அவனுக்கு 'ஆசு தோஷி'* (அற்பப் பொருள்களை விரும்புபவன்) என்றும் ஒரு பெயர் வழங்கும். அற்பப் பொருள்களை விரும்புவதே ஒரு மதி மயக்கம். அற்பப் பொருள்களை விரும்பி ஏற்று, அவற்றிற்காகத் தன்னிடமுள்ள மிகவுயர்ந்த அரிய பொருள்களைப் பிறருக்குக் கொடுத்து விடுதல், அதனினும் மிக்க பெருமதிமயக்கம்! அடியார்கள் சிறிது தண்ணீரைத் தன் தலையில் வார்த்துப் பச்சிலையைக் கிள்ளித் தன்மேல் இட்டால், அதற்கு மிகவும் மகிழ்ந்து, எல்லாப் பெரும் பதவிகளையும் பேரின்பத்தையும் வழங்கி விடுகின்றான் இறைவன். இறைவனின் இச் செயல் மதி மயக்கமேயாகும் அன்றோ?

குடங்கை நீரும் பச்சிலையும்
இடுவார்க்கு இமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய் கையிற் படுதலைகொண்டு
இடங்கள் தோறும் இரப்பாய்என்று
ஏசு வார்க்கென் பேசுவனே?
—பரஞ்சோதி முனிவர்.

---

*(2) ''கல்கத்தா பல்கலைக் கழகத்தின் புகழ்பெற்ற துணை வேந்தராக விளங்கி யிருந்தவர் 'அசுடோஷ் முக்கர்ஜி' (Asutosh Mukherjee) என்பவர். அவர்தம் பெயரில் முதற்கண் உள்ள 'அசுடோஷ்' என்பது 'ஆசுதோஷி' என்னும் வடசொல்லின் மரூஉவேயாகும் என்பது, இங்கு நாம் இயைபுபற்றி அறிந்து இன்புறுதற்குரியது.'' —ஆசிரியர்.

## பித்தவடிவப் பிள்ளை

(6) இறைவன் ஒருவகையில் குழந்தையைப் போன்றவன். குழந்தைகள் பொருள்களின் அருமையையும் மதிப்பையும் அறியா. ஒரு காசு இனிப்புக்கு மகிழ்ந்து, விலையுயர்ந்த காசு மாலையையும் கழற்றிக் கொடுத்துவிடும். பொருள்களின் மதிப்பறியாத மதி மயக்கம் உடையன குழந்தைகள். தக்கார் தகாதார், நல்லார் பொல்லார் என்பன போன்ற பாகுபாடுகளையும் குழந்தைகள் அறிய மாட்டா. அவர்கள் எல்லோரையும் சமமாகவே கருதும். அந்நிலையில் குழந்தை எனத்தக்க இறைவன், தீவினையேன் ஆகிய என்னையும் நல்லவன் என்று கருதி, மதிமயங்கி அடியவனாக ஏற்றுக் கொண்டருளினான்.

மழக்கை யிலங்குபொற் கிண்ணம் என்றலால்
அரியை என்றுனைக் கருது கின்றிலேன்.
—சதகம், 91.

அத்தி யுரித்தது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண் டிவ்வுலகில் பிள்ளையும் ஆம்
—பூவல்லி, 19.

## வைதாலும் வாழ்விப்பவன்

(7) இறைவன் ஒருவகையிற் பித்தன், அறிவில்லாதவன். தன்னைத் தன் அடியவர்கள் இகழ்ந்தாலும், புகழ்ந்ததாகக் கொள்ளும் இயல்பினன். வாழ்த்துபவர்களுக்கு நலம் செய்வதும், வைபவர்களை ஒறுப்பதுமே, யாவர்க்கும் உரிய இயல்பான வழக்கம். இறைவனோ வைதாரையும் வாழ வைப்பான். அடியார்கள் நிந்தித்துப் பாடினாலும், அதையும் ஒரு பெரும் புகழாகக் கருதி, நிந்தையையே துதியாக ஏற்றுப் போற்றி மகிழ்வான். இத்தகையவனை மதி மயங்கி என்பது பொருத்தமே அன்றோ?

## நாய்க்குத் தவிசு

(8) உலகில் தக்கோர் யாரேனும் விருந்தினராக வருவாயின், அவர்களுக்குத் தவிசளித்துச் சிறப்புச் செய்தலே வழக்கமாகும். தன்னினும் மிகத் தாழ்ந்தவர்களுக்கோ, தீய கொடியவர்களுக்கோ, வெறும் புல்லியவர்களுக்கோ தவிசளித்துச் சிறப்பிப்பதில்லை. யானோ நாயிலாகிய குலத்தினும் கடைப்பட்டவன். ஒரு நாயை வரவேற்று, அதற்குப் பொன்னால் இயன்ற தவிசளித்துப் பெருஞ் சிறப்புச் செய்வார் எவரும் இரார். இங்ஙனமாகவும் இறைவன் நாய்போன்ற எனக்குப் பொற்றவிசு அளித்தான். வானோர்களும் அறியாத பெருவளம் ஈந்தான்.

நானார்அடி அணைவான்ஒரு
நாய்க்குத்தவிசிட்டு இங்கு
ஊனார்உடல் புகுந்தான், உயிர்
கலந்தான், உளம்பிரியான்,
தேனார்சடை முடியான்மன்னு
திருப்பெருந்துறை யுறைவான்
வானோர்களும் அறியாததோர்
வளம்ஈந்தனன் எனக்கே.
—உயிருண்ணி, 2.

நம்மையும்ஓர் பொருள் ஆக்கி
நாய்சிவிகை ஏற்றுவித்து
அம்மைஎனக்கு அருளியவாறு
ஆர்பெறுவார் அச்சோவே. —அச்சோ, 9.

நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு.... —சதகம், 28.

பொற்றவிசு நாய்க்குஇடுமாறு
அன்றேநின் பொன்அருளே —ஏசறவு, 5.

நாய்மேல் தவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனியான். —கோத்தும்பி, 20.

**தோஷ போக்கியம்**

(9) குணங்கண்டால் உவத்தலும், குற்றம் கண்டால் வெறுத்து ஒறுத்தலுமே எவரும் செயற்பாலது. அங்ஙனமாகவும் இறைவன் ''குறை உடையார் குற்றம் ஓரான்''. குற்றங் களை ஓராமை மட்டுமன்று. ''என் அடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார்' என்றாற்போல, அடியார் செய்த குற்றங்களை யும் குணமாகவே கொண்டு விடுவான் இறை வன்! ஈன்றணிய பசுவானது தன் கன்றின் மீதுள்ள வழுக்களையும் நாவினால் நக்கி விரும்பி உட்கொண்டுவிடும். கன்றின் அழுக்கையும் விரும்பும் பசுவின் சிறந்த அன்புடைமையையே 'வாத்சல்யம்' (வத்சம்—கன்று) என்பர். அது போல இறைவனும் அடியார்களின் குற்றத்தை யும் *(3)''தோஷ போக்கியம்'' எனும்படி, குண மாக உவந்து கொண்டு மகிழ்ந்தருள்வான். அவ்வியல்பு பற்றியே அவனுக்குப் 'பக்த வத்ச லன்' என்பது பெயர் ஆயிற்று. அடியார்கள் செய்யும் ''பாதகத்திற்கும் பரிசு வைப்பவன்'' இறைவன். அடியார்களின் ''பாதகத்தையும் பணியாக்கி'' அவர்கள் ''செய்தனவே தவ மாக்கி'' விடுதல், இறைவனது இயல்பாகக் காணப்படுகின்றது. ஞானசம்பந்தர் நாவுக் கரசர் நாளைப்போவார் சூதர் சாக்கியர் சிலந்தி கண்ணப்பர் முதலியவர்கள் குற்றம் செய் யினும், குணமெனவே கொள்ளும் கொள்கை அவனுக்குரியது! இத்தகைய இறைவனை மதி மயங்கி என்பதில் தடையும் உண்டோ?

**பொதுவினில் தீர்த்தோன்**

(10) எல்லோரையும் ஒப்ப நோக்குதல் பொதுவாகத் தலைவர்களுக்குரிய இயல்பான கடமையாகும். ஒருவர்க்கு ஒரு நீதியும், பிறி தொருவர்க்குப் பிறிதொரு நீதியும் செய்தல் தலைவராயினார்க்கு முறையன்று. இம்முறை திறம்பி, நெறி பிறழ்ந்து நடப்போர் மதி மயங்கியே யாவர். இறைவன் எல்லோரையும் ஆட்கொள்ளும் பொதுமுறையினின்று திறம்பி நெறி பிறழ்ந்து, என்னை மட்டும் ஒரு தனி நெறி வகுத்து ஆட்கொண்டருளினான். 'பொது வினில் தீர்த்து என்னை ஆண்டான்' (கோவை, 146). யான் கடுமையான விரதங்களைக் கடைப் பிடித்து வருந்தாமலும், செய்தற்கரிய தவத் தொழில்களை மேற்கொள்ள வேண்டாமலும், எனக்கு எளிவந்தான். எனக்கு அவனே ''தவ வினை தீர்ப்பவன்'' (கோவை, 107). உலகியல் வாழ்விலேயே மயங்கித் தனக்கு முகம்கொடா மல் உழன்று கொண்டிருந்த என்னை ''வா வா என்று பூதலத்தே வலித்தாண்டு கொண்டான்''. ''புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே உண்டி யாய், அண்ட வாணரும் பிறரும் என்பராய் நினைவார், எனைப்பலர் நிற்க, எற்றினுக்கோ எனை ஆண்டான்?'' இத்தகையவனை மதி மயங்கி என்றலே சாலப் பொருந்தும் என்றலில் தடை யாது?

மாணிக்க வாசகர் இறைவனைப் பல இடங் களிலும் பித்தன், எத்தன், கள்வன், சோரன், பேதை என அன்புடன் வழங்கி யிருத்தலால், மதி மயங்கி என்றும் அவர் இறைவனைக் குறித்த தாகக் கொள்ளுதலில், தவறேதும் இல்லை யென்க.

**இலக்கியங்கள்**

சிறந்த பேரிலக்கியங்கள், தம்மை ஆழ்ந்து கற்குந்தோறும் கற்போர்க்குப் புதிய புதிய பல நுண் பொருள்களை விளக்கும் தன்மை வாய்ந் தன. நவில்தொறும் அந்நூல்களின் நயம் பெருகும். தொட்டனைத்தூறும் மணற்கேணி போலக் கற்றனைத்தும் அவற்றினின்று அறிவு ஊற்றெடுக்கும். 'அறிதோறு அறியாமை கண் டற்றால்' என்றதற்கேற்பப் புதிய புதிய பொரு ளனுபவம், அரிய பெரிய சிறந்த இலக்கியங்களைப் பயிலுங்கால் தோன்றிக் கொண்டே இருக்கும். நல்ல சிறந்த இலக்கியங்கள் உணர்த்திக் கொண்டு செல்லும் பொருட்டிறங்களுக்கு, ஓர் எல்லையே இல்லை எனலாம்*.

†'இதுவா அல்லது அதுவா' என்ற முறையில் இல்லாமல், 'இதுவும் அதுவும் பிறிதும்' என்ற முறையில் அவற்றின் பொருட் பரப்பானது, பரந்து விரிந்து கொண்டே போகும் என்பர் அறிஞர். அம்முறையில் நாம் மேலே ஆராய்ந்த கருத்துக்கள் அனைத்துமே, மிக்க பொருத்தம் உடையனவாகும்!

**முடிவுரை**

இவ்வுண்மையை வலியுறுத்துதற்கு, நாம் இதுகாறும் ஆராய்ந்த திருவாசகத் திருப் பாடலே, ஒப்பற்ற பெருஞ் சான்றாகும். இத் துணைச் சிறந்த திருவாசகச் செந்தமிழ் மாமறை யினை, நாம் இடைவிடாமற் பயின்றோதி, இறை யருள் பெற்று உய்ய முயலுவோமாக.

---

(3) According to the doctrine, known as *Dosha bogya*, God is said to enjoy the sin of his devotees, since it gives a larger scope for the display of his grace.

See Oscar Wilde's *De Profundis* : "Christ, through some divine instinct in him, seems to have loved the sinner as being the nearest possible approach to perfection in man. . . In a manner not yet understood of the world, he regarded sin and suffering as being in themselves beautiful, holy things and modes of perfection.'' —*Dr. S. Radhakrishnan.*

* (4) "The proof of the purest poetry is that its meaning is *inexhaustible.* About the best poetry, and not only the best, there floats an atmosphere of *infinite suggestion.* The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself, or rather to expand into something *boundless* which is only focussed in it." —*Prof. A. C. Bradley*, Oxford Lectures on Poetry.

† (5) "Words do not have *either-or* meaning in imaginative poetry ; they have **and-and-and-meanings**. That is how poetry works." —*Hilary Corke.*

---

சென்னை-தியாகராய நகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெற்றுவரும் **திருவாசக வகுப்பில்** நிகழ்த்திய கருத்து விளக்கங்களின் சுருக்கத் தொகுப்பாக, இக்கட்டுரை எழுதப்பெற்றது. —ஆசிரியர்

# ஞானசாரம்

## முன்னுரை :

எம்பெருமானர் என்று போற்றப்படும் இராமாநுசரின் காலத்தில் வாழ்ந்திருந்த யக்ஞ மூர்த்தி என்னும் மாயாவாத சந்நியாசி, இராமாநுசரிடம் சமயதத்துவ வாதம் புரிந்து தோற்றுப் பின்னர் அவரால் ஆட்கொள்ளப் பெற்ருர்; அருளாளப் பெருமாள் எம்பெருமானர் என்னும் திருநாமம் எய்திச் சிறந்த வைணவப் பெருஞ்சான்ருேராகத் திகழ்ந்திருந்தார். இராமாநுசரின் நிழலும் அடிதாறுமாக இருந்து, அவர்பால் சகல தத்துவார்த்தங்களையும் கேட்டு, தத்துவம் இதம் புருஷார்த்தம் என்னும் மூன்றிலும் தெளிவான ஞானம் எய்தியிருந்த அருளாளப் பெருமாள் எம்பெருமானர், இறையருள் நூல்களில், முமுட்சுக்கள் தெரிந்து கொள்ளத் தக்கனவாக விளங்கும் இன்றியமையாத சிறந்த கருத்துக்களைத் தெரிந்தெடுத்துத் தொகுத்து, இயற்றியருளிய, நூல்களுள் ஒன்றே, ஞானசாரம் என்பதாகும்.

''சுருளார் கருங்குழல் தோகையர்
வேல்விழியில் துவளும்
மருளாம் வினைகெடும் மார்க்கம்
பெற்றேன்; மறைநான்கும் சொன்ன
பொருள் ஞானசாரத்தைப் புந்தியில்
தந்தவன், பொங்குபுகழ்
அருளான மாமுனி அம்பொற்
கழல்கள் அடைந்தபின்னே''

எனவரும் இனிய தனியன் (தனிச் செய்யுள்) வாயிலாக, ஞானசாரம் என்னும் நூலின் நலத்தையும், அதனை அருளிச் செய்த ஆசிரியரின் சிறப்பையும், யாவரும் நன்குணரலாம்.

## ஞானசாரம் :

ஞானசாரம் என்னும் இந்நூல், நாற்பது அழகிய வெண்பாக்களால் இயன்றது. எளிய இனிய தெளிவான நடையில் அமைந்தது. சுருங்கச் சொல்லி, விளங்க வைக்கும் பெருஞ் சிறப்புடையது. நவின்ருேர்க்கு இனிமை, நன் மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத் தாதல், விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்ததாகுதல் முதலிய நூல்நலங்களெல்லாம் சாலவும் கொண்டது. சிறந்த சொற்சுவை, பொருட்சுவைகள் நிறைந்தது. இத்தகைய பல சிறப்புக்கள் வாய்ந்த ஞானசார நூலின் பொருளை, இங்கு இயன்றவரை ஒரு சிறிது ஆய்ந்துணர்ந்து மகிழ்வோம்!

## 1. பழுத்தால் விழுங்கனி :

பிரபத்தி என்னும் நெறி, இருவகைப்படும். அவையாவன ஆர்த்தப் பிரபத்தி, திருப்தப் பிரபத்தி என்பன. தேகத்தின் முடிவில் மோட்சம் பெறுவதை இசைந்திருக்கும் ஒருவன் செய்யும் பிரபத்தி, திருப்தப் பிரபத்தியாகும். அவ்வளவு காலம் தாமதிக்கப் பொறுக்காமல், விரைவிலேயே வீடுபேறு அடைவதற்குத் துடிக்கும் அதிதீவிர பக்தன் மேற்கொள்ளும் பிரபத்தி ஆர்த்தப் பிரபத்தி எனப்படும். இவ்விருள் தருமா ஞாலத்தில் ஒரு நொடிப் பொழுதும் இருக்கப் பொறுக்காமல், ''தினைத்துணையேனும் பொறேன் துயர் ஆக்கையின் திண்வலையே'' என்ருற்போல, வீடுபேறு அடையக் கொள்ளும் விதுவிதுப்பே, ஆர்த்தப் பிரபத்தி நெறியுணர்வுக்கு அடிப்படையாகின்றது. மரத்தில் காய் காய்த்து, அது பழமாகப் பரிணமிக்கின்றது. கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி நன்கு பழுக்கும் தன்மையை நாம் கண்டுள்ளோம். அந்தப் பழமானது மரத்தின் கிளையில் தங்கி நிற்கும் அளவு ஒன்றுண்டு. அந்தஅளவு கடந்தால் தானகவே மரத்தை விட்டு நழுவிக் கீழே விழுதல், பழுத்த பழங்களின் இயல்பாகும். இத்தன்மையில், இவ்வுலகில் தங்கியிருக்கும் அளவு கழிந்த ஓர் அடியவன் ஒரு கணமும் தரித்திருக்க முடியாமல், ''வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்'' என்றபடியும், ''சுளியார் சுமைபோடுதற்கு'' என்ற நிலையிலும், தானகவே விழுகிற விழுகைதான், ஆர்த்தப் பிரபத்தி எனும் அரும்பெறல் நெறியாகும். அது வீட்டின்பத்தினை எளிதில் அடைவிக்கும். இதனைப் பின்வரும் ஞானசாரப் பாடல் உணர்த்தும்.

ஊன வுடற்சிறைநீத்து, ஒண்கமலை கேள்வன்அடித்
தேன்நுகரும் ஆசைமிகு சிந்தையராய்—தானே
பழுத்தால் விழுங்கனிபோல், பற்றற்று வீழும்
விழுக்காடே, தான்அருளும் வீடு.

[ஊனவுடல்—புலால் மயமான உடம்பு. கமலை-திருமகள், மகாலட்சுமி. கமலைகேள்வன்-திருமகள்நாதன், திருமால்].

## 2. கோதில் அடியார் குணம் :

அடியார்கள், இறைவன் திருவருளையே நம்பியும் விரும்பியும் எதிர்பார்த்திருப்பர். அதனல் அவர்கள் ஒருவகையில் சாதகப் பறவையைப் போன்றவர்கள் ஆவர். சாதகப் பறவைகள், மழைநீர்த் துளிகளையே உணவாகக் கொண்டு, வானத்தில் உள்ள மேகத்தையே அண்ணந்து நோக்கி எதிர்பார்த்திருக்கும். அது

போலவே பக்தர்களும் ''களைவாய் துன்பம், களையாது ஒழிவாய், களைகண் மற்றிலேன்'' என்றும்; ''உனக்குப் பணிசெய்திருக்கும் தவம் உடையேன், இனிப்போய் ஒருவன் தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயை அழிவு கண்டாய்'' என்றும், இறைவனின் திருவருளையே எதிர் நோக்கியிருப்பர். அவர்களுக்கு இறைவனைப் பற்றிய நினைவு மறந்து பிரிந்து கிடத்தலே நரகத் துன்பமாகவும், இறைவனைப் பற்றியே நினைந்து தியானித்துக் கூடியிருத்தலே சுவர்க்க இன்பமாகவும் தோன்றும். இதுவே அடியார்களின் கோதிலாக் குணமாகும்.

நரகும் சுவர்க்கமும் நாண்மலராள் கோனைப்
பிரிவும் பிரியாமையுமாய்த்—துரிசற்றுச்
சாதகம்போல் நாதன் தனதருளே பார்த்திருத்தல்,
கோதில் அடியார் குணம்.

[நாண்மலராள்-செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள். கோன்-தலைவன், திருமால். சாதகம்-மழைத்துளிகளை உணவாகக் கொண்டு, மேகத்தை நோக்கியிருக்கும் ஒருவகைப் பறவை. ''தற்பாடிய தளியுணவிற் புள் தேம்பப் புயல்மாறி'' எனவரும் பட்டினப் பாலை வரிகளில், சாதகப் பறவை பற்றிய குறிப்பு வந்திருத்தல் காணலாம். துரிசு-குற்றம்.]

### 3. நீக்கமிலா அன்பர் நிலை :

திருமால் பக்தர்கள்பால் அன்பே நிரூபகமானவன். தன்னைப் பூசிப்பதற்காகப் பூப் பறித்துக் கொணரப் பொய்கைக்குச் சென்ற கஜேந்திரன் என்னும் யானை, தனது காலை ஒரு முதலை கவ்வி ஈர்த்த பொழுது, கையெடுத்துக் கூவிக் கதற, அதன் பொருட்டு அரைகுலையத் தலைகுலைய ஓடோடிச் சென்று, ஆழிதொட்டுக் காத்தருளிய பேரருளாளன், திருமால். அத் திருமாலின் இத்திருக்குணத்திலே மிகவும் ஈடுபட்டு, அடியவர்கள் நெஞ்சம் நீராய் உருகி நிற்பார்கள். நீரை விட்டுப் பிரிந்தால் மீனானது துடிதுடித்து உயிர் நீங்குமாறுபோல, ஒரு கண நேரமாயினும், இறையுணர்வின் நினைவு அற்றுப் போக நேர்ந்தால், நெஞ்சம் துடித்து நொந்து உயிர் விடுதல், அடியார்களின் அரும்பெறல் அன்பின் நிலையாகும். ''பெருநீர் அறச் சிறுமீன் துவண்டாங்கு நினைப்பிரிந்த வெருநீர்மையேனை விடுதிகண்டாய்'' எனவரும் திருமொழியும், இவ்வன்பின் நிலையினை விளக்கா நிற்கும்.

ஆனை யிடர்கடிந்த ஆழியங்கை அம்புயத்தாள்
கோனைவிடில், நீரிற் குதித்தெழுந்த-மீன்எனவே
ஆக்கை முடியும் படிபிறத்தல், அன்னவன்தாள்
நீக்கமிலா அன்பர் நிலை.

[ஆனை-கஜேந்திரன். ஆழி-சக்கரம். அம்புயம்-தாமரை. அம்புயத்தாள்-இலக்குமி. ஆக்கை-உடம்பு. முடியும்படி-முடிவு அடைந்துவிடும்படியான நிலைமை. பிறத்தல்-விளைதல், ஏற்படுதல்.]

### 4. வானத்தவர்க்கு அரும்பேறு :

உண்மையான பக்தர்கள், இறைவனுக்குரிய திருத்தொண்டு (பகவத் கைங்கர்யம்) தவிர, வேறு எதனையும் தம் நெஞ்சால் நினைக்க மாட்டார்கள். திருமாலுக்கு அடிமைத் தொழில் செய்வது ஒன்றுதான்! தமக்குரிய இயல்பும் கடமையுமாகும் என்று தெளிந்து துணிந்திருப்பர் அவர்கள். பகவத் கைங்கர்யம் செய்யப் பெற்றால், அதுவே பெறலரிய பெரும் பேறு (புருஷார்த்தம்); அதற்கு மேலானது ஒரு பேறும் இல்லை என்று அளவற்ற நம்பிக்கை கொண்டு, கடைப்பிடித்தொழுகும் பாகவதர்கள், வைகுண்டத்திலுள்ள நித்திய முக்தர்களுக்குக் கிடைத்தற்கரிய பெருவிருந்தினராகப் பிறங்குவர். அவர்களுக்குத் திருநாடு திண்ணம்.

மற்றொன்றை எண்ணாதே மாதவனுக்கு ஆட்செயலே
உற்றது இதுவென் றுளம்தெளிந்து-பெற்ற
பெரும்பேற்றின் மேலுளவோ? பேறென் றிருப்பர்
அரும்பேறு வானத் தவர்க்கு

[மற்று ஒன்று-இறைவனின் திருத்தொண்டு அல்லாத வேறு ஒரு செயல். மாதவன்-திருமால். ஆட்செய்தல்-கைங்கர்யம் புரிதலாகிய அடிமைத் தொழில் புரிதல். வானத்தவர்-வைகுண்டவாசிகளான நித்யமுக்தர்கள். ''செல்விருந்தோம்பிவரு விருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு'' என்றாற் போல்வது இஃது.]

### 5. என்ன குறை வேண்டும் இனி :

கண்ணபிரான், பகவத் கீதையையும், அதன் சாரமான சரம சுலோகத்தையும் உபதேசம் செய்து, அருச்சுனனை முன் காத்தருளினான். க்ஷேத்திரங்கள் பலவற்றிற்குச் சென்று வழிபடுதலும், புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதலும் ஆகிய முயற்சிகள், கண்ணபிரானின் கடைக்கண்ணோக்கம் பெறுவதற்கு முன்னம் ஏற்கும் அத்தனை. துவாரகாபுரி நாதனாகிய கண்ணபிரான் அடிமைச் செல்வத்தை நமக்கு அருளிச் செய்த பிறகு, இனி நமக்கு என்ன குறை உள்ளது? க்ஷேத்திரங்களுக்குச் செல்லவும், தீர்த்தங்கள் ஆடவும், தவம் புரியவும் வேண்டாமலே, நாம் எல்லா நலங்களையும் பெற்றுவிட்டோம்.

தீர்த்தமுயன் றாடுவதும், செய்தவங்கள் செய்தனவும்,
பார்த்தனைமுன் காத்தபிரான் பார்ப்பதன்முன்;—சீர்த்துவரை
மன்னன்அடி யோம்என்னும் வாழ்வுநமக் கீந்ததற்பின்,
என்னகுறை வேண்டும் இனி?

[தீர்த்தம்-புண்ணிய நதிகள். பார்த்தன்-அருச்சுனன். துவரை மன்னன்-துவாரகை நகர்க்கு அரசனாகிய கண்ணபிரான்.]

### 6. கலங்கிடுமோ முந்நீர்க்கடல் :

உண்மையான இறைவன் அடியார்கள், எவ்வளவு பெரிய பதவியையும் செல்வத்தையும் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்கள். பிரம்ம அண்டச் செல்வம் என்பது, நம்போன்ற உலக மக்களுக்கு மிகப் பெரியதாகத் தோன்றலாம். ஆனால் அடியவர்களோ, இவற்றையெல்லாம் மிகவும் அற்பமாகவே கருதிப் புறக்கணித்தொழிப்பார்கள். பிரம்மாண்டச் செல்வமும், அடியவர்களின் உள்ளத்தை ஒருபோதும் ஆசை தோற்றிக் கலக்கவல்லதன்று. மிகப் பெரிய எல்லையற்ற கடலை, ஓர் அற்பமான எளிய மீன் எவ்வளவுதான் மேலும் கீழும் எழுந்து விழுந்து முயன்றாலும், கலக்குதல் இயலுமோ? ஒருபோதும் இயலாது. தத்துவ ஞானம் நிறைந்த

அடியவர்களின் உள்ளமாகிய பெருங்கடலை, பிரம்மாண்டச் செல்வம் ஆகிய அற்பமான சிறிய மீன் எங்ஙனம் கலக்குதல் இயலும்?

புண்டரிகை கேள்வன் அடியார், அப் பூமிசையோன்
அண்டம் ஒருபொருளா ஆதரியார்;—மண்டி
மலங்கஒரு மீன்புரண்ட மாத்திரத்தால், ஆர்த்துக்
கலங்கிடுமோ முந்நீர்க் கடல்?

[புண்டரிகம்-தாமரை. புண்டரிகை-தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் திருமகள். கேள்வன்-கணவன். பூமிசையோன்-பிரமன். ஆதரியார்-மதிக்கமாட்டார். முந்நீர்-ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்னும் மூன்று நீர்களையுடைய.]

## 7. நரகன்றே இந்திரன்தன் நாடு ?

பெருமாள் தம் வலக்கரத்தில் சுதர்சனம் என்னும் சக்கரத்தையும், இடக்கையில் பாஞ்ச சந்யம் என்னும் சங்கையும், ஏந்தியிருக்கின்றார். அஃது, அழகராகிய பெருமாளுக்கு மேலும் அழகை விளைவிக்கின்றது. அவ்வழகில் ஈடு பட்டு, அச்சுந்தரன்பால் தம் சிந்தையைப் பறி கொடுத்துப் பக்தி வயப்பட்டு அடிமைத் தொழில் பூண்ட பாகவதர்கள், அவ்வடிமைத் திறத்திற்கு வேறான எதிலும் ஆதரம் கொள்ள மாட்டார்கள். மீட்சியற்றதாய், ஒப்பற்றதாய் அருமையுடையதாய் விளங்கும் திருநாட்டிலே பேரின்பம் அநுபவிக்கக் குதூகலம் உடையவர்களுக்கு, சுவர்க்கலோக இன்பமும் நரகலோகத் துன்பமாகவே தோன்றும் அன்றோ?

தோளார், சுடர்த்திகிரி சங்குடைய சுந்தரனுக்கு
ஆளானார், மற்றொன்றில் அன்புசெய்யார்:-மீளாப்
பொருவரிய விண்ணாட்டிற் போகம் நுகர்வார்க்கு,
நரகன்றே இந்திரன்தன் நாடு?

[திகிரி-சக்கரம். சுந்தரன்-அழகிய திருமேனியையுடைய பெருமாள். பொரு அரிய-ஒப்பற்ற. விண்ணாடு-வைகுந்த உலகம், திருநாடு.]

## 8. எங்ஙனே செயினும் ஏற்கும் உகந்து :

திருமால், காத்தற் கடவுள். பிரளயப் பெருவெள்ளத்தில் அழிந்துவிடாமல், அனைத்து உலகங்களையும் உயிர்களையும் தன் திருவயிற்றில் வைத்துக் காத்தருளினன் அப்பெருமான். நீல மேக வண்ணனாகிய அப்பெருமானின் திருவடிகளைத் தவிர, மற்றொன்றையும் விரும்பாத இயல்புடையவர்கள், அவனது பக்தர்கள். அவர்கள் தாம் வரித்துக் கொண்ட தலைவனாகிய திருமாலுக்கு அடிமைத் தொழில் செய்யுங்கால் முறைபிறழ்ந்தாவது (அக்கிரமமாகவாவது), அன்றி முறைதழுவியாவது(சக்கிரமமாகவாவது) எதனை எங்ஙனம் செய்தாலும், அதனை அங்ஙனமே திருவுள்ளத்தில் உகந்து, ஏற்றுக் கொண்டருள்வன் திருமால். பக்தர்கள் காலால் எறியுமவற்றைக்கூட, இறைவன் தன்தலையால் ஏற்று மகிழ்கின்றான். இஃது இறைவனது நிறையருளின் நீர்மையாகும்.

முற்றப் புவனமெலாம் உண்ட முகில்வண்ணன்
கற்றைத் துழாய்சேர் கழல்அன்றி—மற்றொன்றை
இச்சியா அன்பர், தனக்கு எங்ஙனே செய்திடினும்,
உச்சியால் ஏற்கும் உகந்து

[முற்ற-முழுதாக. புவனம்-உலகம். முகில்-மேகம். துழாய்-துளசிமாலை. இச்சியா-விரும்பாத. உச்சியால்-தலையினால். உகந்து-விரும்பி. ஏற்கும்-ஏற்றருள்வான்.]

## 9. விண்ணாட்டிற் சால விரும்பும் :

திருமால், தனது குற்றமற்ற கருணையினால் எல்லா உலகங்களையும் உயிர்களையும் காத்தருள்பவன். நறுமணம் கமழும் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளுக்குக் கொழுநனாகத் திகழ்பவன் அவன். அத்தகைய திருமால், தன்னைத் தவிர்த்து வேறு எதனையும் எண்ணாத உண்மையடியவர்களின் உள்ளத்தில் தங்கி உறைவதை, திருநாடு என்னும் வைகுண்டவுலகில் வசிப்பதையும் விட, மிகவும் சிறந்ததாகக் கொண்டு மகிழ்வான்.

ஆசில் அருளால் அனைத்துலகும் காத்தளிக்கும்
வாச மலராள் மணவாளன்,-தேசுபொலி
விண்ணாட்டிற் சால விரும்புமே, வேறொன்றை
எண்ணாதார் நெஞ்சத்து இருப்பு.

[ஆசு இல் அருள்-குற்றம் இல்லாத அருள். அருளுக்குக் குற்றமாவது, ஏதேனும் ஒரு காரணம் பற்றி நிகழ்தல். எனவே குற்றம் இல்லாத அருளாவது, எத்தகைய காரணமும் இன்றி இயல்பாக நிகழும் அருள் (நிர்ஹேதுக கிருபை). மலராள்-திருமகள். தேசுபொலி-ஒளி விளங்குகின்ற. விண்ணாட்டில்-திருநாடு ஆகிய வைகுண்டத்தை விட. இருப்பு-இருத்தல்.]

## 10. முள்மேல் இருப்பு :

சிவபிரானை நோக்கித் தவம் புரிந்து, அவன்பால் முக்கோடி வாழ்நாளும் வாட்படையும் பெற்று, அந்தச் செருக்கினால் அல்லும் பகலும் அநவரதமும் அனைத்துயிர்களையும் வருத்தி நலிந்துகொண்டிருந்தான் இராவணன். அவ்விராவணனது பத்துத் தலைகளையும், இருபது தோள்களையும் இராமபிரானாய் வெட்டித்தள்ளி அழித்து ஒழித்த திருமாலின் திருவடிகளில், பொருந்திய உள்ளத்தராய் இருந்து வழிபட்டு மகிழ்பவர் அடியவர்கள்! அங்ஙனம் அத்திருவடிகளிற் பொருந்தாத உள்ளத்தினராய் இருப்பவர், கொடியவர்கள். அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருப்பவன், இறைவன். இறைவனுக்குரிய குணநலங்களில், எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குதல் ஆகிய வியாபகத்துவம் என்பதும் ஒன்று. எனவே, அவ்வியாபகத் தன்மை காரணமாக, அடியவர்களின் உள்ளத்தில் மட்டும் அன்றிக் கொடியவர்களின் உள்ளத்திலும்கூட,இறைவன் பொருந்தியிருப்பான். எனினும், அங்கு அவன் முள்ளின்மேல் இருப்பது போலவே, வேண்டா வெறுப்பாய் இருப்பான்.

நாளும் உலகை நலிகின்ற வாள்அரக்கன்
தோளும் முடியும் துணித்தவன்றன்—தாளில்
பொருந்தாதார் உள்ளத்தில், பூமடந்தை கேள்வன்
இருந்தாலும், முள்மேல் இருப்பு.

[நாளும்-நாள்தோறும், இடைவிடாமல். நலிகின்ற-வருத்திக் கொடுமை புரிகின்ற. வாள் அரக்கன்-இராவணன். தோளும் முடியும் துணித்தவன்-இராமபிரான், திருமால். பூமடந்தை-திருமகள், இலக்குமி. பொருந்தாதார்-பொருந்துதல் அற்ற பாவிகள்.]

(தொடரும்)

—ஆசிரியர்.

# அறநிலையத்துறையின் அரும்பணிகள்

திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.
**ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600 034.**

**முன்னுரை :**

தமிழ் நாட்டில் கோயில்கள் ஏராளமாக உள்ளன. தமிழ் நாட்டிலுள்ள கோயில்கள், காலத்தால் பழமை மிக்கவை ; வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. கட்டிடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும், சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்பவை. ஆழ்வார்களும், நாயன்மார்களும் இவற்றைப் புகழ்ந்து பாடியுள்ளனர். சுமார் 2,000 ஆண்டுகளுக்கும் முன்பிருந்தே, தமிழ் நாட்டில் திருக்கோயில்கள் சிறப்புடன் விளங்கி வருகின்றன. முற்காலத்தில், மரத்தாலும் மண்ணாலுமே கோயில்கள் அமைந்திருந்தன. பிற்காலத்தில் பல்லவர், சோழர், பாண்டியர், விஜய நகரப் பேரரசர்கள், நாயக்க மன்னர்கள் ஆகியோர், இக்கோயில்களைக் கற்கோயில்களாக மாற்றி, அவைகளை மிகவும் விரிவாகக் கட்டிச் சிறப்பாகப் போற்றியுள்ளனர்.

**கோயில்கள் :**

இக்கோயில்களையும், இவற்றைச் சார்ந்த பல்வேறு அறக்கட்டளைகளையும், தமிழ் நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறை, நன்கு பராமரித்துப் பாதுகாத்து வருகின்றது. 20—25 ஆண்டுகளுக்கு முன்பு, சுமார் 9,000 கோயில்களே அறநிலையத் துறை ஆட்சியின் கீழ் இருந்து வந்தன. ஆனல் தற்போது 21,108 கோயில்கள் உள்ளன. இவற்றில் சில ஜைன சமயக் கோயில்களும் சேர்ந்துள்ளன. இவற்றின் மொத்த வருவாய்த் தொகை ஆண்டு ஒன்றுக்கு சுமார் 12 கோடியாக மதிப்பிடப் பெற்றுள்ளது.

**பணிகள் :**

அறநிலையத் துறையின் பணிகளினல், சமீப காலங்களில் நூற்றுக்கணக்கான கோயில்கள், பழுது பார்க்கப் பெற்றுள்ளன. புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பல சிறந்த திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. நூற்றுக் கணக்கான கோயில்களில், கும்பாபிஷேக விழாக்கள் சிறப்புற நடந்திருக்கின்றன.

கோயில்களில் சுத்தமும், ஒழுங்கு முறையும் பராமரிக்கப்படுகின்றன. இருளடைந்து கிடந்த மண்டபங்களை ஒளி விளக்குகள் அலங்கரிக்கின்றன. வௌவால்களின் தொல்லை அகற்றப்பட்டுள்ளது. கோபுரத்தின் மீதும், திருமதில்களின் மீதும் படர்ந்திருக்கும் செடி கொடிகள், அவ்வப்போது களைந்து எறியப்படுகின்றன. திருக்குளங்கள் தூர்வாரியும் பாசி நீக்கியும், சுத்தமாக வைக்கப்பட்டு வருகின்றன. நந்த வனங்கள் வைத்து, பூசைக்குப் பயன்படும் பூச்செடிகளும், வில்வ மரங்களும், துளசிச் செடிகளும் வளர்க்க ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

அவ்வவ் வட்டாரங்களில், ஆண்டுதோறும், சுத்தமாக உள்ள கோயில்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு வெள்ளிச் சுழல் கோப்பைப் பரிசு அளிக்கப்படுகின்றது.

பக்தர்களுக்கும் யாத்ரீகர்களுக்கும்கோயில்களில் பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பூஜைக்கு வேண்டிய திருநீறு, குங்குமம், சந்தனம், பன்னீர், பஞ்சாமிர்தம் முதலிய பொருள்கள், தரமுள்ளதாகவும், நியாய விலைக்கும் கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. யாத்ரீகர்கள் தங்குவதற்காகத் திருச்செந்தூர், பழநி, திருக்குற்றாலம், திருத்தணி, சுவாமிமலை, வைத்தீசுவரன் கோயில், சாத்தூர், பரமக்குடி, திருவுத்தரகோசமங்கை, காளையார்கோயில், திருவாடானை, இராமேசுவரம், குமாரவயலூர் முதலிய தலங்களில் ஓய்வு விடுதிகள் ( Rest-Houses ) கட்டப்பெற்றிருக்கின்றன.

**சித்த மருத்துவம் :**

பொது மக்களுக்கும் யாத்ரீகர்களுக்கும் பயன்படும் பொருட்டும், தமிழ் நாட்டிற்கே சிறப்பான சித்த மருத்துவத்தை வளர்க்கும் பொருட்டும், வடபழனி, மணவாளநல்லூர், திருத்தணி, கள்ளக்குறிச்சி, சங்கரன்கோயில், குமாரவயலூர், திருப்புகலூர், பழனி, இராமேசுவரம், இருக்கன்குடி, வீரவநல்லூர், பண்பொழி, வைத்தீசுவரன்கோயில், பன்னரி, திருச்செந்தூர், மருதமலை, சிக்கல், ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல், மதுரை, திருநாராயணபுரம், கருவூர், செம்பியன்மாதேவி, கொடுமுடி ஆகிய 26 இடங்களில் சித்த மருத்துவ இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**திக்கற்றோர் இல்லங்கள் :**

திக்கற்ற ஏழைச் சிறுவர்களின் நன்மை கருதி, அறநிலையத் துறையின் சார்பில், திருத்தணி, சிக்கல், நாச்சியார்கோயில், வைத்தீச்வரன்கோயில், கல்லுப்பட்டி, பழநி, திருநெல்வேலி, திருச்செந்தூர், மதுரை, பண்பொழி, வாழைத்தோட்டத்து ஐயன்பாளையம் ஆகிய இடங்களில், திக்கற்றோர் இல்லம் (Orphanages) நடந்து வருகின்றது. நூற்றுக்கணக்கான கோயில்களில், பள்ளிக்கூடக் குழந்தைகளுக்குக் காலை மாலை வேளைகளில், சுவாமிக்கு அபிஷேகம் செய்த பால் விநியோகம், மற்றும் மதிய உணவு அளிக்கப்படுகின்றது.

மேலும், அறநிலையத் துறையின் சார்பில், எல்லா மாவட்டங்களிலுமாகச் சேர்ந்து, 43 கருணை இல்லங்கள் உள்ளன. இவற்றில் சிறுவர் கருணையில்லம் 39, சிறுமியர் கருணையில்லம் 14. இவற்றில் தற்போது 1,792 சிறுவர்களும், 748

சிறுமியர்களுமாக, மொத்தம் 2,540 பேர் உணவு, உடை, உறைவிடம் ஆகிய வசதிகளுடன் பாதுகாக்கப்படுகின்றனர்.

சமயபுரம் மாரியம்மன் கோயில், பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயில் ஆகிய இரண்டிலும் ''செவிடு, ஊமைச் சிறுவர் பள்ளிகளும்'' நடத்தப்படுகின்றன.

திருநாராயணபுரம், வேதநாராயணப் பெருமாள் கோயில், காரமடை, அரங்கநாத சுவாமி கோயில், இளம்பிள்ளை மாரியம்மன் கோயில், குமார வயலூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் ஆகியவற்றில், குழந்தை நலக் காப்பகங்கள் (Creche) நல்ல முறையில் நடந்து வருகின்றன.

**கல்வி நிலையங்கள் :**

கல்வி வளர்ச்சிக்காகவும், அறநிலையத் துறை பெரும் தொண்டு ஆற்றி வருகின்றது. பழநி, திருக்குற்றாலம், பூம்புகார், கன்னியாகுமரி, இராமேசுவரம் ஆகிய இடங்களில் 7 (ஏழு) கல்லூரிகளும், பண்பொழி, திருநெல்வேலி, திருவெண்காடு, மதுரை, இராமேசுவரம், திருமலை, கள்ளக்குறிச்சி, மருதமலை, வாழைத் தோட்டத்து ஐயன்பாளையம் ஆகிய இடங்களில் 8 உயர்நிலைப் பள்ளிகளும் நடத்தப்படுகின்றன. இவற்றுள் பெண்களுக்காகவே 7 உயர்நிலைப் பள்ளிகளும், ஒரு கலைக்கல்லூரியும் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது.

சிறு வயதிலேயே குழந்தைகளுக்குப் பக்தியுணர்வை ஊட்டும் நோக்கத்துடன், தேவார திவ்யப் பிரபந்தப் பாடல்கள், கோயில்களின் ஆதரவில் கற்பிக்கப்படுகின்றன. திருவெண்காடு, திருப்புகலூர், திருக்கடவூர், பழநி, கோயம்புத்தூர், திருவாரூர், திருக்களர், திருமயிலை ஆகிய கோயில்களில் தேவார பாடசாலைகளும், கும்பகோணம் சாரங்கபாணி கோயில், விளநகர் வரதராசப் பெருமாள் கோயில், திருவல்லிக்கேணி பார்த்த சாரதிப் பெருமாள் கோயில் ஆகியவற்றில் திவ்யப் பிரபந்தப் பாடசாலைகளும் நடைபெறுகின்றன. இவ்வாறே திருமயிலை, சிக்கல், காஞ்சிபுரம், தருமபுரம், அல்லூர் ஆகிய இடங்களில் வேத சிவாகமப் பாடசாலைகள் நடந்து வருகின்றன.

பொது மக்களுக்குப் பயன்படும் பொருட்டு, பல கோயில்களில், எல்லா நவீன வசதிகளுடனும் கூடிய, திருமண மண்டபங்கள் கட்டி, மிகவும் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படுகின்றன.

**''திருக்கோயில்'' இதழ் :**

சமயக் கருத்துக்களைப் பொது மக்களிடையே பரப்பத் 'திருக்கோயில்' என்னும் திங்கள் இதழ் ஒன்றும், 1958-ஆம் ஆண்டு முதல், கடந்த 18 ஆண்டுகளாக நல்ல முறையில் வெளியிடப்பட்டு வருகின்றது. இதில் சமயம், தத்துவம், சரித்திரம், இலக்கியம், கல்வெட்டு முதலிய பல துறைகளில், கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. தலை சிறந்த பேரறிஞர்கள் பலர், அரிய பயன் மிக்க கட்டுரைகளை வழங்கி வருகின்றனர்.

**கிராம தேவதைக் கோயில்கள் :**

நமது நாடு, ஏராளமான கிராமங்களைக் கொண்டது. கிராமங்களில் மாரியம்மன், துலுக்காணத்தம்மன், காளியம்மன், ஐயனார், பிடாரியம்மன் முதலிய தேவதைகளுக்குக் கோயில்கள் உள்ளன. கிராம மக்கள் இவற்றில் மிக்க பக்தியும் சிரத்தையும் கொண்டு வழிபடுகின்றனர். ஆதலின், கிராம தேவதைக் கோயில்களின் வளர்ச்சிக்கும், வழிபாட்டுக்கும், அறநிலையத் துறை பல வகைகளில் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்றது. இதன் மூலம் கிராம மக்களின் சமுதாய வாழ்வு, வளம்பெறத் துணை புரிகின்றது.

கிராமங்களில் உள்ள கோயில்களில் போதிய பொருள் வசதியில்லாமல் இருக்கும்—சுவாமிக்கு நல்ல வஸ்திரங்கள் இராது. தீபம் போடவோ, ஒரு வேளையேனும் பூசை செய்யவோ, வசதியில்லாமல் இருக்கும். பூசைப் பாத்திரங்கள் முதலியன சரி வர இராது. இத்தகைய சிறு சிறு கோயில்களுக்கெல்லாம், வசதியுள்ள பெரிய கோயில்களில் இருந்து பல வகை உதவிகள் செய்யப்படுகின்றன. இத்திட்டம் மேலும் விரிவாகச் செயற்படுத்தப்பட உள்ளது.

**பாதுகாப்பு, மீட்புப் பணிகள் :**

பொதுவாக, எல்லாக் கோயில்களையும், பழுது பார்க்கவும், புதிய திருப்பணிகள் செய்யவும், அரசு கணிசமான நிதியுதவி வழங்கி வருகின்றது. சிலைத் திருட்டைத் தடுப்பதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு இல்லாத கோயிலின் சிலைகள், அருகில் பாதுகாப்புள்ள பெரிய கோயில்களில், கண்காட்சிச்சாலைகள் அமைத்துப் பாதுகாக்கப்படுகின்றன.

மேலும் பாதுகாப்பு இல்லாத சுமார் 1,000 கோயில்களுக்கு, ஒரு கோயிலுக்கு ரூ. 5,000 வீதம் செலவிட்டு, இரும்புக் கம்பிகள் கதவுகள் போட ஏற்பாடுகள் செய்யப் பெறுகின்றன.

பிறர் ஆக்கிரமிப்பில் உள்ள, கோயில் நிலங்களையும், சொத்துக்களையும் கண்டுபிடித்து, மீட்பதற்கு நல்ல பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கோயில்களில் பூசைகளும், விழாக்களும், சாத்திர சம்பிரதாய முறைகளின்படி நன்கு நடைபெற, அறநிலையத் துறை பெரும் பணி ஆற்றுகின்றது. சமயச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் சிறப்புற நடைபெறுகின்றன. திருமுறையும், திவ்யப் பிரபந்தமும் பாட, ஓதுவார்கள் பல கோயில்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். திருப்பணி வேலைகளின் மூலம், சிற்பக் கலை புத்துயிர் பெற்றுச் செழித்தோங்கி வருகின்றது. சிற்பக் கலைஞர் போன்ற பணியாளர், இதன் மூலம் வேலை வாய்ப்புகள் பெற்றுப் பயன் அடைகின்றனர்.

**முடிவுரை :**

இவ்வாறு அறநிலையத் துறை ஆற்றிவரும் பணிகள் பலப்பல. இந்த அரிய சிறந்த பணிகளையெல்லாம், மேலும் மிக நல்ல முறையில் ஆற்றுவதற்குப், பொது மக்களின் அன்பும், ஆதரவும், ஒத்துழைப்பும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

—(சென்னை வானொலியில், 6-6-76 மாலை, ஆணையர் அவர்கள் நிகழ்த்திய வானொலிப் பேச்சு.)

நன்றி : வானொலி நிலையம், சென்னை.

# "கண்டறியாதன கண்டேன்"

### கவியோகி சுத்தானந்த பாரதியார்

அப்பர் பாடினுர்—''கண்டறியாதன கண்டேன்'' என்று. இந்தியாவிலே கண்டறியாத காட்சிகளை ஆத்திரேலியாவிலும், அதைச் சுற்றிய ஆயிரக்கணக்கான தீவுகளிலும் கண்டேன். எனது கொள்கை சமயோகம்—சாதி சமய நாடு நிறவேறுபாடுகள் இல்லாமல் மனித சமுதாயம் உழைத்துப் பாத்தூண் மருவி, அமைதியாக வாழ வேண்டும் என்பது. நம்மையெல்லாம் சமப்படுத்துவது எது? உள்ளான்மாவே. உள்ளான்மாதான் சிவசிவ என்று இதயத்தில் நடமிடுகிறது. அதுவே உள்ள பொருள். அதுவே நாடிகளில் டக்டக் என்று போது காட்டிபோல நடக்கிறது. அதை உணர்ந்து மனமொன்றி வாழ்ந்தால் உலகெல்லாம் ஒருகுலமாகலாம்.

''உள்ளொன்றி ஞலே உலகொன்றும்; ஆதலினல்
உள்ளத்தில் ஒற்றுமையை ஊன்று''

### ஆன்மநேய ஒருமை

இந்த உள்ளொற்றுமையை ஆன்மநேய ஒருமை என்ருர் வள்ளலார். சாதி சமய கட்சிப் பிணக்குகளால் அல்லற்படும் நமது நாட்டை யோகவுணர்ச்சியால் ஒன்று சேர்த்தால் அரிய பெரிய காரியங்களை இயற்றலாம். இதை நான் அண்மையில் ஆத்திரேலியாவிலே கண்டேன்.

### ஆத்திரேலியப் பயணம்

என் ஆருவது உலகயாத்திரை மார்ச்சுமாதம் தொடங்கியது. முதலில் ஆஸ்திரேலியா சென்றேன். சும்மா செல்ல முடியுமா? எல்லா நாடுகளுக்கும் செல்லப் பாஸ்போர்ட்டு உள்ளது. விஸா வேண்டும். அழைப்பு வேண்டும். அழையாதவிருந்து நுழையாது!

எனக்கு ஆத்திரேலியாவில் பல நண்பர்கள் உண்டு. அவருள் விஜயதேவர் ஒருவர். அவர் யோகக் கல்லூரி நடத்துகிருர். மூன்ருண்டுகளுக்கு முன்பு இங்கே வந்து என்னை அழைத்தார். எனது யோக நூல்களை அவர் படித்தவர். அவர் யோகப்ரசாரக் (Yoya Pracharak) என்ற மாத இதழ், ஆங்கிலத்தில் நடத்துகிருர். அதற்கு நான் தொடர்ந்து கட்டுரைகள் எழுதுகிறேன். அவர் ஜில் (Jill) என்ற ஆத்திரேலிய மாதை மணம்புரிந்து, மூன்று மக்களுக்குத் தந்தையாயிருக்கிருர். ஆண் குழந்தை சங்கர், அறிவாளி. மெல்போர்னில் அவர் வசதியான வீடுகட்டிக்கொண்டு குடும்பத்துடன் வாழ்வாங்கு வாழுகிருர். அவர் தந்தி வந்தது. "தாங்கள் இங்கே வந்து வேதாகம விஞ்ஞான யோகப் பயிற்சி தர வேண்டும். தங்களுக்கு வேண்டிய வசதிகளைச்செய்வோம்-வருக'' மிக்க மகிழ்ச்சி. மற்றொரு தந்தி ''ஹெலன்வேல் நிறுவனம் தங்களை அழைக்கிறது. ஆத்மிகப் பயிற்சி தர வேண்டும்—வருக''..மிக்க மகிழ்ச்சி வருகிறேன் என்று-கேபிள் கொடுத்தேன். உடனே தாமஸ்குக் மூலம் விமானச் சீட்டுக்குப் பணம் வந்துவிட்டது (ரூ. 11,000). சீட்டு வாங்கி, எனது பாஸ்போர்ட் மனுவுடனும் அழைப்புத் தந்தியுடனும் டில்லிக்கு அனுப்ப வேண்டும். அனுப்பும்போது தந்தி போதாது விரிவான கடிதம் அங்கிருந்து வரவேண்டும் என்றனர். உடனே கேபிள் இங்கிருந்து பறந்தது. அங்கிருந்து ஹெலன்வேல் நிறுவனச் செயலர் கென்னெத்இங்பிரிட்ஸ் ஆர்வமாக அழைப்புக் கடிதம் எழுதினுர். ''உண்மையான யோகக்கலையை எங்களுக்கு விளக்க வருக, வருக! எனப் பத்து அறிஞர் கேபிள் அனுப்பினர். எல்லாம் ஒரு ஆள் மூலம் டில்லியில் ஆத்திரேலிய மேலாளிடம் (High Commissioner) சென்றேன். உடல் நல அத்தாட்சி, காலரா, அம்மைத்தடுப்பூசி போடல் எல்லாம் முறைப்படி முடிந்தன. தாமஸ்குக் கம்பெனி ரங்கராவ் செய்த உதவியால் எல்லாம் முறையாக நடந்தது. ஜான் ஸ்மித்து மகிழ்ச்சியுடன் விஸா தந்தார். மார்ச்சு மாதம் 25-ஆம் தேதி 12 மணிக்கு மலாயா விமானத்தில் ஏறி மாலை 5 மணிக்குக் கோலாலம்பூர் சேர்ந்தேன்.

### கோலாலம்பூர்

நான் வருவதை அறிந்து நண்பர்கூடி வரவேற்றனர். ஆத்திரேலியாவிலிருந்து திரும்பும் போது இங்கே தங்கவேண்டும் என்று நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டனர். கோலநகர் விமான நிலையத்திலிருந்து குவாண்டாஸில் நான் இரவெல்லாம் பயணம்செய்து காலை மெல்போர்ன் சேரவேண்டும்.

### ஓகோ, நீரா!

மாலை ஆறு முப்பதுக்கு குவாண்டாசில் ஏறி வசதியாக அமர்ந்தேன். நாளிதழ்கள் தரப்பட்டன. பிரித்தேன். என் வருகையை ஆங்கில இதழ்கள் குறித்திருந்தன. அதைப் பார்த்த சில ஐரோப்பியர் ''ஓகோ, நீரா நீரா'' என்று சூழ்ந்தனர். இதற்குள் சிங்கப்பூர் வந்துவிட்டது. நண்பர்கள் அழைத்தனர். குவாண்டாஸ் அலுவலர் ''என்ன வேண்டும்?'' என்று அடிக்கடி கேட்டனர். ''உங்கள் நட்புரிமையே வேண்டும்''

என்றேன். சிங்கப்பூர் அன்பர் கனிகள் அளித்த னர். குவாண்டாசில் எல்லாரும் ஐரோப்பியர். புலாலுணவே அவர்களுக்குத் தரப்பட்டன. என்னிடம் உணவுத் தட்டைக் கொணர்ந்த மாது..திடுக்கிட்டாள். ''நீர் சுவாமி, காப்பி, டீ தருவோம்'' என்றாள். காப்பி டீ வேண்டாம். இதோ நண்பர் கனிகளே போதும் என்றேன். சைவ உணவு வேண்டுமானால் முன்பே விண்ணப் பம் செய்தல் வேண்டும். அல்லது பல்லுக்கு மெல்ல முடியாத காரட்டு தான் கிடைக்கும். ஒரு பிரெஞ்சுமாது (அவளுக்கு ஆங்கிலம் தெரி யாது) ''உங்கள் தேவை என்ன-தருகிறேன்'' என்று பிரெஞ்சிலே கேட்டாள். நான் அழ கான பிரெஞ்சு பேசினேன். மிக்க மகிழ்ச்சி யுடன் ''எனக்கும் ஊனுணவு பிடிக்கவில்லை; என் சூடாவில் (Thermos Flask) பால் உள்ளது. நல்ல பாரிஸ் ரொட்டியுள்ளது. முந்திரிப் பருப்பும், பிஸ்தாவும், பேரீச்சம் பழமும் உள்ளன'' என்று ஒரு தட்டில் வைத் துத் தந்தாள். அவள் மகளும், மகனும் என் னுடன் சிறிது உண்டனர். நான் இயற்கை யான கனிகடலை உணவைப் பற்றிப் பேசத் தொடங்கினேன். என் பக்கம் ஆறுபேர் சேர்ந் தனர். கண்டறியாத அன்பைக் கண்டேன். ரூ ரூ ரூ...சிங்கப்பூரினின்று விமானம் விண் ணில் 8,000 அடி உந்திச் சென்றது. இதற்குள் இரவு எட்டுமணியானது.

ஆலிவர் டுவிஸ்டு (Oliver Twist of Charles Dickens) என்ற திரைப்படம் ஒடியது வண்ணப்படம் உள்ளத்தை அள்ளியது. இனிய ஐரோப்பிய இசை விருந்து நடந்தது. எல்லா ரும் பத்தரை மணிக்கு ஒய்வு கொண்டனர்.

### தியான இரவு

நான் குளியலுக்குச் சென்று உடம்பை நன்றாகக் கழுவித் துடைத்துக் கொண்டு, பல் விளக்கி வந்து நிட்டையில் அமர்ந்தேன். ''பாரீர் தியானம்'' என்று அருகிருந்தவர் வியந் தார். சிலர் என் முகத்தைப் பார்த்துச் சென்ற னர். சிலர் தலையைத் தொட்டுப் பார்த்தனர். சிலர் அவரவர் இடத்திலேயே நிமிர்ந்து அமர்ந்து உள்முகமாயினர். ...அமைதிஅமைதி. விமானத்தின் சரசரப்புத் தவிர வேறு சத்த மில்லை.

### காலை கீதை

காலை ஐந்துமணி விமான ஆள், ஒரு பல் துலக்கி (பிரஷ்) தந்தாள். இது ஜப்பானியர் பழக்கம். பல் தேய்த்ததும் குச்சியை எறிந்து விடவேண்டும். நான் எழுந்து பல்விளக்கி முகம் கழுவி, உடம்பு சுத்தம் செய்து வந்து கீதைபடித்தேன். பிரெஞ்சுக்காரர் தாமும் கீதைகேட்க வேண்டும் என்றார். உன்னைக் கொண்டே உன்னை உயர்த்து (உத்தரேத் ஆத்ம னாத்மானம்) என்ற சுலோகத்தைப் படித்து விளக்கினேன். ''நீயே உனக்கு நண்பனும் பகைவனும் ஆவாய்'' என்ற வரிகளை விளக்கி னேன். ''ஆமாம். Self help is the best help (தானே தனக்கு உதவி) என்றனர் சிலர். எங்கள் சமயம் ''நாமார்க்கும் குடியல்லோம்— கோமாற்கே நாம் என்றும் மீளா ஆள்- இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை'' என்பது. அது மக்களுக்கு ஆன்மப் பொதுவுரிமை அளிப் பது'' என்றேன். உரிமைபற்றிப் பேச்சு நடந் தது.

''Liberty is not to do as you like
It is to do as you ought to do"

''உரிமை என்பது மனம்போனபடி நடப்ப தன்று; உரிமை என்பது உனக்கு உரிய கடமை காப்பதே'' என்பதை அனைவரும் ஒப்பினர்.

காலை உணவு உண்ணும்போது பாலித் தீவை (Bali) விமானம் தாண்டியது. எனக்கு இனிய கனிச்சாறு அளித்தனர். அதுவே காலையுணவு. எட்டுமணியளவும் நான் உட் குவிந்து ஜபதபங்களைச் செய்து கொண்டிருந் தேன். சுற்றியிருந்த பயணிகள் மௌனமாகச் சத்தமில்லாமல் இருந்தனர். சிலர் கண்ணை மூடி உள்முகமாயினர்-இதுவே யோகம்-மனம் உள்ளத்தில் உருகுதல் என்றேன்.

### சிட்னியில்

எட்டுமணி-சிட்னி வந்துவிட்டது. சிட்னி விமான நிலையம் லண்டன்போன்று மிக அழ கானது. படிகளில் இறங்கத் தேவையில்லை. விமானத்திலிருந்து அப்படியே நடந்து வழு- வழு-பள-பள சலவைக்கூடத்திற் புகுந்து, அற் புதமான சலவைக் கூடத்தில் உலாவலாம். அங்கே உலகின் அரிய கவின்கலைப் பொருள்கள், அறுசுவையுண்டிகள், ஆடைகள், பயனுள்ள செய்பொருள்கள்-நல்ல நல்ல நூல்கள் எல் லாம் காணலாம். நான் ஆத்திரேலியா பற்றிய ஒரு நூலை வாங்கிப் படித்துக் கொண்டிருந் தேன். விமானம் புறப்பட ஒருமணி நேரம் இருந்தது. இதற்குள் சிட்னி நண்பர் சிலர் வந்து, என்னைப் பார்த்துப் பூச் செண்டளித்த னர். பல பயணிகள் ஷாம்பைன் வாங்கி, பீர் அருந்தினர். எனக்கும் ஒரு கோப்பை நீட்டி னர். ''நான் பழச்சாறே அருந்துவேன்'' என் றேன். உடனே ஓர் அமெரிக்கமாது என்னை அருகே உள்ள சாற்றுப் பேழையில் 20 செண்டு போடத்தந்தாள். போட்டேன். சுர்ர்ர் என் றது. ஒரு காகிதக் சோப்பையில் இனிய ஆரஞ்சுச் சாறு வந்து என்கையில் அமர்ந்தது. வியப்பு! மகிழ்ச்சியுடன் அருந்திப் பாடினேன்.

This Orange Juice
How it comes from within!
Even like a verse
That comes from Grace Divine

இந்தப் பொறியிலிருந்து ஆரஞ்சுச்சாறு எப்படி வருகிறது. ஆம் கடவுள் அருளால் கவிதை எப்படி மலர்கிறது? அப்படியே. இந்தக்கவியைக் கேட்டு அமெரிக்கமாது என்கவிகள் சிலவற்றைப் பாடச் சொன்னாள். அவளுக்கு ''The Soul Sings'' என்ற என் ஆங்கிலக்கவிதை நூலைத் தந் தேன். உடன் பாடத் தொடங்கிவிட்டாள். அன்னை வாஷிங்டனில் நடக்கும் கவியரங்கத் திற்கு அழைத்தாள்-கடவுள் உந்தினால் கட்டா

யம் வருவேன் என்றேன். கண்ணுடிச்சாளரம் வழியே, அதோ தெரியும் சிட்னியைப் பார்த்தேன். சிட்னிக்கு அடுத்தவாரம் வர அன்பர் ஏற்பாடு செய்தனர்.

### மெல்போர்ன் சேர்ந்தேன்

"மெல்போர்ன்—பயணிகள் வருக. டண்டண் டண்'' எல்லாரும் விமானத்திற்குள் சென்ருேம். செய்தித்தாட்களை விரித்துப் படித்தோம். ...ஒருமணிநேரம் பறந்து விமானம் மெல்போர்னில் இறங்கியது.

நான் இறங்கிப் பயணச்சடங்குகளை முடித்து, சுங்கத்திற்கு வந்தேன். அன்பர் மாலைசூட்டி வரவேற்றனர். என் பெட்டியும் விமானத்தினின்று நேராக ஒரு வட்டச்சுழலில் சுழன்று வந்தது. சுங்கத் தலைவர் திறந்தார். உள்ளே என்ன? நூல்கள் கவிதைகள்..இரண்டுதுணிகளே...நான் கொணர்ந்த கனிகளைச் சுங்கம் எடுத்துக்கொண்டது. நண்பர் என் பெட்டியை எடுத்துக் கொண்டு மாலை சூட்டி அழைத்துச் சென்று உந்தியில் அமர்த்தினர். மெல்போர்னை ஒரு சுற்றிச்சுற்றிக் காட்சிகளை காட்டிக் கொண்டே, நண்பர் செயிண்ட் கில்டாவில் (St. Kilda) உள்ள எலன்வேல் மாளிகைக்கு அழைத்துச் சென்று நல்வரவு கூறினர். உணவு தயார்! உணவு பிறகு..மாளிகையைச் சுற்றிப் பார்த்தேன். மனங்குளிர்ந்தது. எனக்கு மிக வசதியான சலவை விடுதி கிடைத்தது. அதில் குளிக்க, துவைக்க வசதி; இப்படித் திருப்பினுல் தண்ணீர், அப்படித் திருப்பினுல் வெந்நீர். ஆடை வெளுக்க அழகிய இயந்திரம். இது குளிர் காலம். மழையும் உண்டு. குளிருக்கு அடக்கமாக வெப்பமாக்கி (Warm Conditioner) உள்ளது. அதைத் திருகிவிட்டால் அதிலுள்ள கம்பிகள் செந்தணலாகி உறையுள் முழுவதும் வெது வெதுப்பாக்கும். எனக்கு எழுத வேண்டிய கருவிகள் காகிதம் தட்டச்சு எல்லாம் அன்பர் தந்தனர். மாளிகை முழுதும் பலநிறமான கம்பளங்கள் விரிக்கப்பட்டுள்ளன. மாளிகையைச் கூட்டிச் சுத்தம் செய்ய இதோ டர்டார் டர் என்று சத்தமிட்டு துடைபொறி வருகிறது (Machine Sweeper). நான் மாலைக் கூட்டத்திற்குச் செல்லும்போது என் அறையைத் தூயுறுத்தி ஊதுவர்த்தி ஏற்றி வைப்பர்.

### பயனுள்ள வாழ்வு

என் அறைக்கு அடுத்து அட்டில் உள்ளது. அதில் மின்னடுப்புள்ளது. அழுத்தினுல் பத்து நிமிஷத்திலே சமையல் முடிந்து விடும். அரை மணிநேரத்தில் வயிற்றுக்கடமை நிறைவேறும். காலையில் எனக்கு வேண்டிய பால் ரொட்டி, காய், கனி கடலை பருப்பு எல்லாம் ஒரு பையில் வந்து குளிர்ப்பேழையில் வைக்கப்படும்.

நான் ஒருமூச்சுக்கூட வீணுக்காமல் படித்தேன், எழுதினேன், பாடினேன், அறிவு புகட்டினேன். அறிஞரைக் கண்டு பயன்பெற்றேன். நண்பர் கேள்விகளுக்கு விடையளித்தேன். இரவில் ஆபராக்களையும், சிறந்த திரைப்படங்களையும் கண்டேன். விஜயதேவும் கென்னெத்தும், நிறுவன அன்பரும் எனக்கு ஆவன செய்தனர்—என்னிடம் அறிவன அறிந்தனர்—அடுத்த இதழில் எலன்வேலைப் (Helen Vale) பற்றிச் சொல்லுவேன். (தொடரும்)

—சுத்தானந்த பாரதி

# மதிப்புரை

**அருளுடைச் சோழ மண்டலம்:**

இந்நூல், தமிழக வரலாறு, கல்வெட்டு ஆகிய துறைகளில் ஈடுபட்டுப் பல செய்திகளை ஆராய்ந்து கூறுகின்றது. சோழ மன்னர்களுடைய வரலாற்றின் ஒரு பகுதியையும், பல்லவராயன்பேட்டைச் சாசனத்தையும் பற்றி, இந்நூல் பல சாசனங்களின் துணை கொண்டு விளக்குகின்றது. கும்பகோணம் இராமன் அண்ட் இராமன் கம்பெனியின் இயக்குநர்களுள் ஒருவர் ஆகிய திரு. N. சேதுராமன், B.SC., D.M.I.T. அவர்கள் இந்நூலை எழுதி வெளியிட்டிருக்கின்ருர்கள். அழகிய படங்கள் பல இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளன. தொழிற்றுறையதிபர் ஆக விளங்கும் இவ்வறிஞர், இத்தகைய வரலாற்று ஆராய்ச்சித்துறையில், கலையுணர்வும் சமயவுணர்வும் கொண்டு ஈடுபட்டு வருவது, பெரிதும் போற்றத்தக்கதாகும். திரு. R. V. இரமணி (சௌத் இந்தியா கார்ப்பரேஷன், 3/1 உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை 17) அவர்களிடத்தில், புஜண்டர்நாடி நூல் படிக்கக்கேட்டுத் தாமும், தமது நண்பர்கள் பலரும் அரிய பல உண்மைகளை உணர்ந்ததாக ஆசிரியர் விவரித்துள்ளார். 280 பக்கங்களுக்கு மேற்பட்டுள்ள இந்நூலை, அஞ்சற்செலவுத் தொகை மட்டும் அனுப்பி, வேண்டுவோர் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். நல்ல திருத்தமான பதிப்பு, அழகிய சிறந்த பயன்மிக்க நூல்!

கிடைக்குமிடம்:

''திரு N. சேதுராமன், B.SC., D.M.I.T. பிடாரி குளம் ரோட்,
கும்பகோணம், தஞ்சை மாவட்டம்.''

—ஆசிரியர்.

# ஆழ்வார்களும் நாயன்மார்களும்

(ந. ரா. முருகவேள், M.A., M.O.L.)

**முன்னுரை :**

சைவம் வைணவம் என்னும் இரு பெருஞ் சமயங்களும், தமிழ் நாட்டில் மிகவும் சிறப்புடன் போற்றப்பட்டு வருவன ஆகும். ''ஓர் ஆவிற்கு இருகோடு பூத்தாற்போல'' இவ்விருபெருஞ் சமயங்களும் தமிழகத்தில் தொன்றுதொட்டே இணைந்து இயைந்து நிலவி வருகின்றன. தமிழ் மக்களுக்கு வழிகாட்டி உய்வித்து வருதலால், இவற்றைத் தமிழ்நாட்டின் இரண்டு கண்கள் என்று பாராட்டிப் போற்றலாம்.

**நீரும் நெருப்பும் :**

உலக வாழ்க்கைக்கு நீர் இன்றியமையாதது. 'நீரின் றமையா துலகெனின் யார் யார்க்கும் வானின் றமையா தொழுக்கு' என்னும் திருக்குறளில், நீரின் சிறப்பினைத் திருவள்ளுவரும் வற்புறுத்தியுள்ளார். நீரைப் போலவே நெருப்பும் மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் தேவைப்படுவதொன்று. நீரும்நெருப்பும் ஆகிய இரு பொருள்களின் இன்றியமையாமையினையும் சிறப்பினையும் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் நன்குணர்ந்திருந்தனர். அதனால் உலகைப் படைத்து இயக்கி வரும் பரம்பொருளின் இயல்பினை இவற்றோடு இயைபுறுத்தி மகிழ்ந்தனர்.

**திருமாலும் சிவபிரானும் :**

நீர் நீல நிறம் வாய்ந்தது; நெருப்பு சிவப்பு நிறம் வாய்ந்தது. நீலநிறம் பெண்மையையும், சிவப்பு நிறம் ஆண்மையையும் குறிக்கும் என்பர் (1). திருமால் நீலநிறம் (பச்சை கருமை ஆகிய நிறங்களும் நீலநிறத்தில் அடங்கும் என்பர்) உடையவராகப் போற்றப் பெறுகின்றார்; சிவபிரான் செந்நிறம் உடையவராகப் புகழப் பெறுகின்றார். நீர் தண்மையுடையது; நெருப்பு வெம்மையுடையது. திருமால் காத்தற் கடவுளாகக் கருதப் பெறுகின்றார்; சிவபிரான் அழித்தருளும் கடவுளாகக் கூறப் பெறுகின்றார்.

நீர் நிலத்திற் பரவும் தன்மையுடையது; நெருப்பு மேல் நோக்கி நின்று எழும் இயல்புடையது; திருமால் பள்ளி கொண்டருளும் பரமனாகி-அரங்கநாதராகப் பரவப் படுகின்றார்; சிவபிரான் நின்றாடும் தெய்வமாக-அம்பல வாணராக வழிபடப் பெறுகின்றார்!

(1) "Every artist knows how he can make a scene before his eyes appear warmer or colder in colour according to the way he sets his attention. If for warm, he soon begins to see the **red** start out of every thing; if for cold, the **blue**....

And finally, it is a real puzzle when the colour pale blue is said to have **feminine** and blood-red **masculine affinities**"

—William James,
The Principles of Psychology, Vol. I, p. 425,582.

**ஆழ்வார்களும் நாயன்மார்களும் :**

மிகப் பழங்காலத்தில் திருமால் நெறியும் சிவநெறியும் ஒரு கொடியிற் பூத்த இருமலர்கள் எனவே, தமிழகத்தில் வேறுபாடின்றி இயைந்து விளங்கி வந்தன. இடைக்காலத்திற் சில புதிய கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் உடைய புறச் சமயங்கள் சில, தமிழ் நாட்டிற் புகுந்து பரவத் தலைப்பட்டன. அந்நிலையில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றி யருளி, அரும் பெருஞ் செயல்களை ஆற்றி, இறையருள் உணர்ச்சியினை யாண்டும் பரப்பி, மக்களுக்கு உய்திநெறி காட்டி உதவினர்.

**கலைச்செல்வக் களஞ்சியங்கள் :**

ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆகிய பெருமக்கள் அருளிச் செய்த தெய்விக நலம் பொதிந்த திவ்வியப் பிரபந்தம், தேவார திருவாசகத் திருமுறைகள் ஆகிய திருவருட் பாடல்கள், அழியாத அரும்பெருங் கலைச் செல்வக் களஞ்சியங்கள்! அத் தெய்விகப் பாடல்களின் வாயிலாக, ஆழ்வார்கள் நாயன்மார்கள் ஆகியோரின் அருளனுபவங்களையும் அறிவுரைகளையும், நாம் அனைவரும் அறிந்து கொண்டு அளப்பரிய நலங்களை அடையலாம்.

திருவருள் நலம் நிரம்பித் திகழும் திவ்வியப் பிரபந்தமும், தேவாரத் திருமுறைகளும் ஆகிய இத் தெய்விகப் பாடல்கள் நவில்தொறும் நன்னயம் நல்குகின்றன; பயில்தொறும் பரவசப் படுத்தி நம்மை மகிழ்விக்கின்றன. அறிவுக்கு உயர்விருந்தாய், நம் அல்லல்களுக்குப் பெரு மருந்தாய்ப் பிறங்குகின்றன. இவற்றை ஓதுதலால் நம் உள்ளம் தூய்மையுற்று ஒளி பெறுகின்றது. தீவினைகள் தேய்ந்து சிதைந்து அகலுகின்றன. இவற்றின் அரிய பெரிய இலக்கியச் சிறப்புகளையும், சொற்பொருட் சுவைநலங்களையும் உன்னி யுன்னி உணருந்தோறும், நாம் வியப்பும் விம்மிதமும் எய்தி இன்புறுகின்றோம்.

**சிறந்த சாதனங்கள் :**

ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆண்டவனின் அருளைப் பெற்று, அவ்வருளனுபவத்தில் மிகமிக ஆழ்ந்து நயந்து திளைத்து இன்புற்றவர்கள். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்தன்மை பெற்றொளிரும் ஒப்புயர்வற்ற அருட்பெருஞ் சான்றோர்கள்! நம்மனோர் ஈடேறி உய்தற் பொருட்டுத் திருவவதாரம்

செய்து, செயற்கருஞ் செயல்கள் பலவும் புரிந்து, நமக்கெல்லாம் வாழும் நெறி காட்டியுணர்த்திப் போந்தருளிய பெருமக்கள்! இழுக்கலுடைய இடத்தே ஊன்றுகோல்போல, அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய அருட்பாடல்களே, நமக்கு உலகியல் வாழ்வில் தளர்வு நேரும் பொழுதெல்லாம், பற்றுக்கோடாக அமைந்து துணைபுரியும் சிறப்புடையன! புறந் தூய்மை நீரான் அமைதல்போல, நம்முடைய அகம் தூய்மை அடைதற்கு ஆழ்வார்களும் நாயன்மார்களும் வழங்கியுள்ள அருளிச் செயல்கள், நமக்கு இன்றியமையாத சிறந்த சாதனங்களாக விளங்கி வருகின்றன.

**சான்றோர் உணர்வுகள் :**

சான்றோர் பெருமக்கள், உலகின் பல பகுதிகளில், நாடு மொழி இனம் காலம் சூழ்நிலை ஆகியன பலவும் அறவே வேறுபட்டுத் தோன்றியவர்களாக இருந்தபோதிலும், அனுபவநலம் நிரம்பிச் சிறந்து திகழும் அவர்தம் அறிவுரைகள் அனைத்தும், ஒரே கருத்தும் ஒரேகுரலும் ஒரே போக்கும் உடையனவாகவே இருக்கும். வெவ்வேறு இடத்திலும் காலத்திலும், வெவ்வேறு இனத்திலும் மொழியிலும் சூழ்நிலையிலும், சான்றோர்கள் ஆங்காங்கே தோன்றுவார்களாயினும்,

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும், தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு, என்றும்
சான்றோர் சான்றோர் பாலர் ஆவர்..!

—புறநானூறு.

சான்றோர்கள் கூறும் கருத்துக்களிலும் நோக்கங்களிலும் வாய்மொழிகளிலும், என்றும் எங்கும் முரண்பாடுகள் ஒரு சிறிதும் இருக்க மாட்டா. ''பெரிய உள்ளங்கள் ஒரே தன்மையான-ஒத்த உணர்வையே உடையனவாக விளங்கும்'' (Great minds think alike) என அறிஞர்கள் பலரும் ஆராய்ந்து கூறுவர்.

**ஒப்புமைத் தன்மைகள் :**

இவ்வுண்மை, நம்முடைய ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆகிய சான்றோர்களின் திறத்தில், பெரிதும் இயைந்து பொருந்துவதாகத் திகழ்கின்றது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் அருளிச் செய்துள்ள திருப்பாடல்களில் நாம் பல சொற்கள் சொற்றொடர்கள் கருத்துக்கள் ஆகியவற்றின் ஒப்புமைத் தன்மையினைக் கண்டு அறிந்து, பெரிதும் வியப்பும் உவப்பும் அடைகின்றோம். அங்ஙனமே அவர்களின் அரிய பெரிய அறிவுரைகளும் அருளனுபவங்களும் மிகவும் இணைந்து இயைந்து காணப்படுகின்றன. அவ்வருட் பெருஞ் சான்றோர்களின் ஓங்கியுயர்ந்த சிறந்த பெருநிலையினை, அவர்கள் செய்து போந்த தெய்விகப் பாடல்கள், பளிங்கென விளங்கக் காட்டுகின்றன. அவற்றின் ஒப்புமைத் தன்மையினை விளக்கும் ஒரு சில சான்றுகளை மட்டும், இங்குக் கண்டு அமைவோம்.

எப்படி ஊரா மிலைக்கக்
குருட்டா மிலைக்கும் என்னும்
அப்படி யானும் சொன்னேன்
அடியேன்மற் றியாதென் பேனே

—நம்மாழ்வார்

ஊரா மிலைக்கக் குருட்டா
மிலைத்தாங்குன் தாளிணை அன்புக்கு
ஆராய் அடியேன் அயலே
மயல்கொண்டு அழுகேனே

—மணிவாசகர்.

உள்ளத்தே யுறையும் மாலை
உள்ளுவான் உணர்வொன் றில்லாக்
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டேன்!
உள்ளுவார் உள்கிற் றெல்லாம்
உடனிருந் தறிதி என்று
வெள்கிப் போய் என்னுள் ளேநான்
விலாஇறச் சிரித்திட் டேனே!

—தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்!
உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடனிருத் தறிதி என்று
வெள்கினேன் வெள்கி நானும்
விலாஇறச் சிரித்திட் டேனே!

—திருநாவுக்கரசர்

வேதநூற் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவ ரேனும்
பாதியும் உறங்கிப் போகும்!
நின்றதிற் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும்!
பிணிபசி மூப்புத் துன்பம்!
ஆதலாற் பிறவி வேண்டேன்!
அரங்கமா நகரு ளானே

—தொண்டரடிப்பொடி ஆழ்வார்

வேண்டிய நாள்களிற் பாதியும்
உறங்கிப் போகும்;
ஈண்டிய வெந்நோய் முதலது;
பிள்ளைமை மேலது; மூப்பு

ஆண்டின; அச்சம் வெகுளி
அவா அழுக் காறு இங்ஙனே
மாண்டன; சேர்தும் வளர்புன்
சடை முக்கண் மாயனையே

—சேரமான் பெருமாள் நாயனர்.

என்பன போன்ற எத்துணையோ பல பாடல்களை இங்கு எடுத்துக் காட்டலாம்!

''பேசாத நாளெல்லாம் பிறவா நாளே''

என்றார் திருநாவுக்கரசர் பெருமான். ''ஓவும் நாள், உணர்வு அழியும் நாள், உயிர்போகும் நாள், உயர் பாடைமேற் காவும் நாள் என்றலால் கருதேன்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

இக் கருத்தே,

''உண்ணுநாள் பசியாவ தொன்றில்லை
ஓவாதே நமோநாரணு என்று
எண்ணு நாளும் இருக்கெசுச் சாமவேத
நாண்மலர்கொண் டுனபாதம்
நண்ணுநாள் அவைதத் துறு மாகில்
அன்றெனக்கு அவை பட்டினிநாளே''

எனவரும் பெரியவாழ்வார் பாடலிலும் அமைந்திருத்தல் காணலாம்.

''கனபவளம் சிந்தும் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ?''

என்னும் திருநாவுக்கரசர் தேவாரப் பாடலைப் போலவே,

''கலையிலங்கும் மொழியாளர் கண்ணபுரத்
தெம்மானைக் கண்டாள் கொல்லோ?''

எனவரும் திருமங்கையாழ்வார் பாடல் இருத்தல் காணலாம் !

''திருவடி பரவி நிற்கத்
திண்ணம் நான் உய்ந்த வாறே' (அப்பர்)

'பையர வணையான் நாமம்
பரவிநாம் உய்ந்த வாறே (திருமங்கை)

'வாசி வல்லீர் இந்தளூரீர்
வாழ்ந்துபோம் நீரே' (திருமங்கை)

'வாளாங் கிருப்பீர்திருவாரூர்
வாழ்ந்து போதீரே' (சுந்தரர்)

'மழக்கை இலங்குபொற் கிண்ணம் என்றலால்
அரியை என்றுனைக் கருதுகின்றிலேன்'
(மணிவாசகர்)

''கள்ளவிழ் கோதை காதலும் எங்கள்
காரிகை மாதர் கருத்தும்
பிள்ளைதன் கையிற் கிண்ணமே ஒக்கப்
பேசுவ தெந்தை பிரானே'' (திருமங்கை)

என்றுற் போல வரும் எண்ணற்ற ஒப்புமைப் பகுதிகளைத் தேவார திருவாசகத் திருமுறைகளிலும், திவ்வியப் பிரபந்தப் பாடல்களிலும் நாம் காண்டல் இயலும்.

**மற்றும் ஒப்புமைத் தன்மைகள் :**

இம்மட்டோ? ஆண்டாளின் திருப்பாவையும், மணிவாசகரின் திருவெம்பாவையும், எத்துணையளவுக்கு ஒப்புமையுடையன என்பதை யாவரும் அறிவர். 'தாண்டக வேந்தர்' எனப் பெறும் திருநாவுக்கரசரைப் போலவே, திருமங்கையாழ்வாரும் திருக்குறுந் தாண்டகங்கள், திருநெடுந்தாண்டகங்கள் அருளிச் செய்திருத்தல் காணலாம். சைவத் திருமுறைகளில் உள்ள திருப்பல்லாண்டு போல, திவ்வியப் பிரபந்தத்திலும் பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டு உள்ளது! மணிவாசகர் பாடிய திருப்பள்ளி எழுச்சி போலவே, தொண்டரடிப் பொடி ஆழ்வாரும் ஒரு திருப்பள்ளி எழுச்சி பாடியிருக்கின்ருர். திருஞானசம்பந்தர் பாடிய திருவெழுகூற்றிருக்கையைப் போலவே, திருமங்கையாழ்வாரும் திருவெழுகூற்றிருக்கை என்னும் ஒரு சித்திர கவியினைச் சிறந்த முறையில் அருளிச் செய்துள்ளார்!

**சமய சமரச ஞானம் :**

இத்தகைய பல ஒப்புமைப் பகுதிகளை, நாம் நம்முடைய ஆழ்வார்கள் நாயன்மார்களின் அருளிச் செயல்களில் ஆராய்ந்து கண்டு அநுபவித்து மகிழலாம். நம்முடைய இலக்கியச் சுவைத்திறன், பக்திப் பண்பு, ஆராய்ச்சியுணர்வு ஆகிய பலதிற நலங்களும், இதனல் வளர்ந்து பெருகும். மேலும் இந்நாளைய உலகில் சமய சமரச மனப்பான்மை மிகவும் இன்றியமையாத தொன்ருகத் திகழ்கின்றது. பிற சமயவெறுப்பும் மறுப்பும், இன்றைய உலக நிலைக்குச் சிறிதும் பொருந்தாதன. அரை குறைச் சமய வுணர்வு உடையவர்களும், அஃது அறவே இல்லாதவர்களும் தான், சமயக் கொள்கைகள் முதலியன பற்றிச் சர்ச்சைகளை எழுப்பிச் சண்டைகளை விளைவித்து வருவர் (2).

**முடிவுரை :**

உண்மைச் சமயவுணர்வு கைவந்தவர்கள், ஒரு போதும் சமயச் சச்சரவுகளில் தலைப்படமாட்டார்கள்; சமயநெறி அறிவு அநுபவ நலங்களிலேயே பெரிதும் மூழ்கித் திளைத்து இன்புறுவார்கள்.

வேற்றுமைகளை ஒழித்து ஒற்றுமையினை வளர்ப்பதன் பொருட்டே, சான்ருேர்களால் சமயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. சமயவுணர்வும் அனுபவமும், சமரச ஞானநிலையிலேயே சென்று நிறைவுறுகின்றன. அத்தகைய சிறந்த சமய சமரச ஞானவுணர்வை, நாம் அனைவரும் தகவுறப் பெற்று, நம்முடைய ஆழ்வார்களும் நாயன்மார்களும் போன்ற சான்ருேர் பெருமக்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் பத்திமைபூண்டு ஒழுகி, நலம் பலவும் பெற்று உய்வோமாக !

—**ஆசிரியர்.**

(2) "The half-religious and the irreligious fight about dogmas and not the truly religious. In the biting words of **Jonathan Swift**, 'We have enough religion to hate one another but not enough to love one another.' The more religious we grow, the more tolerant of diversity shall we become.''

—**Dr. S. Radhakrishnan,**
The Hindu View of Life, p. 44

# கந்த புராணம்

திருமுருக கிருபானந்தவாரியார்.



(முற்றொடர்ச்சி)

ததீசி முனிவர் புறப்பட்டுப் போனபின், யாக தம்பத்தில் கழுகுகளும் காகங்களும் சூழ்ந்தன. தட்சன் மனைவியாய வேதவல்லியின் கழுத்திலிருந்த தாலி கீழேவிழுந்தது. இவ்வாறு பல துன்னிமித்தங்கள் தோன்றின; இதனைக் கண்டு தீயோனாகிய தட்சன் அஞ்சினானில்லை.

யாகந் தொடங்கப் பெற்றது. காமதேனு ஒரு பொன்மண்டபத்தில் வெள்ளிமலைபோல் அன்னத்தை உண்டாக்கியது. சர்க்கரைப் பொங்கல் கறியமுதுகள் குன்றுகளைப் போல் அமைத்தது. பட்சணங்கள் பழங்கள் குவிக்கப் பெற்றன. பால், தயிர், நெய், பாயசம் மடுக்களைப்போல் உண்டாக்கிற்று. வெற்றிலை பாக்கு கஸ்தூரி, பனிநீர், சந்தனம், மலர்கள் முதலியவைகளை நிரம்பவும் உண்டாக்கி வைத்தது. அன்றி, சங்கமும், பதுமமும், சிந்தாமணியும் கற்பகமும் அங்கு வந்து வேண்டிய அனைத்தும் வழங்கின. ஒருபுறம் பொன், நவரத்தினங்கள் பொன்னாடைகள் குவிக்கப் பெற்றன.

தட்சன் வேதியர்களை அழைத்து அன்னமும் ஆடையும் சொன்னமும் வழங்கினான். அந்த வேதியர்கள் தட்சனை வாழ்த்தினார்கள். சிலர் பசி தீர்ந்தும் ஆசை தீராது நின்று கொண்டேயிருந்தனர். பாவி பிரமா நமக்கு இந்த உணவுகளை யுண்ணும் பொருட்டு ஒரு முழும்நீளம் வயிற்றைத் தந்தானில்லையே என்று சிலர் வருந்தினர். ஆயிரம் வாய்களும் ஆயிரம் வயிறுகளும் இல்லையே என்று சிலர் கவலைப்பட்டார்கள். 'இத்தனையுந்தரும் காமதேனுவை ஒரு கயிற்றால் கட்டிக்கொண்டு போகலாம்' என்றார் சிலர். நிறைய உண்ட சிலர் எப்படி எழுந்திருப்பதென்று ஏங்கினார்கள். நமது மனைவி மக்களை அழைத்து வரவில்லையே என்று சிலர் வருந்தினர். உண்டவர்க்கு ஒருபுறம் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டன. ஆடைகள், குடைகள், பாதுகைகள், கமண்டலங்கள், தங்கக் காசுகள், நவமணி மாலைகள், பசுக்கள், கன்னியர்கள் முதலியன எண்ணில்லாத அளவில் வழங்கினார்கள். சில வேதியர் தலையில் சுமந்து சென்றனர். ஒருபுறம் வீணை புல்லாங்குழல் மத்தளம் முதலிய இசைக் கருவிகள் ஒலித்தன. ஒரு புறம் இன்னிசைப் பாடல்கள் பாடினர்; ஒரு புறம் அரம்பையர் ஆடினர்.

தட்சன் நாராயணரையும் நான்முகனையும் சிறந்த பீடங்களில் இருத்தி யாகம் புரியும் யக்ஞமூர்த்திகளைப் பார்த்து "இனி யாகம் புரியுங்கள்'' என்றான். யாகத்தில் சிவ மந்திரங்களை ஒழித்து, ஏனைய தேவதைகளுக்குரிய மந்திரங்களைக் கூறி அத்தேவதைகளை அழைத்தார்கள். அத்தேவதைகட்கு யாகாக்கினி மூலம் அவியை அளித்தார்கள். தேவர்கள் அந்த இனிய அவியை நஞ்செனஉணராது உண்டார்கள்.

இவ்வாறு வேள்வி நடைபெறும்போது நாரத முனிவர் வந்து பார்த்தார். சிவமூர்த்தியை விலக்கிச் செய்யும் வேள்வியைக் கண்டு உள்ளம் வெதும்பினார். திருக் கயிலைமலை சென்று நந்தி தேவருடைய அனுமதி பெற்று உள்ளே சென்று அம்பிகையையும் எம்பிரானையும் பலமுறை பணிந்து துதித்தார். சிவபெருமான் நாரதரைக் கருணைக் கண்களால் நோக்கினார். எங்கும் நிறைந்து எல்லாம் உணர்ந்த ஈசன் ''நாரதா! என்ன புதுமை?'' என்று கேட்டருளினார்.

நாரதர் ''கருணாமூர்த்தீ! கனகலம் என்ற இடத்திலே மாலயனாதி வானவரை வைத்து மதியில்லாத தட்சன் ஒரு பெரிய வேள்வி செய்கின்றான்'' என்றார்.

இதைக்கேட்ட தாட்சாயணி, இறைவனை இறைஞ்சி ''பெருமானே! என் தந்தை செய்கின்ற யாகத்தை யான் போய்க் கண்டு மகிழ விரும்புகின்றேன். விடை தந்தருளும்'' என்றாள். இறைவர் ''தேவீ! தட்சன் உன்னை அழைத்தானில்லை. அழையாத இடத்துக்குப் போவது பிழையாகும்'' என்றார். அம்பிகை ''அருட்கடலே! தட்சன் அறிவு குறைந்தவன். மறந்திருப்பான். என் தங்கையர்கள் யாவரும் அங்குக் குழுமியிருப்பார்கள். ஆதலால் போக விரும்புகின்றேன். அனுமதி தாரும்'' என்றாள். விடையூர்தி, விடை தந்தருளினார். எல்லா உலகங்களையும் ஈன்ற எம்பிராட்டி விமானத்தில்

ஏறிப் புறப்பட்டாள். பல சேடியர் உடன் சென்றார்கள். நந்தி தேவரின் மனைவி சுகேசை பாதுகையைத் தாங்கிச் சென்றாள். கமலினி, அநிந்திதை என்னுங் கன்னியர் பூமாலைகளை ஏந்திச் சென்றனர். தட்சனுடைய வேள்விச் சாலைக்குள் அம்பிகை சேர்ந்தாள்.

பட்சமில்லாத தட்சன் தாட்சாயணியை வெகுண்டு நோக்கிக் கூறுகின்றான். ''தந்தையும் தாயும் இல்லாத சங்கரன் மனைவியாகிய நீ இங்கு ஏன் வந்தாய்? நான் உன்னை அழைக்கவில்லையே! உன் கணவன் பித்தன்; பேயுடனாடும் பேயன்; தாமத குணத்தினன்; நீ அவனுடன் சேர்ந்து மயக்கமுற்றனை. இதோ பார்; உன் தங்கையர்களும் அவர்களின் கணவர்களும் மாலும் அயனும் என்னை மதித்துச் சூழ்ந்திருக்கின்றார்கள். என்னை மதியாத சிவனுக்கு அவியும் தரமாட்டேன். சிவனுக்கு முதன்மையாகத் தர வேண்டும் என்று சாற்றுகின்ற வேத மொழியையும் மாற்றுகின்றேன். சிவனை நீ சேர்ந்ததால் இங்கு நான் உனக்கு ஒரு சிறப்பையும் செய்யமாட்டேன். நீ இங்கு நில்லாது செல்'' என்றான்.

இந்த சாரமும் ஈரமும் இல்லாத கோர மொழிகளைக் கேட்ட வீரத்தாய் பெரிதும் வெகுண்டாள். அம்மையின் சீற்றத்தைக்கண்டு விண்ணும் மண்ணும் கடலும் மலையும் கதிரும் மதியும் நடுங்கின. விமலை என்ற பாங்கி அம்மையை அஞ்சலித்து, ''அகிலாண்டங்களையும் பெற்ற அன்னையே! தாய்சீறினல் சேய்கள் உய்யுமோ? சிறுமதியுடைய இந்த சிறுவிதியைத் தேவரீர் சீறினல் உமது சீற்றம் உலகங்களை யழித்துவிடும்; பொறுத்தருள் புரியும்'' என்று வேண்டினாள்.

அம்பிகை தன் சீற்றத்தை மாற்றி, தட்சனைப் பார்த்துக் கூறினாள். ''ஏ மதியில்லாதவனே! நீ என்னை இகழ்ந்ததைப் பொறுத்துக் கொண்டேன். என்னையுடைய முன்னை நாயகனை இகழ்ந்த புன்மொழியைப் பொறுக்ககில்லேன். என் செவியைச் சுட்டுவிட்டது. சிற்குணமுடைய சிவமூர்த்தி நிர்க்குணமுடையவர். தந்தை மைந்தரைத் தண்டிக்கும் போது அவருக்குள்ள சினம் அருளின் நீர்மையாம். அது போல் இறைவர் உலகங்களைச் சங்கரிக்கின்ற போது தாமத குணத்தை மேற் கொள்ளுகின்றார். அது அவருக்கு இயற்கை யன்று. சர்வ சங்காரம் அவர் ஒருவரே செய்யவல்லவர். சர்வ சங்காரம், ஒழியாது பிறந்து இறந்துவரும் உயிர்கட்கு ஓய்வு தருவதாகும். அது கருணையால் நிகழ்வதாகும். அழித்த அவரே அளிக்கவும் வல்லவராவர். அப்பரமபதியை-கருணாநிதியை தாமத குணத்தன் என்று நீ சாற்றலாகுமோ? சிவ என்ற ஈரெழுத்துக்களைச் செப்பினோர் எளிதில் நற்கதி நண்ணுவர். சிவமூர்த்தியை நிந்தித்த புந்தியற்ற புல்லிய உனக்கு இப்போது தண்டனை கிடைக்கும்'' என்று இயம்பி அக்கணமே விமான மூர்ந்து கயிலாயஞ் சென்றாள்.

கருணை நாயகரைத் தொழுது ''அண்ணலே! உம்மை நிந்தித்த தட்சனுடைய யாகத்தை அழித்திட வேண்டும். உமக்கு விருப்பும் வெறுப்பும் இல்லை எனினும் எமக்காகச் செய்தருள வேண்டும்'' என்றனள்.

அப்போது ஆலமுண்ட நீலகண்ட நிமலன் சிந்தித்தார். அச் சிந்தையிலிருந்து அகோர வீர பத்திரர் அவதரித்தார். அவருக்கு ஆயிரம் சிரங்களும், சிரங்கள்தோறும் மூன்று கண்களும், பிறைமதியுடைய முடிகளும், விளங்கியிருந்தன. ஈராயிரந் திருக்கரங்களும், பிரமசிர மாலைகளும் எலும்பு, ஆமையோடு, பன்றிக் கொம்பு இவைகள் புரளும் திருமார்பும் உடையவராய் நின்றார். கரங்கள் தோறும் பலப் பல படைக் கலங்கள் ஒளி செய்திருந்தன. அவருடைய திருமேனியில் நாகாபரணங்களும் ரத்னாபரணங்களும் விளங்கின. வீரக்கழலுடன் திருவடிகள் காட்சியளித்தன. அந்திவான் வடிவாகிய எந்தையாருடைய நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய வீரபத்திரர் சிவனே எனக் காட்சி தந்தார்.

அப்போது அம்பிகை தன் கோபக்கனலில் இருந்து பத்ரகாளியைப் படைத்தாள். வீர பத்திரரும் பத்ரகாளியும் அம்மையப்பரை வணங்கினார்கள். வேத மூர்த்தியைப் பார்த்து விளம்புகின்றார்.

தந்தையே! மாலையும் அயனையும் பற்றிக் கொண்டு வரவேண்டுமா? காலனைக் கொல்ல வேண்டுமா? தேவர்களை அழிக்கவோ? அசுரர்களை வதைக்கட்டுமா? கடல்களையும் உலகங்களையும் அப்படியே விழுங்கிவிட வேண்டுமா? எல்லா வுயிர்களையும் எரிக்கட்டுமா? அண்டங்களைத் துண்டங்கள் செய்யட்டுமா? உமது அருளால் எதையும் செய்யவல்லேன். என்னை ஈன்றது என்ன பணிக்காக? உத்தரவு தாரும்'' என்றார்.

சிவபெருமான் ''மகனே! எம்மை விலக்கித் தட்சன் வேள்வி செய்கின்றான். நீ அங்கு சென்று நமது அவிப்பாகத்தைக் கேள். அவன் நல்லுணர்வு பெற்று நல்கினல் இங்கு வருக; இல்லையேல் அவன் தலையினை யறுப்பாயாக, அவனை அடுப்போரைக் கொல்வாயாக, யாகத்தை யழிப்பாயாக,. நாம் அங்கு வருவோம்'' என்று கட்டளையிட்டார்.

பத்ரகாளியுடன் வீரபத்திரர் புறப்பட்டார். அவருடைய மூச்சுக் காற்றிலிருந்தும், வேர்வையிலிருந்தும் பலப்பலவீரர்களை யுண்டாக்கினார்.

இவ்வாறு வீரபத்திரர் தன்னை யொத்த பல வீரர்களைப் படைத்தார். அதேபோல் பத்ரகாளியும் பல்லாயிரங் காளிகளைப் படைத்தாள்.

விடைமுகம், சிங்கமுகம், புலிமுகம், யாளிமுகம், யானைமுகம், குதிரைமுகம் எனப் பல முகங்களுடன் அவ்வீரர்கள் விளங்கினார்கள்.

பத்ரகாளியிடந் தோன்றிய காளிகள் ஆயுதந் தாங்கி, அண்டங்கள் வெடிபடக் கர்ச்

சித்துப் புறப்பட்டார்கள். பானுகம்பன் முதலிய பூதர்கள் சங்கு முதலிய வாத்தியங்களை முழக்கினார்கள். தண்டன் பிருங்கி சிங்கன் என்பவர்கள் குடை பிடித்தார்கள். கவரி வீசினார்கள்; ஆலவட்டம் அசைத்தார்கள்.

அவ்வண்ணமே காளிகள் பத்ரகாளிக்குக் குடைபிடித்து, மலர்தூவி வாழ்த்திச் சென்றார்கள். புழுதிகள் எழுந்தன. மண்ணும் விண்ணுந் துளங்கின.

வீரபத்திரர் தன் பரிவாரங்களுடன் வேள்விச் சாலையை யடைந்தார். தன் சேனைத் தலைவனைப் பார்த்து "எம்பிரானை விலக்கித் தட்சன் புரியும் வேள்விச் சாலையில் நின்று ஒருவரும் வெளியேறா வண்ணம் காவல் புரிக என்றார்". வேள்விச் சாலையைச் சுற்றிக் கடல் சூழ்ந்ததுபோல் சேனைகள் சூழ்ந்து நின்றன. எதிர்த்து வந்த தட்சனுடைய சேனையைக் கொன்று தின்றன.

வீரபத்திரமூர்த்தி பத்ரகாளியுடன் யாக சாலையுள் நுழைந்ததைக் கண்ட பிரமாதி தேவர்கள், சிங்கத்தைக் கண்ட மான் கூட்டம் போலவும், இடியைக் கேட்ட நாகங்கள் போலவும் நடு நடுங்கினார்கள். அச்சங் கொண்டு பதைபதைத்தார்கள். நமக்கு நாசம் வந்துவிட்டதென்று எண்ணினார்கள். "தட்சனுக்கும் முடிவு வந்துவிட்டது" என்றார்கள். "விதியை யாரே விலக்கவல்லார்?" என்றார்கள். "சிவத்தை நிந்தித்து இவன் ஏன் இந்த மகத்தைச் செய்கின்றான்" என்றார்கள்.

வீரபத்திரர் வேள்வியைக் கண்டார். அவருடைய கண்ணில் கனல் பொரிகள் சிந்தின. ஒரு சங்கத்தை எடுத்து ஊதினார். அவ்வோசையால் மேருகிரி பிளந்தது. பூமி வெடித்தது. அண்டங்கள் இடிந்தன. சீலமற்ற தட்சனும் நடுக்கமுற்றுத் தளர்ந்தான்.

தட்சன் வீரபத்திரரை நோக்கி, "நீ இங்கு வந்த காரணம் யாது? நீ யார்?" என்று கேட்டான். வீரபத்திரர் "தட்ச! நான் சிவகுமாரன். உன் வேள்வியில் பரமனுக்கு உரிய பாகத்தைப் பெற வந்தேன். தருக" என்றார். தட்சன் "சிவனுக்கு அவிப்பாகம் தருகிலேன்" என்றான்.

அப்போது நான்கு வேதங்களும் குடிலையாகிய ஓங்காரமும் உருவந் தாங்கி வந்து "ஈசன் ஒருவனே வேதமூர்த்தி, யாகாதிபன்; வேறு ஒருவன் இல்லை. ஆதலால் நீ பரமசிவத்துக்குரிய பாகத்தைத் தருவாயாக" என்று முழங்கின. அது கேட்டுந் தட்சன் சும்மாவிருந்தனன். வேதங்களும் குடிலையும் அந்த இடத்தைவிட்டுச் சென்றன.

மீண்டும் வீரபத்திரர் "தட்ச! வேதமும் குடிலையும் கூறியதைக் கேட்டனையா? எனவே ஈசன் பாகத்தைத் தருதி" என்றார். தட்சன் "மயானத்தில் பேயோடாடும் பித்தனுக்கு ஈயேன்" என்றான்.

வீரபத்திரர் விரிஞ்சன் முதலிய விண்ணவரைப் பார்த்து "நீங்களும் இவன் உடன் ஒத்து உறைகின்றீர்கள். இவன் உரை உமக்கு உடன்பாடோ?" என்று வினவினார். உம்பர்கள் ஒன்றும் உரையாது ஊழின் பயனால் ஊமர் போல் உறைந்தார்கள்.

வீரபத்திரர் கோபத்தால் திரிபுரதகனன் போல் சிரித்து மேருவரைபோன்ற கதையால் தட்சன் மார்பில் அடித்தார். அவன் அஞ்சி விஷ்ணுவின் முன் வீழ்ந்தான். பிரமனுடைய சென்னியில் ஓங்கிக் குட்டினார். பிரமன் அவர் பாதத்தில் பணிவான்போல் பதைத்து வீழ்ந்தான். சரஸ்வதி முதலிய தேவ மாதர்களின் நாசியையும் தனத்தையும் கொய்தார். தேவர்கள் வாடினார்கள். ஓடினார்கள். ஒளியும் இடத்தை நாடினார்கள். நடுங்கினார்கள்; ஒருபுறம் ஓடும் சந்திரனைத் தள்ளித் திருவடியால் நிலத்தில் தேய்த்தார். சூரியனுடைய பற்களை உடைத்தார். பகனுடைய கண்களைப் பறித்தார். இயமனுடைய தலையை வெட்டினார். அக்கினியின் ஏழு நாக்குகளை யறுத்தார்: அக்கினியின் மனைவி சுவாகா தேவியின் நாசியை விரலால் கிள்ளினார். நிருதியைத் தண்டினால் புடைத்து மாய்த்தார். உருத்திரர்கள் அவருடைய திருவடியில் வீழ்ந்து வணங்கியதால் அவர்களை அந்த இடத்தைவிட்டு ஓட்டினார். வருணனையும் வாயுவையும் குபேரனையும் கொன்றார். ஈசானன் வணங்கி உருத்திரர் ஓடிய வழியில் ஓடினான். அசுரேந்திரனைத் தடியால் அடித்து மாய்த்தார். ஓடுகின்ற எச்சனுடைய சிரத்தைத் துணித்தார்.

தட்சன் இவற்றை யெல்லாங் கண்டு தன் மனத்துக்குள் என் தந்தையாகிய பிரமதேவர் கூறிய வாய்மையால் தவஞ்செய்து சிவனாரிடம் எல்லா நலன்களும் எய்தினேன். வரங்கொடுத்த வள்ளலை மறந்தேன். நன்றியுணர்வைத் துறந்தேன். உலக மாதாவைப் பெற்று அப்பெருமாட்டியை மகள் என்றும் மாதேவரை மருமகன் என்றும் எண்ணிக் கேட்டேன். வேதவிதிப்படி இறைவனுக்குத் தரும் அவியைத் தரக்கூடாது என்று தந்தையைத் தடுத்தேன். வேத நெறியை மறுத்து இவ்வேள்வியைச் செய்தேன். தந்தையே யன்ன ததீசிமாமுனிவருடைய அறிவுரையை நிந்தித்தேன். வேத வேள்விக்கு வந்த எம்பிராட்டியையும் இறைவரையும் இகழ்ந்தேன். இந்த வீரமூர்த்தி கேட்டும் அவியைத் தர மறுத்தேன். வேதங்களை வெறுத்தேன். பிரமாதி தேவர்களுக்கும் வேதியர்க்கும் முடிவைச் செய்தேன். இப்போது இறக்கும் நிலையில் தளர்கின்றேன். விதிவழி மதி சென்றது போலும்" என்று தன் மனத்துக்குள் சொல்லிக் கொண்டான்.

இனி ஓடினாலும் உய்யமாட்டேன் என்று தட்சன் வீரபத்திரர் முன் நின்றான். வீரபத்திரர் அவன் தலையை வாளினால் வெட்டி, அத்தலையை வேள்வித் தீயில் உள்ள நெருப்பிடைத் தந்து "உண்ணுக" என்றார். அக்கினி ஒரு நொடியில் உண்டான். இதனைக் கண்ட வேதவல்லியும் அவளுடைய புதல்வியர்களும்

புலம்பிக்கொண்டு அங்கு வந்தார்கள். வீர பத்திரர் வேதவல்லியின் செவிகளைக் கொய்தார். மற்ற மாதர்களின் தலைகளைத் தடிந்து பந்துகளைப்போல் வீசினர். காளி தேவியும் வீரபத்திரரும், தேவர்களையும், முனிவர்களையும் தலையை வெட்டி வீழ்த்தினர்கள். சில தேவர்களும் வேதியர்களும் ஓடி ஓடி ஒளியலானர்கள்.

வீரர்கள் தோரணங்களை அறுத்தார்கள். யாகவேதிகைகளை யிடித்தார்கள். அனைவரையும் மடித்தார்கள்.

திருமால் அயர்ச்சி நீங்கியெழுந்தார். வேள்விச் சாலை அழிந்ததையும் அமரர்கள் மாண்டு ஒழிந்ததையுங் கண்டார். ''நமது காப்புத் தொழில் அழகிது'' என்று நாணினர். பரமனை யிகழ்ந்தவர்க்கு இது தகுந்த தண்டனை தான் என்று உணர்ந்தாரில்லை. வீரபத்திரருடன் போர் புரியக் கருதினர். கருடனைக் கருதினர். கருடன் மாண்டிருக்கக் கண்டார். தமது கோபத் தழலையே கருடனுக்கினர். அதன் மீது ஏறினர். பாஞ்சசன்யத்தைத் தம் பவள வாயில் வைத்து ஊதினர். சார்ங்கம் என்ற வில்லை வளைத்து எல்லையில்லாத கணைகளைச் சேனைகளின் மேல் வீசினர்.

அப்போது வீரபத்திரருக்கு ஒரு பெரிய தேரை அரனர் அனுப்பினர். ஆயிரம் வேதங்களும் அத்தேருக்கு ஆயிரம் குதிரைகளாக வந்தன. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கருதிய பிரமதேவர், மெல்ல எழுந்து தேர்ப்பாகனுக வந்தார். வீர பத்திரரும் பத்ரகாளியும் அத்தேர்மீது ஆரோகணித்தார்கள். தேர் திருமாலின் முன் சென்றது. விஷ்ணுமூர்த்தி வீரபத்திரரைப் பார்த்துப் பகர்கின்ருர்.

''சிவபெருமானை விலக்கிய தக்கனைத் தண்டித்தது நியாயம். வேள்வியை யழித்ததும் விண்ணவர்களை யழித்ததும் என்ன காரணம்?'' என்று வினவினர். ''எல்லாமாகி எங்கும் நிறைந்த எம்பிரானை விலக்கியதால் வேள்வியையும், இவ்வேள்வியில் அவிநுகர்ந்த அமரரையும் அழித்தோம். உன்னையும் இப்போது அழிக்கப் போகின்றேன்'' என்ருர் வீரமூர்த்தி.

திருமால் வெகுண்டு அம்பு மாரி பொழிந்தார். வீர பத்திரர் அக்கணைகளை விலக்கினர். இருவரும் உலகம் வெருவுறுமாறு போர் புரிந்தார்கள். வீரபத்திரர் வடவாமுகாக்கினிக் கணையை ஏவினர். அப்படை அச்சுதனுடைய மார்பைத் தொளைத்தது. திருமால் உணர்வு குன்றிச் சிறிது நேரம் நின்ருர். அப்போது வீர பத்திரர் பொறுமையாகப் போர் புரியாதிருந்தார்.

உணர்வு வந்த பின் திருமால் தெய்வப் படைகளை ஏவினர். வீரபத்திரர் அவ்வப்படைகளை அதற்கு நேரான தெய்வப்படைகளால் அழித்தார். திருமாலின் சார்ங்க வில்லைத் துண்டித்தார். திருமால் ஏறிய பறவையின் இரு சிறகுகளை இருகணையால் சேதித்தார். திருமால் தமது மாயையால் பலப்பல வீரரை ஏவினர். வீரபத்திரர் தமது நெற்றிக்கண்ணைத் திறந்து எரித்து விட்டார். திருமால் சக்கராயுதத்தை விடுத்தார். அரனர் திருமைந்தர், அந்த சக்கரத்தைப் பற்றிப் பணியாரம் விழுங்குவது போல் விழுங்கிவிட்டார். தண்டுழாய் மார்பன் தண்டாயுதத்தை விடுத்தார். வீரபத்திரர் தமது தண்டினுல் அதைத் துகள் செய்தார். திருமால் வாளையேந்தி எதிர்த்து வந்தார். வீர பத்திரர் ஒரு ஊங்காரம் செய்தார். திருமால் ஓவியம் போல் நின்றுவிட்டார். அப்போது வீர பத்திரர் வெகுளி மிகுந்தார். ''கோபங்கொள்ளாதே'' என்று ஒரு ஒலி வானிடையெழுந்தது. வீரபத்திரர் சீற்றத்தை மாற்றினர். அப்போது தேரோட்டும் பிரமதேவர் அவரைத் தொழுது, ''அறநெறிவழுவிய தட்சனுடைய வேள்வியில் அவியுண்ட அடியேனை மன்னித்தருளும்'' என்று அவருடைய அடிமலர்மீது வீழ்ந்தான்.

நாராயணர் நல்லறிவு பெற்று வீரபத்திரைப் பார்த்துக் கூறினர். ''ஐயனே! அடியேனுடைய வில்லைத் துணித்து, பல படைக்கலங்களையும் பொடிபடுத்தி, சக்ராயுதத்தை விழுங்கி என்னை வென்று புகழ்பெற்ற உம்மைத் துதிசெய்யவல்லவர் யாவர்? மதியிலாத தட்சனுடைய வழிபாட்டை விரும்பி வேள்வியில் கலந்து கொண்டேன். தேவரீரால் இழந்த அறிவைப் பெற்றேன். ஈசனை இகழ்வாரிடம் நேசம் வைப்பது பிழை. தேவரீர் பார்வையாலும், வார்த்தையாலும், புன்சிரிப்பாலும் அகில உலகங்களையும் அழிக்கவல்லவர். இன்று இங்கு இவ்வாறு போர் புரிந்து அழித்தது உமது திருவிளையாடலே யாகும்.

சிவபெருமானுக்கு நான்கு சக்திகள். போர் சக்தி, கோபசக்தி, அருட்சக்தி, ஆண் சக்தி என்ப. துர்க்கை போர்சக்தி, காளி கோப சக்தி, கௌரி அருட்சக்தி, அடியேன் புருஷ சக்தி. இந்த உண்மைகளை வேதம் பேசுகின்றது.

ஆதலால் அடியேன் இறைவனிடம் பேரன்பு பூண்டவன். சிவபெருமானிடம் பின்னர் நான் வழிபட்டு, இழந்த சக்கரத்தைப் பெறுவேன். நீர் எங்களைத் தண்டித்து முறை செய்தது பற்றி நான் சிறிதும் வருந்தவில்லை. நாங்கள் புனிதமடைந்தோம். பொறுத்தருள்க என்று அவர் பொன்னடி தொழுதார்.

வீரபத்திரர் திருமாலின் இன்னுரை கேட்டுக் கருணை புரிந்தார். அப்போது சிவ பெருமான் உமாதேவியாருடன் விடைமீது வந்து காட்சியளித்தார். வீரபத்திரர் உள்ளம் உருகி அம்மையப்பரைப் பணிந்தார்.

தனிப்பெருந்தாயான உமாதேவியார் அவ் வேள்விக்களத்திலே கால்வேறு கைவேறு உடல் வேருகத் துண்டிக்கப்பட்டுப் பிணமாகக் கிடந்த தட்சனைக் கண்டாள். சினம் அகன்று அருள் மிகுந்து, பொன்னர் சடைப் புண்ணியனைப் பார்த்து, ''மூவர்க்கும் முதல்வரே! வேள்வியும் தட்சனும் தேவர்களும் உமையால் அழிந்தது என்று உலகம் உரைக்கும். அறிவின்மையால்

இவர்கள் குற்றம் செய்து தண்டிக்கப் பெற்ருர்கள். முன்னே யான் வேண்ட இவ்வீர குமாரனுல் இவர்களுக்கு இறுதி செய்தீர். இவர்கள் பிழைத்து உய்யக் கருணை புரிவீர்'' என்று வரம் வேண்டினுர்.

நம் பெருமான் நன்றென நகைத்து ''வீர குமாரா! இவர்கள் உய்ய அருள் செய்'' என்ருர். வீரபத்திரர் ''எல்லோரும் எழுக'' என்ருர். அத்தனை பேரும் தூங்கி விழித்தவரைப் போல் எழுந்தார்கள். இந்திராதி தேவர்கள் தம் பிழையை நினைந்து நாணமடைந்தார்கள்.

தேவர்கள் விண்ணிலே விடையின்மீது உமையம்மையுடன் கண்ணுதற் கடவுளைக் கண்டார்கள். அஞ்சினுர்கள். செஞ்சடைச் செம்மல் அஞ்ச வேண்டாம் என்று தஞ்சமளித்தார்.

தேவர்கள், தேவ தேவனைத் தொழுதார்கள் அழுதார்கள். நன்றி யுணர்வில்லாத தட்சன் தேவரீரை விலக்கிச் செய்த யாகத்தில் கலந்து கொண்ட எமக்கும் அருள்புரிந்தீரே. தந்தையன்றி மைந்தர்க்கு ஆதரவு ஏது? வேத விதியை விலக்கிச் செய்த வேள்வியில் கலந்து கொண்ட நாங்கள் பன்னெடுங்காலம் இத் தீவினையை அனுபவிக்க விடாது ஒரிமைப் போதில் எம்மைத் தண்டித்து அருள் புரிந்த ஐயனே! அடியேங்கள் செய்யும் கைம்மாறு யாதுளது? தங்கத்தைக் காய்ச்சி அடித்து ஆபரணமாகச் செய்வதுபோல், பிழைபட்ட எங்களை வீரமூர்த்தியால் தண்டித்துப் புனிதப் படுத்தினீர்.

எந்தையே! எம் பிழைகளைப் பொறுத்து அருள் புரியும்'' என்று போற்றிப் புகழ்ந்தார்கள். சிவபெருமான் ''உம்பர்களே! உங்கள் அரசை உங்கட்கே உவந்து அளித்தோம். சென்று நன்று வாழ்வீர்களாக'' என்று கூறிக் கருணை புரிந்தார்.

பிரமதேவர் அக்குழுவில் தன் மகனுகிய தட்சன் மட்டும் பிழைக்கவில்லை யென்றறிந்து சந்திரசேகரரை வந்தனை செய்து ''அந்தி வண்ணத்து அண்ணலே! நிந்தனை செய்த தட்சனை நரகம் புகா வண்ணம் தண்டித்து நல்லருள் புரிந்தீர்: அவனையும் பிழைத்தெழுமாறு கருணை புரியும்'' என்று வேண்டினுர். பானுகம்பன் தட்சனுடைய உடம்பைக் கொணர்ந்தான். தட்சனுடைய தலை, நெருப்பில் இட்டுச் சாம்பரானபடியால், யாகத்தில் மாண்டிருந்த ஒரு ஆட்டுத் தலையைப் பொருத்தித் தட்சனை உய்வித்தார். சிவன் பரம்பொருளா? என்ற ஆட்டுத் தலையுடைய தட்சன் ஆட்டுத் தலை பெற்று எழுந்தான். வீரபத்திரரையும்விடை மீது விமலரையுங் கண்டு தன் பிழையுணர்ந்து துயரக்கடலில் ஆழ்ந்தான்; அஞ்சினுன். அருட் கடலாகிய இறைவன் ''தட்சனே அஞ்சற்க'' என்று பட்சமொடு பகர்ந்தார். தட்சன் எம் பெருமானுடைய இணையடிமீது வீழ்ந்து வணங்கி, ''ஐயனே! வெய்யனேன் செய்த தீமை அளவிட முடியாது. அதை நினைதோறும் நினைதோறும் நெஞ்சைச் சுடுகின்றது. என் பிழைகளைப் பொறுத்து அருள்புரியும்'' என்று வேண்டினுன்.

உமாதேவியார் வீரபத்திரரையும் பத்ரகாளியையும் அருகில் அழைத்து, முதுகைத் தடவி ''நீங்கள் கணவனும் மனைவியுமாக வாழ்க'' என்று ஆசி கூறினுள். சிவபெருமான் மாலயனுதி வானவரை நோக்கி, உம்மைத் தண்டித்தது உமது வினை நீக்கம் பெறும் பொருட்டேயாகும். அதனை நினைந்து நாண வேண்டாம்'' என்று கூறி, சிவபெருமான் கயிலை சேர்ந்தார். வீரபத்திரருக்கு ஒரு தனிப்பதம் தந்தார். அதில் பத்ரகாளியுடன் வீரபத்திரர் வீற்றிருந்தார்.

தேவர்கள் தத்தம் உலகம் போனுர்கள்.

—தொடரும்

---

**சிவயோகநாயகி அந்தாதி:** இந்நூல், சைவசமய ஆசிரியர்களுள் ஒருவராகிய மணிவாசகர், இறையருள் உபதேசம்பெற்ற தலமாகிய, திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள அம்பிகையைப் பற்றிய, 100 சிறந்த செஞ்சொற் பாடல்களைக் கொண்டது. சிவகங்கை மன்னர்கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. கு. செ. இராமசாமி, எம்.ஏ., அவர்களால், இவ்வினிய நல்ல துதிநூல், சிறந்த முறையில் பாடப்பெற்றுள்ளது. இந்நூல் ஆசிரியரின் புலமை நலமும், கவிதைத் திறனும், பக்தியுணர்வும், மிகப் பெரிதும் போற்றுதற்குரியன. மொழி அறம், வெள்ளோட்டம், சபரி தரிசனம், பூபாளம் முதலிய வேறுபல நூல்களையும், இவ்வாசிரியர் இயற்றியுள்ளார். இந்நூல் பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

'' கிடைக்குமிடம் :
திரு. கு. செ. இராமசாமி, எம்.ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
மன்னர் கல்லூரி, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டம்''

—ஆசிரியர்.

# வை த் தி ய நா த ன்

**முன்னுரை :**

இறைவனைச் சில சமயங்கள் தாயாக வைத்து வணங்குகின்றன. மற்றும் சில சமயங்கள் தந்தையாகக் கருதிப் போற்றுகின்றன;

''அன்னே அனேஎனும் சிலசமயம்;
நின்னையே ஐயா ஐயா என்னவே
அலறிடும் சிலசமயம்....''

எனத் தாயுமான சுவாமிகள், கடவுளைத் தந்தையின் நிலையில் வைத்துச் சில சமயங்களும், தாயின் நிலையில் வைத்துச் சில சமயங்களும், போற்றி வழிபட்டு வருதலைக் குறிப்பிடுகின்றார்.

நாகரிக மேம்பாட்டில் மிகவும் சிறப்பும் பழமையும் மிக்குத் திகழ்ந்திருந்த எகிப்து நாட்டு மக்கள், முழுமுதற் கடவுளை ஓஸைரிஸ் ( Osiris ) எனத் தந்தையாகவும், ஐரிஸ் (Iris) எனத் தாயாகவும் வைத்து வழிபட்டு வந்தனர்.

எகிப்து நாட்டு மக்களைப் போலவே நாகரிகச் சிறப்புடன் திகழ்ந்திருந்த பாபிலோனிய நாட்டு மக்கள், எல்லாம் வல்ல இறைவனை ஏ (Ea) எனத் தந்தையாகவும், தவ்கிநா (Davkina) எனத் தாயாகவும் கருதி போற்றிப் வணங்கி மகிழ்ந்தனர்.

சாலடியர் என்னும் பழம்பெரும் நாகரிக மக்கட் டொகுதியினரும், ஊர் (Ur) என்னும் தம்முடைய தலைநகரில் தாம் எழுப்பிய மாபெருங் கோயிலின்கண் ஒளிவடிவாக விளங்கும் கடவுளை ஸமஸ் (Samas) எனப் பெயரிய அப்பன் ஆகவும், இஸ்தர் (Istar) எனப் பெயரிய அன்னையாகவும் அமைத்து வழிபாடு செய்து போந்தனர்.

இங்ஙனம் கடவுள் தாயும் தந்தையுமாக ஒருசேர இருந்து நம்மனோர்க்கு அருள் புரிந்து வரும் உண்மையினையே, நம் தமிழ்நாட்டிற் சிறப்பாகப் போற்றப் பெறும் அர்த்தநாரீசுவர மூர்த்தம், இலட்சுமி நாராயண மூர்த்தம் முதலியனவும் இனிது உணர்த்துகின்றன.

இவ்வாறே இறைவனை இணையற்ற ஒரு பெருந் தலைவன் என்றும், ஒப்புயர்வற்ற ஒரு பேரரசன் என்றும், மாபெரும் யோகி என்றும், சிறந்த நல்ல ஞானசிரியன் என்றும், பிறவாறும் பற்பல நிலைகளில் பலப்பல சமயங்களும் அன்பிற் போற்றி வருதலைக் காண்கின்றோம்.

**தந்தை தாய் :**

இறைவனின் இப்பலவகை நிலைகளையும் இயல்புகளையும் பற்றிச் சிவஞான சித்தியார் நூலில், ஆசிரியர் அருள் நந்தி சிவாசாரியர் ஆங்காங்கே அழகுறக் குறிப்பிட்டருள்கின்றார். இறைவன் தாயும் தந்தையுமாகிய நிலையில் இருந்து வருதலை,

''தந்தைதாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடின், உறுக்கி
வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர்; எல்லாம்
பார்த்திடிற் பரிவே யாகும்;
இந்தநீர் முறைமை யன்றோ
ஈசனார் முனிவும் என்றும்!''

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள் சிறந்தெடுத்து விளக்குதல் காணலாம்.

**தலைவன், அரசன் :**

இவ்வாறே இறைவன் அரசர்க்கு அரசாய பேரரசனும், பெருந்தலைவனுமாகப் பிறங்கிக் கொடியோர்த் தெறுதலும், செவ்வியோர்க்கு அளித்தலும் ஆகிய செயல்களைப் புரிந்து வருதல், பின்வரும் சித்தியார் செய்யுட்களால் தெளியப்படும்.

''மறைகள் ஈசன் சொல்; அச்சொல்
வழிவாரா உயிரை வைக்கும்
சிறைகள் மாநிரயம்; இட்ட
பணிசெய்வோர் செல்வத் தோடும்
உறையும்மா பதிகள், உம்பர்
உலகங்கள்; யோனிக் கெல்லாம்
இறைவன் ஆணையினால் இன்ப
துன்பங்கள் இயைவ தாகும்'' (1)

''அரசனும் செய்வது ஈசன்
அருள்வழி; அரும்பா வங்கள்
தரையுளோர் செய்யின், தீய
தண்டலில் வைத்துத் தண்டத்
துரைசெய்து தீர்ப்பன்; பின்பு
சொல்வழி நடப்பர் தூயோர்;
நிரயமும் சேரார்; அந்த
நிரயமுன் நீர்மை ஈதாம்.'' (2)

**யோகஞான ஆசிரியன் :**

இறைவன் யோகிகளுக்கெல்லாம் சிறந்த யோகியாய், பொறிவாயில் ஐந்தவித்த புனிதன் எனவும், புண்ணியன் எனவும் போற்றப்படும் நிலைமை,

''யோகியாய் யோக முத்தி
உதவுதல் அதுவும் ஓரார்!''

கண்ணுதல் யோகு இருப்பக்
காமன் நின்றிட வேட்கைக்கு
விண்ணுறு தேவர் ஆதி
மெலிந்தமை ஓரார்....''

எனவரும் செய்யுட்களில், அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகளால் அழகுற விளக்கப் பெற்றிருத்தல் காணலாம். இறைவனே ஞானாசிரிய நிலையினனாக இலங்கிப் போதரும் தன்மையினைச் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய நூல்களில் எட்டாம் சூத்திரம் இனிது விளக்குதலை, யாவரும் அறிவர்.

**வைத்தியநாதன் :**

இங்ஙனம் பலநிலைகளில் இறைவன் இலங்குவதும், இறைவனை மக்கள் வழிபட்டு வருவதும் போலவே, இறைவனை ஒருபெரும் மருத்துவன் எனவும் நூல்கள் கூறுகின்றன. இருக்குவேதத்தில் உருத்திரன் எனப்படும் சிவபெருமான், வைத்தியநாதன் என ஆங்காங்கே குறிக்கப் பட்டிருக்கும் பகுதிகள் பலவற்றையும், வேதங்களை நன்கு ஆராய்ந்து பதிப்பித்துள்ள மேலை நாட்டுப் பேரறிஞர்கள் தொகுத்துக் காட்டியிருக்கின்றார்கள் (1):

**சித்தியார் :**

இருக்குவேதமானது எல்லாம் வல்ல சிவபிரானை 'வைத்தியநாதன்' என்று ஆங்காங்கே பல இடங்களிலும் குறிப்பிடுதலை, நன்கினிது உணர்ந்த ''சகலாகம பண்டிதர்'' ஆகிய அருள் நந்தி சிவாசாரியர், அத்திறம் பற்றியும் தம்முடைய சிவஞான சித்தியார் நூலில் சிறந்தெடுத்துத் தெருட்டியருள்கின்றார்.

''மருத்துவன் உரைத்த நூலின்
வழிவரிற் பிணிகள் வாரா;
வருத்திடும் பிணிகள் தப்பில்;
தப்பிய வழியும் செய்யத்
திருத்துவன்; மருந்து செய்யாது
உறும்பிணி சென்றும் தீர்ப்பன்;
உரைத்தநூற் சிவனும் இன்னே
உறுங்கன்மம் ஊட்டித் தீர்ப்பன் '' (1)

மண்ணுளே சிலவி யாதி
மருத்துவன் அருத்தி யோடும்
திண்ணமாய் அறுத்துக் கீறித்
தீர்த்திடும்; சில நோய் எல்லாம்
கண்ணிய கட்டி பாலும்
கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்;
அண்ணலும் இன்ப துன்பம்
அருத்தியே வினை அறுப்பன்.'' (2)

''அருளினால் உரைத்த நூலின்
வழிவாராது அதன்மம் செய்யின்,
இருளுலாம் நிரயத் துன்பத்து
இட்டு, இரும் பாவம் தீர்ப்பன்;

பொருளுலாம் சுவர்க்கம் ஆதி
போகத்தாற் புணியம் தீர்ப்பன்;
மருளுலாம் மலங்கள் தீர்க்கும்
மருந்து இவை; வைத்தியன், நாதன்.''3

இவ்வரிய இனிய பாடல்கள் இறைவன் ''வைத்தியநாதன்'' என விளங்குதலை, எத்துணைப் பொருத்தமுறக் குறிப்பிட்டுள்ளன என்பது, பலகாலும் நுண்ணிதின் எண்ணிச் சுவைத்து மகிழத்தகுவது ஆகும்.

**குமரகுருபரர் :**

இங்ஙனம், சிவபெருமான் மருத்துவனாகவும், மருத்துவர்களின் தலைவனாகவும், ''வைத்தியநாதன்'' என்னும் நிலையில், திருப்புள்ளிருக்கு வேளூர் என்னும் தலத்திற் சிறப்புற எழுந்தருளி விளங்குகின்றான். செந்தமிழ்ச் சிவநெறிச் சான்றோர் செம்மல் ஆகிய குமரகுருபர சுவாமிகள், புள்ளிருக்கு வேளூர்ப் பெருமானை வைத்தியக் கடவுள் எனவும், வைத்தியநாதன் எனவும் புகழ்ந்து போற்றிப் பின்வரும் பாடல்களில் துதித்து மகிழ்கின்றார்.

''மைவிழிச் செங்கமல வல்லிக்கு நேமியான்
மணிமார்பு, வாணிக்கு நான்மறை
முதலி செந்நாத் தடம், தையலாளொடு
வயித்தியக் கடவுளார்க்கு
மெய்விரிக்கும் தொண்டர் உளத்தினெடு
வேதச் சிரம் போல.....'' (1)

''சூக்கும வெளியினிற்
பரம நடம் நவிற்றுதிறல் வேளூர்
வயித்திய நாதனைப் போற்றுதும்.'' (2)

**தீராநோய் தீர்ப்பான் :**

புள்ளிருக்கு வேளூர்ப் பெருமான், வைத்தியநாதன் என விளங்கி, வழிபடும் அடியவர்களுக்குத் தீராநோய்களை எல்லாம் தீர்த்தருளி வருகின்றான். வைத்தியர்கள், மணி மந்திரம் மருந்து என்னும் மூன்று பொருள்களைக்கொண்டு நோய்களைத் தீர்ப்பர். சிவபெருமானும் உருத்திராக்கம் ஆகிய மணியும், திருவைந்தெழுத்து ஆகிய மந்திரமும், திருநீறு ஆகிய மருந்தும் கொண்டு, நம்மனோரின் உடற்பிணி உயிர்ப்பிணிகளைத் தீர்த்து அருள் புரிகின்றான். ''பிரிவிலா அடியார்க்கு என்றும் வாராத செல்வம் வருவிப்பான்; மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித் தீராநோய் தீர்த்தருள்வான்'' வேளூர்ப் பெருமான் என்பது, திருநாவுக்கரசர் தேவாரம்.

**நம்பிக்கை விளக்கும் நலன் :**

இறைவனை நம்பி அன்புடன் வணங்கி வழிபட்டால், நாம் நோய்கள் தீர்ந்து நலம் பெற்று வாழ்தல் திண்ணம். சமயவாழ்விலும் உலகியல் வாழ்விலும் நம்பிக்கை என்பது மிகவும் இன்றியமையாதது; அளவிலா ஆற்றல் வாய்ந்தது. மேலை நாடுகளில் 'நம்பிக்கை மருத்துவமுறை' (Faith-Healing) பெரிதும் பரவி வருகின்றது.

பேராசிரியர் கார்ல் கஸ்டாவ் ஜங் என்பவர் (Carl Gustav Jung), கடவுளுணர்ச்சியையும், சமய நம்பிக்கையையும் பெரிதும் வற்புறுத்துகின்றார். அவர் ''கடந்த 30 ஆண்டுகளாக உலக நாகரிக நாடுகள் அனைத்தி

(1) "The character ascribed to Rudra in the hymns of the Rig Veda are most heterogenous and frequently indefinite.... Rudra is frequently described as the possesser of healing remedies, and is characterised as the greatest of PHYSICIANS."
—Dr. Muir, Sanskrit Texts.

லும் உள்ள மக்கள் பலரும் என்பாற் கலந்து ஆய்வுரை கேட்டுள்ளனர். என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையின் இரண்டாம் பகுதியில் அதாவது, முப்பத்தைந்து வயதுக்கு மேல்—தமது இன்னல்கள் தீருவதற்கு உரிய கடைசி வழியாகத் தமது வாழ்க்கையிற் சமயவுணர்வு கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள் ஒருவராவது இல்லை. அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக் காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு சமயமும் அவ்வக் காலத்தில் தன்னைப் பின்பற்றும் மக்களுக்குத் தருகின்ற மனநிறைவு ஆகிய உணர்ச்சியைப் பெறாமல், அவர்கள் இழந்துவிட்டமையே யாகும். மீண்டும் சமயவுணர்வு கைவரப் பெறாமல், அவர்களில் ஒருவராவது உண்மையில் தம்முடைய பிணி தீரப்பெற்றிலர்'' என அறிவுறுத்திக் கூறுகின்றார்'' (2)

முடிவுரை :

எனவே, நாம் அனைவரும் புள்ளிருக்கு வேளூர் வைத்தியநாதப் பெருமானை, அன்புடனும் நம்பிக்கையுடனும் வழிபட்டு வணங்கி, இம்மை மறுமை நலன்களை யெல்லாம் பெற்று உய்வோமாக'.

உரத்துறை போதத் தனியான
உனைச்சிறி தோதத் தெரியாது,
மரத்துறை போலுற் றடியேனும்
மலத்திருள் மூடிக் கெடலாமோ?

பரத்துறை சீலத் தவர் வாழ்வே!
பணித்தடி வாழ்வுற் றருள்வோனே!
வரத்துறை நீதர்க் கொருசேயே!
வயித்திய நாதப் பெருமாளே!

—திருப்புகழ்

(2) "During the past thirty years, people from all the civilized countries of the world have consulted me. Among all my patients in the second half of life—that is to say, over thirty-five years—there has not been one, whose problem in the last resort was not that of finding a religious outlook on life. It is safe to say that every one of them fell ill, because he had lost that which the living religions of every age, have given to their followers, and none of them has been really healed who did not regain his religious outlook."

—Prof. Carl Gustav Jung,
Quoted by Dr. S. Radhakrishnan, in his
"Recovery of Faith", p. 37.

—ஆசிரியர்.


## (1) வாட்போக்கிக் கலம்பகம் :

திரிசிரபுரம் மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களைச் சைவத் தமிழுலகம் நன்கறியும். அவர்கள் பாடிய பலப்பல அரும்பெறற் கவிதை நூல்களுள், இஃதும் ஒன்று. துறைமங்கலம் சிவப்பிரகாசரின் திருவெங்கைக் கலம்பகம், குமரகுருபரரின் மதுரைக் கலம்பகம் போன்ற, பல சிறந்த நூல்களின் வரிசையில் வைத்துப் பெரிதும் போற்றத் தக்க மாட்சிமையுடையது, இந்நூல். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் நூற்றாண்டு நினைவு விழாக் கொண்டாடப்பெறும் இவ்வாண்டில், இந்நூலை ''மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம்'', அரிய முன்னுரை, சிறந்த குறிப்புரை ஆகியவற்றுடன் அழகுறப் பதிப்பித்து வெளியிட்டுள்ளது.

**விலை ரூ. 3/-**

## (2) திருமயிலை யமக அந்தாதி :

தொண்டை நாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்றாகச் சிறந்து விளங்கும் சென்னைத் திருமயிலாப்பூர்க் கபாலீச்சுரத்துப் பெருமான் மீது, சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு, தாண்டவராயக் கவிராயர் என்பவர் பாடிய அரும் பெரும் கவிதைத் துதி நூல், இது! செய்யுளின் நான்கு அடிகளிலும் எதுகையின் எழுத்துக்கள் எல்லாம் ஒரே மாதிரியாக ஒன்றிவந்து, ஆனால் வெவ்வேறு வகையில் பிரித்துப் பல்வேறு பொருள் பயக்கும்படி, புலமைத் திறனும், கற்பனை நலனும் அமையப் பாடப்பெறும் அரிய பெரிய கடினமான நூல் அமைப்பே, யமக அந்தாதி எனப்படும். மிகவும் வியந்து போற்றத் தக்க சிறப்பு மிக்க இந்நூலின் மூலமும், பழைய உரையும், திரு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களால், 1936-ஆம் ஆண்டில் ஆராய்ந்து பதிக்கப் பெற்றன. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் ஆராய்ச்சி முகவுரை, இந்நூலின் சிறப்பினை மேலும் மிகுதிப்படுத்துகின்றது. இதன் அழகிய சிறந்த இரண்டாம் பதிப்பாக, இந்நூல் அண்மையில் வெளிவந்துள்ளது.

**விலை ரூ. 2/-**

இவ்விரு நூல்களும் கிடைக்கும் இடம் :

**''மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம்''**
திருவான்மியூர், சென்னை—600 041.

—ஆசிரியர்.

# திருவண்வண்டூர்த் திருமகள் கொழுநன்

திரு. டாக்டர் ந. சுப்புரெட்டியார் M.A., Ph.D.

(முற்றொடர்ச்சி)

ஆழ்வார்நாயகி முதலில் குருகினங்களைப் பார்த்துப் பேசுகின்றாள்; திருவண்வண்டூர் எம்பெருமானிடம் சென்று தன்னுடைய காதன்மையைத் தெரிவிக்குமாறு இரக்கின்றாள்.

''வைகல்பூங் கழிவாய் வந்து
மேயும் குருகினங்காள்!
செய்கொள் செந்நெல் உயர்திரு
வண்வண் டூர்உறையும்,
கைகொள் சக்கரத் தென்கனி
வாய்ப்பெரு மானைக்கண்டு
கைகள் கூப்பிச் சொல்லீர்
வினையாட்டியேன் காதன்மையே''

(வைகல்-நாள்தோறும்: பூங்கழி-உப்பங் கழி; குருகு-கொக்கு; செய்-வயல்; வினையாட்டியேன்-பாவத்தைப் பண்ணின என்னுடைய; காதன்மை-காதல் தன்மை.

என்பது பாசுரம். உணவின் பொருட்டு வந்து வந்து மேயும் குருகினங்களை நோக்கி ''நீங்கள் திருவண்வண்டூர் சென்றால் அங்கும் உங்கட்குத் தேவையான ஏராளமான உணவு கிடைக்கும்'' என்பதைச் 'செய்கொள் செந்நெலுயர்' என்ற சொற்றொடரால் குறிப்பிடுகின்றாள். எம்பெருமானைத் தெரிந்து கொள்ள இரண்டு அடையாளங்கள் கூறுகின்றாள். இதற்கு முன்னுள்ள திருவாய்மொழியில் ''பிறந்தவாறும்'' என்று கண்ணன் அவதாரத்தை எண்ணி மோகங் கொண்டவளாதலால் அந்த அவதாரத்தில் கையும் திருவாழியுமாகப் பிறந்தமை தன் உள்ளத்தில் ஊறியிருப்பதனால் அவ்வடையாளத்தைக் 'கைகொள் சக்கரத்து' என்று குறிப்பிடுவது முதல் அடையாளம். அடுத்து ''வளர்ந்தவாறும்'' என்று ஆயர்பாடியில் வளர்ந்தபடியைக் கருத்தில் இருத்தினவளாதலால், கண்ணன் அவ்வாயர்பாடியிலுள்ள பெண்டிர்க்கு அணுக்கனாய் இருந்து கொவ்வைக் கனிவாய் கொடுத்துக் கூழைமை செய்த படிகள் யாவும் அவளது திருவுள்ளத்தில் நிழலிட்டுத் தோற்றுகின்றன. எனவே, 'கனிவாய்ப் பெருமான்' என்று குறிப்பிடுவது இரண்டாவதுஅடையாளம். அப்பெருமான் தன்னிடம் வந்தபோது தன்னுடைய சௌசீல்யம் தோற்ற இருந்தான் என்றும், பிரிந்து சென்ற பிறகு பரத்துவம் பாராட்டி நிற்கின்றான் என்றும், குறிப்பிட்டு, ஆகவே அவனைக் காணுங்கால் 'கைகள் கூப்பிச் சொல்வீர்' என்று விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றாள். ''இன்னாள் உம்மை ஆசைப்பட்டிருக்கின்றாள்'' என்று தெரிவித்தால் போதும் என்பது அவள் திருவுள்ளம். இங்கே இன்சுவைமிக்க ''வன்னெஞ்சர் காதல் போலன்றிறே மென்னெஞ்சர் காதல்; மெல்லியலார் காதல் அளவல்லாத என் காதல் சொல்லீர்; சொல்லுவார் தாழ்வே'' என்ற ஈட்டின் பகுதி சுவைத்து இன்புறத்தக்கது.

அடுத்து, ஆழ்வார்நாயகியின் கவனம் உப்பங்கழிகளில் மேய்ந்து திரியும் கரு நாரை ஒன்றின்மீது செல்லுகின்றது. அதனை நோக்கி இவ்வாறு பேசுகின்றாள் :

''காதல் மென்படை யொடுடன்
மேயும் கருநாராய்!
வேத வேள்வி யொலிமுழங்
கும்தண் திருவண்வண்டூர்
நாதன் ஞாலமெல் லாமுண்ட
நம்பெருமானைக் கண்டு
பாதம் கைதொழுது பணியீர்
அடியேன் திறமே''

(பெடை-பெண் நாரை; கரு-என்றது புணர்ச்சியால் உண்டாகும் அழகினை; திறம்-தன்மை.)

துணைவியுடன் திரிவதால் நாரை புகருடன் விளங்குகின்றது. ''கூடத்திரிகையாலே நாரை திரை நீங்கி வடிவு புகர்த்தபடி; பிரியாதார்க்கு உடம்பு வெளுக்காதாகாதே; தான் உடம்பு வெளுத்துக் கிடக்கிறாளிறே'' என்ற ஈட்டின் பகுதி கருதத்தக்கது. வேதவேள்வியொலி முழக்கத்தில் மனம் ஈடுபட்டுக் கால் தாழ்ந்து தன்னை மறந்தொழிந்ததாகப் பராங்குசநாயகி கருதுகின்றாள். அவனருகிற் சென்று அவனுடைய திருவடிகளைத் தொழுது விண்ணப்பித்தால் போதும் என்று குறிப்பிடுகின்றாள். பக்தர்கட்கு ஆபத்து வருவதற்கு முன்னரே அவர்களைப் பாதுகாக்கும் இயல்பை யுடையவனாதலால் ''ஞாலமெல்லாம் உண்ட'' என்ற தொடரால் அவனது நீர்மையை எடுத்துக் காட்டுகின்றாள். இங்கு ''அவன் திறம் போலன்று; என் இடையாட்டத்தைச் சொல்லுங்கோள். சொல்லில் ஒரு மகாபாரதத்திற்குப் போருமாகாதே'' என்ற இன் சுவைமிக்க ஈட்டின் பகுதி சுவைத்து மகிழத் தக்கது.

எங்கும் பறவைகள் கூட்டமாக உலாவுவது வழக்கம். அவை உப்பங்கழியில் தம் இரைக்காக உழன்று கொண்டுள்ளன. அவை தான் ஈடுபட்டிருக்கும் எம்பெருமானைத்தான் தேடிக் கொண்டிருக்கின்றன என்று கருதி அவன் திருவண்வண்டூரில் உறைகின்றதாகக் குறிப்பிடுகின்றாள். அவ்வூரின் செல்வ வளம் அவனை அங்கே கால்தாழப் பண்ணிவிட்டதாக அவள் நினைப்பு. சில இளமையான அன்னங்களையும் காண்கின்றாள் ஆழ்வார்நாயகி. அவற்றை நோக்கி ''உடலம் நைந்து ஒருத்தி உருகும் என்று உணர்த்துமினே'' என்கின்றாள். ''இன்ன காட்டிலே மான்பேடை ஏவுடனே கிடந்து உழவா நின்றது என்று சொல்ல வேண்டாவன்றே'' என்ற ஈட்டின் பகுதி ஈண்டு நினைந்து இன்புறத் தக்கது. ''ஒருத்தி உடலம் நைந்து உருகும்'' என்றாலே போதும்; அதற்கு மேல் சொல்ல வேண்டியதில்லை என்பது ஆழ்வார்நாயகியின் நினைப்பு. இந்த அன்னங்கள் உணர்த்தலின் அருமையையும் ஊடலின் அருமையையும் உணர்ந்து ஒரு கலத்தில் ஒக்க உண்டு திரிவாரைப் போல் ஆண் பெண் சேர்ந்தே மேய்கின்றன என்பதையும் அறிகின்றாள். அவற்றுள் இன்னொரு கூட்டத்தைக் கண்டு,

''புணர்த்த பூந்தண் துழாய்முடி
நம்பெருமானைக்கண்டு
புணர்த்த கையினராய் அடியே
னுக்கும் போற்றுமினே''

(புணர்த்த-தொடுக்கப் பெற்ற; புணர்த்த கையினர்-கூப்பிய கையினர்; அடியேனுக்கு-அடியேனுக்காகவும்.)

என்று வேண்டுகின்றாள். அப்பெருமான் பக்தர்களைக் காப்பாற்றுவதற்கென்றே தனிமாலையிட்டிருக்கின்றார் என்பதைக் காட்ட வேண்டியே 'புணர்த்த பூந்தண்துழாய்முடி எம்பெருமான்' என்று குறிப்பிடுகின்றாள். ஆகவே, அவரை அந்த அன்னங்கள் கூசாமல் சென்று காணலாம் என்பது குறிப்பு. திவ்விய தேச யாத்திரை செல்லுகிறவர்களை நோக்கி, அந்தப் பேறு பெறுதவர்கள், அவர்கள் சென்று எம்பெருமான்களைச் சேவிக்கும்போது தங்களுக்காகவும் சேவிக்குமாறு வேண்டுவதுபோல, ஆழ்வார் நாயகியும் அன்னங்களிடம் அதே பாவனையில் ''அடியேனுக்கும் போற்றுமினே'' என்று குறிப்பிடுகின்றாள்.

சில குயில்கள் அவள் கண் வட்டத்தில் காணப் பெறுகின்றன. அவற்றை நோக்கி.

''ஆற்றல் ஆழி யங்கை
அமரர்பெரு மானைக்கண்டு
மாற்றம் கொண்டருளீர் மையல்
தீர்வதொரு வண்ணமே''

(ஆற்றல்-சக்திவாய்ந்த; மாற்றம்-பதில்; மையல்-மயக்கம்; ஒரு வண்ணம்-ஒரு தன்மை.)

என்று வேண்டுகின்றாள். தன் நிலையை எம்பெருமானுக்கு அறிவித்து அவனிடமிருந்து ஏதேனும் ஒரு மறுமாற்றம் கொண்டுவந்து தனக்குரைத்துத் தனது மயக்கத்தைத் தீர்க்க வேண்டுமென்பது அவளது வேண்டுகோள். மாற்றம் எப்படியிருப்பினும் சரி; நல்லதாகவும் இருக்கட்டும், அல்லது அல்லதாகவும் இருக்கட்டும். ''பாவி நீ என்று ஒன்று சொல்லாய் பாவியேன்காண வந்தே'' என்ற முறையிலிருப்பினும் போதும் என்பது அவள் நினைப்பு.

இங்ஙனம் பேசிக் கொண்டிருக்கும்போதே கிளி ஒன்று அவளிருப்பிடம் வருகின்றது. அதனை நோக்கி,

''ஒருவண்ணம் சென்றுபுக் (கு) எனக்
கொன் (று)
உரை ஒண் கிளியே!''

(ஒரு வண்ணம்-ஒருவிதமாக; ஒன்று-ஒரு சொல். ஒண்—அழகிய.)

என்று வேண்டுகின்றாள். இதற்கு இரண்டு பொருள் கூறுவர் ஆன்றோர். ''இத்தலையில் தனிமை நினையாதே போய் நிற்கையாலே, போர முதலிகளாய் இருப்பர்; மேன்மேலெனப் பிரம்புகள் விழும். அதனைப் பொறுத்துப்போய் புகுங்கோள்'' என்று அருளிச் செய்வர் பட்டர். ''அன்றிக்கே, வழி நெஞ்சையபகரிக்கும் போக்யதையை யுடைத்து, அதிலே கால்தாழாதே வருந்தி ஒருபடி சென்று புகுங்கோள்'' என்பது பட்டருக்கு முன்புள்ளார் கூறுவது. ஈட்டில் கண்டுள்ள இந்த இரண்டு பொருள்களின் கருத்து வருமாறு: எம்பெருமான் சௌசீல்யமே வடிவெடுத்தவனாயினும் சில சமயம் பரத்துவம் பாராட்டி நிற்பதும் உண்டு. அதற்கேற்ப அவனை நெருங்கவொண்ணாதபடி முதலிகள் பிரம்பும் கையுமாக நின்று 'கெடுபிடி' செய்யவும் கூடும். அப்படி நேர்ந்தாலும் அதனை ஒருவாறு சகித்துக் கொண்டு உள்ளே புக வேண்டும் என்பது முதற்பொருள்: 'செக்கர் வேலைத் திருவண் வண்டூர்' மலை நாட்டுத் திருப்பதி. ஆகவே, வழியெல்லாம் நெஞ்சினைக் கொள்ளை கொள்ளும் பூவியல் பொழிலும் தடாகங்களும் ஆறுகளும் நிறைந்திருக்கும். அவற்றில் கண் செலுத்தினால் அவற்றை அநுபவிக்க வேண்டுமென்று மனம் சென்று பாயுமேயன்றி எம்பெருமானிடம் சென்று சேர முடியாது. எனவே, வழியில் கண் செலுத்தாமல் ஒருவாறு வழியினைக் கடக்க வேண்டும் என்பது இரண்டாவது பொருள்: எம்பெருமானுடைய அடையாளத்தையும்,

''கருவண்ணம் செய்யவாய் செய்யகண்
செய்யகை செய்யகால்
செருஒண் சக்கரம் சங்குஅடை
யாளம் திருந்தக்கண்டே''

(கருவண்ணம்-கரிய நிறம்; செய்ய-சிவந்த, செரு-போர்; இங்கே மாறுபாடு; திருந்தக் கண்டு-நன்கு பார்த்து)

என்று குறிப்பிடுகின்றாள். ஆள்மாறாட்டம் ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமல்லவா?

அடுத்து, ஆழ்வார்நாயகி தன் கண் வட்டத்தில் அகப்பட்ட நாகணவாய்ப் புள்ளொன்றைக் கண்டு.

''திருந்தக் கண்டுஎனக்கு ஒன்றுரை
யாய்ஒண் சிறுபூவாய் !''

(திருந்தக் கண்டு-நன்ருகச் சேவித்து; ஒண்-அழகிய (கண்டுகொண்டிருக்க வேண்டும் அழகு) பூவை-நாகணவாய்ப் புள்.)

என்று விண்ணப்பிக்கின்ருள். திருவண்வண்டூர் எம்பெருமானுடைய திருமேனியின் அழகினை நன்ருகக் கண்டு மீண்டு வந்து தனக்கு உரைக்க வேண்டுமென்பது அவளது வேண்டுகோள். ஒரு பொருளை இரண்டு விதமாகக் காணலாம்; தன் மனத்திற்கு மாத்திரம் தெரிந்தால் போதும் என்று காண்கை ஒன்று; பிறர்க்கும் விரிவாகக் கூறும்படியாகக் காண்கை மற்ருென்று. பின்னதையே வேண்டுகின்ருள் பராங்குச நாயகி. அந்த எம்பெருமானை அடையாளம் கூறுவாள்போல்,

''பெருநதண் தாமரைக் கண்பெரு
நீண்முடி நாற்றடந்தோள்
கருந்திண் மாமுகில் போல்திரு
மேனி அடிகளையே''

(தண்-குளிர்ந்த; நீள்முடி-நீண்ட திருமுடி; நால்-நான்கு; தடந்தோள்-விசாலமான தோள்; முகில்-மேகம்; அடிகள்-எம்பெருமான்.)

இந்நிலையில் வேறு சில அன்னப் பறவைகள் அவளருகே வருகின்றன. அவற்றை நோக்கிப் பேசுவதான பாசுரம் இது:

''அடிகள் கைதொழுது அலர்மேல்
அசையும் அன்னங்காள்!
விடிவை சங்கொலிக் கும்திரு
வண்வண் டூர்உறையும்
கடிய மாயன்தன்னைக் கண்ணனை
நெடுமாலைக் கண்டு
கொடிய தல்வினை யேன்திறம்
கூறுமின் வேறுகொண்டே''

(அடிகள்-திருவடிகள்: அலர்-தாமரைப்பூ ; விடிவு-விடியல்; திறம்-நிலை; வேறுகொண்டு-தனிமையில்.)

திருவண்வண்டூர்ப் பெருமானிடம் சென்று அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு தனிமையில் தன் செய்தி கூற வேண்டும் என்பது ஆழ்வார்நாயகியின் வேண்டுகோள். காலைப் பிடித்துக் கொண்டால் அவன் மறுக்க முடியாத நிலையில் மாட்டிக் கொள்வான் என்பது அவள் நினைப்பு. அந்த எம்பெருமானே அடியார்களின் பகைவர்களை அழியச் செய்வதில் கண் பாராத ஆச்சரியச் செயல் புரிபவனுதலால் 'கடிய மாயன்' என்கின்ருள். அடியார்கட்குக் கையாளாக நின்று தன்னையே கொடுக்கக் கூடியவனுதலால் 'கண்ணன்' என்று குறிப்பிடுகின்ருள். இத்தனைச் செயல்களைப் புரிந்தாலும் 'அந்தோ ஒன்றும் செய்யப் பெற்றிலோம்' என்று குறைபடும்படியான வியாமோகம் உடையவனுதலால் 'நெடுமால்' என்று கூறுகின்ருள்.

இந்நிலையில் சில வண்டினங்கள் பறந்து வருகின்றன. அவற்றைத் தனிமையில் அழைத்துப் பேசுகின்ருள். பாசுரம் இது:

''வேறுகொண் டும்மை யான் இரந்
தேன்வெறி வண்டினங்காள்!
தேறுநீர்ப் பம்பை வடபா
லைத்திரு வண்வண்டூர்
மாறில் போரரக் கன்மதிள்
நீறுஎழச் செற்றுகந்த
ஏறுசே வகனுர்க்கு என்னை
யும்உளள் என்மின்களே''

(வேறுகொண்டு-தனிமையில்; வெறி-வாசனை; தேறுநீர்-தெளிவானநீர்; அரக்கன்-இங்கு, இராவணன்; நீறு-தூசிகள்; சேவகன்-வீரன்).

தம் தலைவர் பெண் பிறந்தார் காரியங்களை யெல்லாம் செய்து தலைக்கட்டி விட்டதாக இருப்பார் என்று நினைத்திருக்கலாம். அங்ஙனம் நடைபெறவில்லை என்றும், காக்கப் பெற வேண்டிய கூட்டத்தில் தானும் ஒருத்தி இருப்பதாகச் சொல்லுமாறும் இரக்கின்ருள். தனிமையாக அழைத்துச் சொன்னதற்கு ஈடு; ''திக்குகள் தோறும் முதலிகளைப் போகவிடா நிற்கச் செய்தே திருவடி கையிலே திருவாழி மோதிரம் கொடுத்து விட்டாப் போலே காணும்'' என்பது. மற்றைய பறவைகளைவிட வண்டுகள் காரியம் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவை என்பதை அறுதியிடுகின்ருள். இவ்விடத்தில் இராமன் சிறிய திருவடியிடம் தனிமையில் அழைத்துப் பேசித் திருவாழியைக் கொடுத்ததாகக் குறிப்பிடுகின்ற,

''ஆண்டுகடந் தப்புறத்தும் எப்புறத்தும்
ஒருதிங்கள் அவதி யாகத்
தேண்டிஇவண் வந்தடைதிர் விடைகொள்திர்
கடிதென்னச் செப்பும் வேலை
நீண்டவனும் மாருதியை நிறையருளால்
முகநோக்கி நீதி வல்லோய்!
காண்டிஎனிற் குறிகேட்டி எனவேறு
கொண்டிருந்து கழற லுற்ருன்''

(தேண்டி-தேடி; அடைதிர்-சேருங்கள்; செப்பும் வேலை-சொன்னபோது; காண்டி எனில்-காண்பாயானல்; குறி-அடையாளம்; வேறுகொண்டிருந்து -தனியிடத்தில் இருந்து; கழறல்-கூறுதல்)

''இனையவா றுரை செயா
இனிதின் ஏகுதிஎனு
வனையுமா மணிநன்மோ
திரமளித் தறிஞ நின்
வினையெலாம் முடிகெனு
விடைகொடுத் துதவலும்
புனையும்வார் கழலினன்
அருளொடும் போயினுன்''

(இனையவாறு - இவ்விதமாக; வனையும்-இழைத்துச் செய்யப் பெற்ற; அருள்-கருணை.)

என்ற கம்பராமாயணப் பாடல்களும் சிந்தித்து மகிழத்தக்கவை. இங்ஙனம் ஆழ்வார் பாசுரங்களைச் சிந்தித்தவண்ணம் மண்டபத்தில் பொழுது போக்குகின்றோம்.

சரியாக மாலை ஐந்தரை மணிக்குக் கோயில் திருக்காப்பு நீக்கப் பெறுகின்றது. கோயில் சிறிய கோயிலாக இருப்பினும் மதிலுக்குப் புறத்தே விசாலமான இடம் உள்ளது. பெருந்திரளாக மக்கள் வந்து குழுமினாலும் அவர்களையெல்லாம் ஏற்கக் கூடிய இடம் அது. முன்னர் வந்து காத்துக் கிடக்கும் பக்தர்களுடன் நாமும் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். நின்ற திருக்கோலத்தில் மேற்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு எழுந்தருளியிருக்கும் பாம்பணையப்பனையும் கமலவல்லி நாய்ச்சியாரையும் சேவிக்கின்றோம். நம்மையும் அறியாமல் ஆழ்வாருடைய பாசுரங்கள் மிடற்றொலியாக வெளிவருகின்றன. இத்திருவாய்மொழி கற்பார், எம்பெருமானுக்கும் அவனடியார்கட்கும் விரும்பத்தக்கவராவர் என்பதும் நம் நினைவுக்கு வருகின்றது. இந்த நினைவுடன்,

''தேவும் உலகும் உயிரும்
திரிந்து நிற்கும்
யாவும் படைத்த
இறைகண்டீர்-பூவில்
திருவண்வண் டூர்உறையும்
தேவாதி தேவன்
மருவண்வண் டூர்துளவ மால்''

என்ற பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் பாசுரத்தையும் ஓதி உளங்கரைகின்றோம். இங்ஙனம் பக்திப் பெருக்கில் திளைக்கின்றபோது,

''வியவஸாயஜ்ஞர் ரட்சணஸ்தைர்யம்
பம்போத்ர தேசஸ்தம்''

(வியவஸாயஜ்ஞர்-இறைவனுகிய அவனுடைய எண்ணத்தை உள்ளபடி அறிந்திருப்பவர்கள், ரட்சண-காப்பாற்றுவதில்; ஸ்தைர்யம்-அடியார்களை எக்காலத்தும் கைவிடமாட்டாத உறுதி, பம்போத்ரம்-பம்பை நதிக்கு வடகரையில் உள்ளது. தேசஸ்தம்-நகரிலே நிலைபெற்று நிற்கும்.)

என்ற ஆசாரிய இருதய சூத்திரம் நம் நினைவிற்கு வர, அதனையும் சிந்திக்கின்றோம். பக்தியனுபவம் கரைபுரண்டோடும் எக்களிப்பில் திருக்கோயில் பிரசாதங்களைப் பெற்று நம் இருப்பிடத்தை அடையச் சித்தமாகின்றோம்.







சென்னை ஸ்ரீ வைணவ சங்கத்தின் 50 ஆம் ஆண்டுப் பொன்விழா, அண்மையில் நிகழ்ந்த பொழுது, அதன்கண் .நீதிபதி திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார், B.A., B.L., மகாவித்வான் - பத்ம விபூஷண் - மகாமகிமோபாதியாயர் திரு. P. B. அண்ணங்கராசாரிய சுவாமிகள் முதலிய பெருமக்கள் பலர், கலந்து கொண்டு சிறப்பித்தல்.

# மந்திரயோகம்

திரு கு. வரதராச பிள்ளை, பி.ஏ., திருச்சி

(முற்றொடர்ச்சி)

இதுகாறும் சிவத்திற்குரிய திருவைந் தெழுத்து மந்திரத்தின் இயல்புகளை விளக்கி வந்த திருமூலர், இனி சத்திக்குரிய ஹ்ரீம் என்ற பீச மந்திரத்தைப் பற்றிக் கூறுகின்றார். பிரண வம் ஓரெழுத்தொரு மொழியாகச் சிறந்து விளங்குவது போல, ஹ்ரீம் என்பதும் ஓரெழுத் தொரு மொழியாகச் சிறந்து விளங்குகின்றது என்று சாக்த சமயம் கூறும்.

''ஓங்காரி என்பா ளவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே யினிதிருந் தாளே''

—திருமந்திரம். 1073.

என்று ஹ்ரீம் பீசத்தின் பெருமையை விளக்கு கின்றார். பிரணவ வடிவான தேவியே பஞ்சக் கிருத்தியங்களுக்கும் தலைவியாவாள். இவளே அகங்கார தத்துவத்தில் விளங்கும்போது சதா சிவன், மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் ஆகியோரைத் தனது அம்சமாக உண் டாக்கிவிட்டு ஹ்ரீம் என்ற பீச மந்திரத்தில் எழுந்தருளியுள்ளாள். அதனால் தேவியை வழி படுவதற்குரிய சிறந்த மந்திரம் ஹ்ரீம் என்ப தாகும்.

ஹ் ர் ர் ம் ஹ்ரீம் என்பது முறையே சிவபீசம், அக்கினி பீசம், மாமாயை, விந்து ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இதுவே புவ னேக்குரிய வடிவம் என்று, புவனைக் கலைஞான தீபம் என்ற நூல் கூறுகிறது.

இனி, ஹ்ரீம் என்ற ஓரெழுத்தொரு மொழியை நெஞ்சில் இருத்தி மனத்தைப் புறம் போகாது தடுத்து ஒருமைப்பாடு பெற்றால் முக்காலமும் அறியலாம். அது மட்டுமல்ல. உள்ளங்கை நெல்லிக் கனி போல் தொலைவி லுள்ள பொருளையும் காணலாம். புவனதேவி யின் பீசமான ஹ்ரீம் என்பது இலட்சம் உருச் செபித்து அவளது திருவடியை நெஞ்சத்தில் நினைத்திருந்தால் இவ்வுலகில் நெடிது காலம் திருவோடு வாழலாம்.

''புவனேஸ்வரியைத் தியானம் செய்யும் முறைமை எப்படியெனின், முன்னர்த் தன்னுள் ளத்தில் யோக விருத்தியினால் தேவியைத் தியா னித்து தேவி பிரணவத்தின் நாமமாயிருக்கின்ற மூன்று அட்சரங்களாக இருக்கின்ற தியானார்த் தம் வாசகவாச்சியம் என்னும் இரண்டின் வழி யாலும் பாவிக்க வேண்டியது. இம்மூன்றெழுத் துங்கூடி ரீங்கார சொரூபமாகிய துரிய மாகும். இவற்றுள் ஹகாரம் தூல சரீரம். ரகாரம் சூட்சும சரீரம், ஈகாரம் காரண சரீரம் என்று சொல்லப்படும். தூலசூட்சும காரண சரீரமாகச் சொல்லப்பட்ட அச்சமஷ்டிக்கும் வியஷ்டிக்கும், அபேதமாகவும் சமாதி காலத் துக்கு முன் ஆதரவுடன் பாவனை செய்து, அதன் பின்னர்க் கண்ணை மூடிக்கொண்டு பிராண அபான வாயுக்களை நாசியின் மத்தியில் சமமாக நிறுத்தி, இந்திரிய விஷயங்களை நிவர்த்தித்து, மத்சரம் முதலிய தோஷங்களை விடுத்து, நிஷ் காம பத்தியோடு சப்த கோஷமில்லாத குகையி லிருந்து தூல சரீராபிமான விஸ்வமாகிய ஹகாராட்சரத்தை ரகாராட்சரத்தோடு சேர்த்தும், சூட்சும சரீராபிமான தைஜஸ மாகிய ரகாராட்சரத்தை ஹ்ரீம் என்ற அட்ச ரத்தோடு சேர்த்தும் வாச்சிய வாசக பேத மின்றி அத்துவிதமாகத் துவாதசாந்த ஸ்தான மாகிய அந்த இடத்தில் ஜெகதீஸ்வரியாகிய என்னை அகண்ட சொரூபமாகப் பாவித்துத் தியா னிக்க வேண்டும். ஒருவன் இவ்வண்ணம் சாட் சாத்கார தியானத்தைச் செய்வானாகில் அவன் உத்தம புருஷனாய் என்னுடைய சொரூபத் தோடு பேதமில்லாமல் ஒன்றாயிருத்தலாகிய தன்மையை அடைகிறான். பராத்பரமாயிருக்கிற என்னை, இப்போது சொல்லி வந்த யோக புத்தி யினால் பார்க்கப் பெறின் அப்பொழுதே அஞ் ஞானத்திற்கும் நாசமுண்டாகிறது.''

தேவி பாகவதம்—ஞானத்தின் சிறப்பு —34வது அத்தியாயம்—நியாசம் செய்யும் முறை —

''மூலாதாரத்தில் ஹகாரத்தையும், இதயத் தில் ரகாரத்தையும், புருவ நடுவில் ஈகாரத்தை யும், சிரசில் ரீங்காரத்தையும் நியாசம் செய்ய வேண்டும்.

**பஞ்சதசாட்சரி —**

இதனையடுத்து மிகச் சிறப்பான ஆனால் இரகசியமாக உபதேசிக்க வேண்டிய பஞ்சத சாட்சரி மந்திரத்தை மறைவாக ஆசிரியர் கூறி யுள்ளார். பாடலின் பொருளைக் குரு முகமாக வும் ஆகமம் கொண்டும் உணர வேண்டும்.

''ககராதி யோரைந்துங் காணிய பொன்மை
அகராதி யோரா றரத்தமே போலும்
சகராதி யோர்நான்குந் தான்சுத்த வெண்மை
ககராதி மூவித்தை காமிய முத்தியே''

மந். 1307.

அகாராதி ஓர் ஐந்தாவன, க ஏ ஈ ல ஹ்ரீம். அகாராதி ஓர் ஆறுவன, ஹ ஸ க ஹ ல ஹ்ரீம். சகராதி ஒரு நான்காவன, ஸ க ல ஹ்ரீம். மூவித்தையாவன (மூன்று கண்டம்), வாக்பவகூடம், காமராஜ கூடம், சத்தி கூடம் ஆம். வாக்பவ கூடம் பொன்னிறம். காமராஜ கூடம் செந்நிறம். சத்தி கூடம் வெண்ணிறமாகும். இம் மந்திரம் பதினைந்து அட்சரங்களைக் கொண்டமையால் பஞ்சதசாட்சரி எனப் பெறும். ஆனந்தலஹரியில் ஒரு பாடலில் ஸ்ரீவித்தைபஞ்சதசாட்சரியின் விளக்கம் கூறப்பெற்றிருப்பதை ஒப்பு நோக்கின் பயனுடையதாகும்.

''அரியதாகும் சிவம் சத்தி மதன் அவனி, பின்பு
ஆதித்தன் இரதி மதனவேள்
பெருகுவாள் இந்திரன், பின்பு பரை மதனன் மால்
பேசின முக்கண்டம் அடைவே
உரியதாம் அந்தத்தின் மாயை மும்முறை அமைத்து
உறும் எழுத்து அடைய உணர்வால்
தெரிவின் நாமத்தினோடும் உனது உறுப்பாம் என்று
செப்பும் நான்மறைகள் உமையே''.

தாயே!
சிவம் — க — வாக்பவ கூடம்—பொன்னிறம்.
சத்தி — ஏ
மதன் — ஈ —
அவனி — ல

சூரியன் — ஹ
சந்திரன் — ஸ—காமராஜ கூடம்—செந்நிறம்
மன்மதன் — க
ஹம்சம் — ஹ
இந்திரன் — ல

பரை — சத்தி கூடம் — வெண்ணிறம்
மன்மதன் —
மால்

''உன்னுடைய இவ்வட்சரங்களுடன் மூன்று புவனேஸ்வரி பீசமான ஹ்ரீங்காரங்களும் ஒவ்வொரு கூடத்தின் முடிவிலும் மேற்கூறியவண்ணம் சேர்க்கப்பட்டு மந்திரத்தில் அவயவங்களாக அமைகின்றன.

பஞ்சதசாட்சரி மந்திரத்தின் நான்காவது சந்திரகலா கூடம் ரமா பீசமாகிய ஸ்ரீம் என்றும், அதுவும் சேர்ந்தால்தான் பதினாறு கலைகளுடன் இம்மந்திரம் பரிபூர்ணமாகிறது என்றும், அதனால் இதற்கு ஸ்ரீவித்யா என்று பெயர் என்றும் கூறுவர். இந்நான்கு கூடங்களும் முறையே சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியமாகவும் கொள்க.

இன்னொரு பாடலில் ஆசிரியர் இம்மந்திரப் பயனைக் கூறுகிறார்.

''தானே அமைந்தவம் முப்புரந் தன்னிடைத்
தானான மூவுரு வோருருத் தன்மையள்
தானான பொன்செம்மை வெண்ணிறத் தாள்கல்வி
தானான போகமும் முத்தியும் நல்குமே''

மந். 1074.

முற்கூறிய முப்புரங்களில் தானாகவே அமைந்த திரிபுரா தேவியே கலைமகள், திருமகள், மலைமகளாகிய மூவரையும் அடக்கிக் கொண்ட சதாசிவ நாயகியாவாள்; அவளே பொன் செம்மை வெண்மை ஒளியுடையவள். அவளே வெண்ணிறமுடைய கலைமகளாகக் கல்வியையும், பொன்னிறமுடைய திருமகளாகப் போகத்தையும், செந்நிறமுடைய மலைமகளாக முத்தியையும் அளிப்பாள். பஞ்சதசாட்சரி செபத்தால் சாதகர் முப்பயன்களையும்பெறுவர்.

**நவாக்கரி :**

பஞ்சதசாட்சரி போன்றே நவாக்கரி மந்திரம் திருமந்திரத்தில் பேசப் பெறுகின்றது. நவ+அக்கரி=நவாக்கரி என்பது ஒன்பது அட்சரங்களைப் பீசமாகக் கொண்ட தேவி மந்திரமாகும். கிலீம், ஸ்ரீம், ஹ்ரீம், ஐம், கௌம், க்ரீம், ஹௌம், ஔ, ஸௌம் என்பன நவாக்கரியின் பீசங்களாகும்.

''சௌமுதல் அவ்வொடு ஹௌவுட னுங்கிரீம்
கௌவு ளுமையுளுங் கலந்திரீம் சிரீமென்
றெவ்வில் எழுங்கிலீ மந்திர பாதமாச்
செவ்வுள் எழுந்து சிவாய நமவென்னே:''

மந். 1320.

சௌம் ஔம் ஹௌமுடனாகக் கிரீம் கௌம் ஐம் கலந்து ஹ்ரீம் ஸ்ரீம் என்று கிலீம் மந்திரத்தை மூலமாகக் கொண்டு செம்மையாக உள்ளே அடியிலிருந்து நினைந்து சிவாய நம எனக் கூற வேண்டும். செவ்வுள் எழுதலாவது, கிலீம்ஸ்ரீம் ஐம் கௌம், கிரீம்ஹௌம் ஔ ஸௌம் என எழுதல். செய்யுளாதலின் பீசங்கள் பாடலில் மாறி அமைந்துள்ளன என்றறிக.

இங்கு விமர்சனப் பிரணவங்களாக உள்ள ஸ்ரீம் ஹ்ரீம் கிலீம் ஐம் சௌம் ஆகிய ஐந்தும் இடம் பெற்றுள்ளன. இவற்றுடன் வேறு சத்தியுள்ள பீசங்களோடு பரமேசுவரி மந்திரமான சிவாயநம என்பதையும் இது கொண்டு உள்ளது. சிவய நம என்பது சிவ பஞ்சாட்சரம். சிவாயநம என்பது சத்தி பஞ்சாட்சரம். வகாரம் நீண்டு தீர்க்கமாக இருப்பதால் சத்தி பஞ்சாட்சரம் ஆகும். இஃது ஆகமத்தில் கண்ட நவாக்கரியாகும். நவாக்கரியைக் கிலீம் முதலாகச் செபிப்பதில் இம்மைப் பயனாகிய கல்வியும், மறுமைப் பயனாகிய ஞானமும் உண்டாகும்.

''நவந்தரும் ஞானமும் கல்வியும் எல்லாம்''

என்பது ஆசிரியர் வாக்கு.

இனி, இப்பீசங்களை மாறி மாறி ஒவ்வொன்றை முதலாக அமைத்துச் செபிப்பதில் ஒன்பதாக விரியும். ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் கௌம்

கிரீம்ஹௌம் ஸௌம் கிலீம் சிவாயநம என்பது இரண்டாவது பிரயோகமாகும். ''நினைத்திடும் அச்சிரீம் அமக்கிலீம் ஈறு'' என்ற ஆசிரியர் வாக்கால் ஸ்ரீம் முதல் கிலீம் ஈறாக நினைக்க வேண்டும் என்பது புலனாகிறது. அவ்வாறு நினைத்து வழிபடுவோர்க்கு நினைத்தவை கைகூடும். மேலும் பரந்து செல்லும் சூரியனது கதிரைப்போன்ற சாதகரது புகழ் உலகெங்கும் பரவும்.

ஹ்ரீம் ஐம் சௌம் கிரீம் ஹௌம் ஔம் கிலீம் ஸ்ரீம் என்பது மூன்றாவது பிரயோகம் ஆகும்.

''பாரணி யும் ஹ்ரீம் முன்ஸ்ரீ மீறும்'' ஹ்ரீம் முதல் ஸ்ரீம் ஈறாகத் தியானிக்கில்நாட்டை ஆளும் மன்னரும் சாதகரின் வசமாவர். அவருக்குப் பகையானவரும் இல்லை. அவ்வாறான தேவியை நினைத்து வழிபட்டு உலகப் பற்றினை நீங்க வேண்டும் என்று ஆசிரியர் உபதேசிக்கிறார். தேவியின் திருவடியை எண்ணுபவர் திருவடிஞானம் பெறுவர்.

ஐம் கௌம் கிரீம் ஹௌம் ஔம் சௌம் கிலீம் ஸ்ரீம் ஹ்ரீம் என்பது அடுத்த பிரயோகம் ஆகும்.

''ஐம் முதலாக அமர்ந்திரீ மீறும்''

இம்மந்திர சாதகம் செய்பவர் சாபானுக்கிரகம் உடைய நிறைமொழி மாந்தராகத் திகழ்வர்.

''கௌ முதல் ஐமது ஈறாக'' அஃதாவது கௌம் கிரீம் ஹௌம் ஔம் சௌம் கிலீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் என்று செபிக்கில் சாதகரிடம் உள்ள காமம் வெகுளி மயக்கமாகிய முக்குற்றங்களும் நீங்கி நலம் பெறுவர். அவரது வினைகளும் போய்ப் புண்ணியராவர். அவர் பிறர்க்கும் நன்மையே புரிந்து இனியராய் இருப்பர்.

கிரீம் ஹௌம் ஔம் சௌம் கிலீம் ஸ்ரீம் ஐம் கௌம் எனச் செபிக்கின் உபாசகர் எண்ணியபடி மழை பெய்து வறுமை நீங்கும். இம்மந்திர சாதனை செய்பவர்க்குப் பகை கோபம் துக்கம் ஆகியவை இல்லை. இவரிடம் பரவி எழுகின்ற உள்ளொளி அவர் வாழும் இடத்தில் படர்ந்து அப்பகுதியில் வாழ்கின்றவர்களும் அஞ்ஞானம் கெட்டு ஒளி பெற்று ஞானமயமாக வாழ்வார்கள்.

ஹௌம் ஔம் சௌம் கிலீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் கௌம் கிரீம் என்பது மற்றொரு பிரயோகம் ஆகும்.

''ஒளியது ஹௌமுன் கிரீமது ஈறும்''

இவளே சதாசிவ நாயகியாவாள். இவளே எல்லா உலகத்தையும் கொண்ட ஈசானமூர்த்தி வடிவுடன் சீவர்களுள்ளும் இடம் பெற்று விளங்குவாள். அவளை மண்ணிலும் நீரிலும் ஒளியிலும் காற்றிலும் ஆகாய மண்டலத்திலும் கண்ணிலும் உடலிலும் காணலாம்.

''காணலு மாகுங் கலந்துயிர் செய்வன
காணலு மாகும் கருத்து ளிருந்திடிற்
காணலு மாகுங் கலந்து வழிசெயக்
காணலு மாகுங் கருத்துற நில்லே''

மந். 1352.

அப்பெருமாட்டியை அடைய வேண்டும் என்று ஒரே விருப்புடன் கூடி நிற்பவரிடம் சீவபோதமின்மையால், அவள் வெளிப்பட்டருளுவாள். ஆகையால் அவளிடம் என்றும் பிரியாத வண்ணம் கருத்துப் பொருந்தி நிற்பாயாக என்று ஆசிரியர் உபதேசம் செய்கிறார். அவ்வழி சாதனை செய்வார்க்கு ஏழுலகும் ஒன்றாகக் கலந்து விளங்கும். அவர் எல்லா உயிர்களிடமும் பொருந்தித் தானாகக் காண்பர். பூமியிலுள்ள எல்லா இயல்புகளையும் உள்ளவாறு அறிவர். அவர்கள் சீவர்களை எய்திய வலிய வினைகளை விலக்கும் உண்மைப் பொருளாகவும் நிற்பர்.

ஔம் சௌம் கிலீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் கௌம் கிரீம் ஹௌம் என்பது ஔம் முதல் ஹௌம் ஈறாகவுள்ள அடுத்த பிரயோகம் ஆகும். இவ்வாறு மந்திர சாதனை செய்து மூலாதாரம் முதல் பிரமரந்திரம் வரை சோதியாக விளங்கும் அமுதேசுவரியிடம் மூலவாயுவை மேலே கொண்டு வந்து பொருந்தும்படி செய்யின் நாடோறும் சாதகர் புதுமைகளைக் காண்பர். அவரது உடலுக்கும் அழிவில்லையாகும். மூலாதாரத்திலிருந்து மேலோங்கி எழும் ஒளியை அறிந்த பின் ஒரு விதமான கேடும் அவரை வந்தடையாது. பேரொளியைக் கண்ட பின், தேசம் முதலிய இடவேறுபாடும் அவருக்கு இல்லையாகும். பின் காலை மாலை என்ற நாள் வேறுபாடும் அறும். அதுவும் அற்றபின் கீழ் மேல் முன் பின் என்ற தகுதி வேறுபாடும் இல்லையாம்; ஆதலால் அமுதேசுவரியைப் பொருந்திக் கால தேசம் கடந்து நிற்க வேண்டும்.

சௌம் கிலீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் கௌம் கிரீம் ஹௌம் ஔம் என்பது நவாக்கரியின் ஒன்பதாவது பிரயோகமாகும். இத்தேவியே ஆகாயம் போல உருவின்றி வியாபகமாய் நிற்பவள். எல்லாப் பொருளுமாகி அவை அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டவளும் அவளேயாகும். எல்லா அண்டங்களும் தானேயானவள்.

''தானே வெளியென எங்கும் நிறைந்தவள்
தானே பரம வெளியது வானவள்
தானே சகலமு மாக்கி அழித்தவள்
தானே அனைத்துள அண்ட சகலமே''

மந். 1361.

அண்டங்கள் அனைத்திலும் விரிந்திருந்தாலும் பிண்டமாகிய உடம்பினுள்ளும் ஞானம் விளங்கும் பெருவெளியைத் தனக்கு இடமாக்கிக் கொண்டவள் என்று உணர வேண்டும். அவள் கண்டத்துக்கு மேல் கலந்திருத்தலை உணர்ந்து

அங்கே வழிபட வேண்டும். அவ்வாறு வழிபடா விடில் தலைச் சுமையாக உலகில் இருந்து கெடுவர்.

மந்திர செபத்தைக் கூறி வந்த ஆசிரியர் மந்திரமில்லாத செபத்தைக் கூறுகிறார். மந்திர மில்லாச் செபம் அசபை எனப் பெறும். செபிக்கப்படாமல் பிராணனொடு இழைந்து இயங்கும் மந்திரமாதலின் இப்பெயர் பெற்றது. இதை ஹம்ச மந்திரம் என்றும், மதயானை போன்ற இந்திரியங்களைத் தன் வழிப்படுத்த லால் அங்குசம் என்றும் கூறுவர். மூச்சுக் காற்று ஹ என்ற ஒலியுடன் வெளிப்படுகின்றது. ஸ என்ற ஒலியுடன் உள் நுழைகின்றது. இதுவே ஹம்ச மந்திரமாகிறது. இதனை எல்லா உயிர்களும் செபிக்கின்றன. இவ்வாறு பிராணன் வெளியே செல்லாது சிரசின் மேல் அமைவதே அசபாவித்தையாகும்.

மந்திரங்களைக் கூறிய ஆசிரியர் மந்திர வடிவான சக்கரங்களைப் பற்றித் திருமந்திரத் தில் கூறுகிறார். திருவம்பலச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதி சக்கரம், நவாக் கரி சக்கரம், முதலியவற்றைச் சிறப்பாக ஆசிரியர் குறிப்பிட்டு அவற்றால் எய்தும் பயனை யும் விளக்குகிறார். மேலும் ஒளி மயமான எதிரொளிச் சக்கரத்தைப் பேசுகிறார். சிவ சக்தி மந்திரவடிவாய்ச் சக்கரத்தில் எழுந்தருளி யிருப்பதாகப் பாவித்து வழிபடுவது இறைவனை அடைவதற்குரிய ஒரு புறவழிபாடாகும்.

**திருவம்பலச் சக்கரம் :**

மந்திர ராசனாகிய திருவைந்தெழுத்துக்கு அமைந்த சக்கரங்கள் பலவுள. அவற்றுள் திருவம்பலச் சக்கரம் என்பது ஒன்று. அது சிதாகாயப் பெரு வெளியில் நடிக்கும் கூத்தப் பெருமான் சத்தியோடு விளங்குவதாகவுள்ள இயந்திரமாகும். இயந்திரம் அல்லது சக்கரம் என்பது கோடுகள் குறுக்கும் நெடுக்குமாக இட்டு எழுத்துக்களை அல்லது பீசங்களை அக் கட்டங்களில் அமைத்து வழிபாடு செய்வதற்குச் சாதனமாக இருப்பதாகும். செம்பு, வெள்ளி, பொன் முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட தகடுகளில் சக்கரங்கள் எழுதுவது பண்டைய மரபாகும்.

திருவம்பலச் சக்கரம் அமைப்பதற்கு முதலில் குறுக்கும் நெடுக்குமாக ஆறு ஆறு கோடுகள் இட்டு இருபத்தைந்து அறைகளாக அல்லது கட்டங்களாகச் செய்து கொள்ள வேண்டும். அக்கட்டங்களில் சிகாரம் முதலாகச் சிகாரம் ஈறாகத் திருவைந்தெழுத்தை எழுத வேண்டும். அப்போது,

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வா | ய | ந | ம |
| ம | சி | வா | ய | ந |
| ந | ம | சி | வா | ய |
| ய | ந | ம | சி | வா |
| வா | ய | ந | ம | சி |

என்ற முறையில் இருபத்தைந்து கட்டங்களில் திருவைந்தெழுத்து மாறி மாறி அமையும்.

''ஆயுஞ் சிவாய நமமசி வாயந
வாயு நமசிவா யயநம சிவாயந
வாயுமே வாய நமசியெனு மந்திர
மாயுஞ் சிகாரந் தொட்டந்தத் தடைவிலே''
மந். 923.

மேலும் அக்கட்டங்களில் வரிசையாகக் கிரந்த எழுத்துக்களில் க்ஷ காரம் நீங்கிய ஐம்பது எழுத்துக்களையும் கட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஈரெழுத்தாக அடைக்க வேண்டும். சக்கரத்தை சுற்றிய பிரணவ வட்ட மகாரத்தில் க்ஷ வ்வை அமைக்க வேண்டும். அச் சக்கரத்தைச் சுற்றி வட்டங்கள் அமைக்க வேண்டும். வெளி வட் டத்தில் ஹர ஹர என்றும், அதனை அடுத்த உள் வட்டத்தில் ஹரி ஹரி என்றும், அதற்கு அடுத்த உள் வட்டத்தில் ஹம்சம் என்ற அசபை யும் இட வேண்டும். சக்கரத்தின் கோட்டின் முடிவில் சூலம் இடப் பெறவேண்டும். சூலத் தின் நுனியில் சத்தி எழுத்தாகிய ஹ்ரீம் என்ப தையும் சூலங்களுக்கிடையில் அகார இகார உகார எகார ஒகாரமாகிய ஐந்தெழுத்தை இட வேண்டும். அதற்கு மேல் சிவசிவ என்ற எழுத்துக்களைச் சக்கரம் சூழ ஓர் உள் வட்டம் இட்டு அமைக்கவும். இவ்வாறு அடைப்பின் சக்கரம் முறையாக அமைந்துவிடும். மேலும் ஐந்தெழுத்தை அடைத்த கட்டங்களில் நிலம், நீர், தீ, காற்று, விண்ணாகிய ஐம்பூதங்களுக் குரிய எழுத்துக்களையும், அவற்றுக்குரிய உருவங் களையும் அடைக்க வேண்டும். ஐந்தெழுத்து, தொழிற்படும்போது இவை தேவைப்படும் என்க.

''அடைவினில் ஐம்பதும் ஐயைந் துறையின்
அடையும் அறையொன்றுக் கீரெழுத் தாக்கி
அடைய மகாரத்தில் அந்தமாம் க்ஷவ்வும்
அடைவின் எழுத்தைம்பத்தொன்றும்அமர்ந்ததே.''

''அமர்ந்த அரகர வாம்புற வட்டம்
அமர்ந்த அரிகரி யாமத னுள்வட்டம்
அமர்ந்த அசபை யாம்அத னுள்வட்டம்
அமர்ந்த இரேகையும் ஆகின்ற சூலமே.''

''சூலத் தலையினில் தோற்றிடுஞ் சத்தியுஞ்
சூலத் தலையினிற் சூழும்ஓங் காரத்தால்
சூலத் திடைவெளி தோற்றிடும் அஞ்செழுத்
தாலப் பதிக்கும் அடைவது வாமே.''

''அதுவாம் அகார இகார உகாரம்
அதுவாம் எகாரம் ஒகார மதஞ்சாம்
அதுவாகுஞ் சக்கர வட்டமேல் வட்டம்
பொதுவாம் இடைவெளி பொங்குநம் பேரே''

''பேர்பெற் றதுமூல மந்திரம் பின்னது
சோர்வுற்ற சக்கர வட்டத்துட் சந்தியில்
நேர்பெற் றிருந்திட நின்றது சக்கரம்
ஏர்பெற் றிருந்த இயல்பிது வாமே''

''இயலுமிம் மந்திரம் எய்தும் வழியின்
செயலும் அறியத் தெளிவிக்கு நாதன்
புயலும் புனலும் பொருந்தங்கி மண்விண்
முயலும் எழுத்துக்கு முன்னா இருந்ததே''

—மந். 924—929

இனி எண்ணிய கருமங்கள் கைகூடுவதற்கு நமசிவாய என்ற ஐந்தெழுத்தைப் பிரயோகிக்க வேண்டும். ஆனால் ஐந்தெழுத்தைப் பிரயோ கிக்கச் சிகாரத்தை அறிந்தவர்க்கேயாகும். *

# *திருநின்ற செம்மை

[ ந. ரா. முருகவேள், M.A., M.O.L. ]

**முன்னுரை :**

''திருநின்ற செம்மை'' என்பது திருநாவுக்கரசர் பெருமானின் சிறப்பைக் குறிப்பதற்கு எழுந்த ஓர் அடைமொழித் தொடர். 'திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட திருநாவுக்கரசன்றன் அடியார்க்கும் அடியேன்' எனவரும் திருத்தொண்டத் தொகையுள், சுந்தரமூர்த்தி சுவாமிகளால் இவ்வடைமொழித் தொடர் வழங்கப் பெற்றுள்ளது. 'அடைமொழிகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்துத் தேர்ந்தெடுத்துத் திறந்தெரிந்து வழங்குதலிற்றான், ஒரு சிறந்த புலவனின் நுண்ணுணர்வு புலனாகும்' (The choice of adjectives is a fine test of a great poet's originality) என அறிஞர்கள் கூறுவர். இனிமை மிக்க பாடல்கள் இயற்றுதலில் வல்லவராகப் புலவர் பெருமக்களாற் புகழ்ந்து போற்றப் பெறும் ''கபிலரது பாட்டு''களுள் ஒன்றாகிய ''குறிஞ்சிப்பாட்டு'' என்னும் நூலின்கண்,

''ஒண்செங் காந்தள்
விரிமலர் அவரை
தேங்கமழ் பாதிரி
பெருந்தண் சண்பகம்
நீள்நறு நெய்தல்
முள்தாள் தாமரை
நறுந்துணர்க் கொகுடி
கொங்குமுதிர் நறுவழை
சுடர்ப்பூந் தோன்றி
குவியிணர்க் கொன்றை''

என்றாற்போலப் பல்வேறு மரஞ்செடி கொடிகள், அவ்வவற்றிற்கேற்ற அடைமொழிகளால் திறந்தெரிந்து குறிப்பிட்டு விளக்கப்பட்டிருத்தல், கபிலரின் நுண்ணுணர்வைப் புலப்படுத்துதல் காணலாம். இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து காணுங்கால், 'திருநின்ற செம்மை' என்னும் அடைமொழியானது, அதனை வழங்கிய சுந்தரமூர்த்திகளின் நுண்மாண் நுழைபுலனையும், அதனைப் பெறுதற்குரியராகப் பிறங்கிய திருநாவுக்கரசரின் சிறப்பினையும், தெற்றென விளக்குவதாதல் தெளியப்படும்.

**அடைமொழிச் சிறப்பு :**

அடைமொழிகள் ''தினையளவு போதாச் சிறு புல் நீர், நீண்ட பனையளவு காட்டும்படியனவாகும்''. திரு வி.க. அவர்களின் சிறப்புகளையெல்லாம் ''தமிழ்த் தென்றல்'' என்னும் ஒரு சிறிய அடைமொழித் தொடர் தன்னுள் அடக்கிக் காட்டி விடுகின்றது. காந்தியடிகளின் கடலனைய மாட்சிமைகளை யெல்லாம் தாகூர் 'மகாத்மா' என்னும் சிறிய அடைமொழியில் அடக்கிக் கூறி விளக்கிவிட்டார். அங்ஙனமே தன்னிகரற்ற கவிஞரேறாகிய தாகூரின் பெருமைகளையெல்லாம் 'குருதேவ்' எனக் குறிப்பிட்டுக் காந்தியடிகள் சுருக்கமுற விளக்கினார். திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர்பால் தாம் கொண்டிருந்த பேரன்பினையும், பெருமதிப்பினையுமெல்லாம் ''அப்பர்'' என்னும் சிறு சொல்லாற் புலப்படுத்திவிட்டார். 'அப்பர்' என்னும் சொல்லுக்குத், தேசத்தந்தை (Bapuji, The Father of the Nation) என்பது பொருள். இச்சிறிய சொற்களில் எத்துணைக் கருத்துச் செறிவும் விரிவும் அமைந்து காணப்படுகின்றன! இவ்வாறு விரிந்த பல பெருங் கருத்துக்களை மிகவும் சுருங்கிய சொற்களிற் செறித்து வைத்துத் திறம்பட விளக்குதல், மிக மேலான வித்தகர்கட் கல்லால் ஏனையோர்க்கு அரிதாகும். இத்தகைய வித்தகம் அமையச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், அருளிச் செய்த சிறந்ததொரு தொடரே 'திருநின்ற செம்மை' என்பது.

**உன்னியுணர் பொருள்கள் :**

அடைமொழிகளை வழங்குதல் எத்துணைக் கடினமோ, அத்துணையளவு அதன் பொருட் குறிப்பு நுட்பங்களை உணர்தலும்கூட, மிகவும் கடினமானதேயாகும். 'கண்ணே மணியே' எனத் தாய் தன் குழவியைப் பாராட்டுங்கால், அச்சொற்கள் என்னென்ன பொருள்களை உணர்த்துகின்றன என்பதனை, அத்தாயே அறிந்துணர வல்லளன்றிப் பிறர் உணர்தல் இயலுமோ? அங்ஙனமே,

''மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே

---

* திருநாவுக்கரசர் பெருமானின் ''சித்திரைச் சதய விழா'' நிகழ்ச்சியினை முன்னிட்டு, எழுதப் பெற்ற இக்கட்டுரை இங்கு வெளியிடப் பெறுகின்றது. — ஆசிரியர்.

மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழ்இருங் கூந்தற் றையால் நின்னை,''

எனக் கோவலன் கண்ணகியைப் பாராட்டிய புகழுரைகள், நம்மனோர்க்கு வெறுஞ் சொல்லாய்க் கழிவதன்றி, அவன் எய்தி யிருக்கற்பால உளநெகிழ்ச்சி உணர்ச்சித் திறங்களை யெல்லாம் நம்பக்கல் எய்துவிக்குங்கொல்லோ? இதுபற்றி யன்றோ, ஆசிரியர் தொல்காப்பியர் தாமும் ''உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே'' என அருளிச் செய்வாராயினர்! ''பொருளது புரைவே புணர்ப்போன் குறிப்பின் மருளற வரூஉம் மரபிற் றென்ப'' எனப் பேராசிரியர் சுட்டியிருத்தலும் ஈண்டைக்கு உணரத்தகும். எனவே, ''எண்ணம் மிக்கான்'' எனச் சேக்கிழார் சுவாமிகள் சிறந்தெடுத்தோதும் சுந்தர மூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசரைப்பற்றித் 'திருநின்ற செம்மை' என்னும் தொடர் மொழியாற் குறிப்பிட்டு எண்ணிய எண்ணங்களையெல்லாம், இன்னவை என அவ்வாறே எண்ணியறிதல் எத்துணையும் நமக்கு இயல்வதன்று. ஆயினும், அவற்றை இன்னவையாகலாம் என உன்னம் (யூகம்) செய்து, ஓராற்றான் உணர, இயன்ற அளவு முயலுதலில் இழுக்கொன்று மில்லை யாதலின், அதுபற்றிச் சிறிது கருதி உணர்ந்து மகிழ்வோம்.

## (1) திருவேடத்தியல்பு :

திருநாவுக்கரசரை நினைவார் எவர்க்கும், அவர்தம் சிவவேடப் பொலிவழகே, மனக்கண் முன்னர், முதற்கண் தோன்றும். இடையறுப் பேரன்பும், மழைவாரும் இணைவிழியும், உழவாரத் திண் படையறுத் திருக்கரமும், சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும், நடையறுப் பெருந்துறவும், ஞானப்பாடற் றொடையறுச் செவ்வாயும் உடைய திருநாவுக்கரசரின், சிவவேடப் பொலிவழகு எவர் நெஞ்சையும் பிணிக்கவல்லதாகும். திருநாவுக்கரசரை நாம் நேரிற்கண்டறியோமாயினும், சிவனடியார்களின் இயல்புகளையோ, அன்றிச் சிவவேடத்தின் சிறப்பினையோ பற்றி நினைக்குங்காலெல்லாம், திருநாவுக்கரசரை நாம் பெரிதும் நினைவு கூர்கின்றோம். ஆதல் பற்றியே ''இனி பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுவரன் எனக் கண்டு வழிபடுக என்றது'' எனவரும் சிவஞானபோதப் பகுதியின்கண், சிவவேடத்தின் இயல்பினை விளக்குமிடத்து,

''தூயவெண் நீறு துதைந்தபொன்
மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும்
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே'' (1)

''சிந்தை இடையறா அன்பும்
திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாங் கருத்தும்
கைஉழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும்
வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத்
தரசும் எதிர்வந் தணைய'' (2)

''கண்ட கவுணியக் கன்றும்
கருத்திற் பரவும்மெய்க் காதல்
தொண்டர் திருவேடம் நேரே
தோன்றிய தென்று தொழுதே'' (3)

என்று போதரும் பெரிய புராணச் செய்யுள்கள் மூன்றனை மேற்கோளாகக் காட்டியருளும் சிவ ஞானசுவாமிகள், அம்மூன்றனையும் திருநாவுக்கரசர் பெருமான் ஒருவரைப் பற்றியனவாகவே அமைய எடுத்துக் காட்டியருளினர் போலும்! மேலும், ''கருத்திற் பரவும் மெய்க்காதற் றொண்டர் திருவேடம் நேரே தோன்றியது'' எனத் திருஞான சம்பந்தர் தாமே, திருநாவுக்கரசரைத் தொழுதனர் எனச் சேக்கிழார் பெருமான் சிறந்தெடுத்துக் கூறியிருத்தலும் சிந்தித்தற்குரியது. இத்தகைய திருவேடத்தின் இயல்பினையே 'திருநின்ற செம்மை' எனச் சுந்தர மூர்த்திகள் விதந்து வியந்து புகழ்ந்தனர் போலும்!

## (2) மனமொழிமெய்கள் மாறுகாமை :

இனி, 'செம்மை' என்பதற்கு வேறு பொருள்களும் கொள்ளலாம். தமிழ்மொழியின் தனிப்பெருஞ் சிறப்பினை விளக்கலுறுவார் அனைவரும், உள்ளத்தின் தன்மை 'உண்மை'—வாயின் தன்மை 'வாய்மை' —மெய்யின் தன்மை 'மெய்ம்மை' எனத் தமிழின்கண் அமைந்துள்ள அரிய சொல்லமைப்பு முறையினையும், அதன் உயரிய குறிக்கோளையும் போற்றிப் புகழ்ந்துரைப்பர். இங்ஙனம் உண்மை-வாய்மை-மெய்ம்மை என அதனதன் இயல்பினைத் தனித்தனியே குறிப்பிடாமல் மூன்றனையும் ஒருங்கே சுட்டலுறின், அங்ஙனம் சுட்டுதற்கு அமைந்த சொல்லே 'செம்மை' என்பது எனலாம். 'வனப்பானது பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்டவழிப் பெறுவதோர் அழகு' எனப் பேராசிரியர் விளக்கியிருத்தல் போல்வது இது!

''இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு''

என வரும் திருக்குறள் உரையின்கண் ஆசிரியர் பரிமேலழகர் ''செம்மை; கருத்தும் சொல்லும் செயலும் தம்முள் மாறுகாமை'' என விளக்கியிருத்தலும் ஈண்டு உளங்கொளத்தகும். எனவே மனம் மொழி மெய் என்னும் முக்கருவிகளும் தம்முள் மாறுகாமல், திருநாவுக்கரசர்க்குச் சிவ வழிபாட்டில் உறைத்து நின்ற திறத்தினையே 'திருநின்ற செம்மை' எனச் சுந்தரர் வியந்து பாராட்டினர் என்றலும் அமையும்.

''மையற்றுறை ஏறி மகிழ்ந்தலர்சீர்
வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்
விரவுஞ் சிவசின்னம் விளங்கிடவே

எய்துற்ற தியானம் அருவுணர்வும்
ஈறின்றி எழுந்திரு வாசகமும்
கையிற்றிக மும்உழ வாரமுடன்
கைக்கொண்டு கலந்து கசிந்தனரே''

எனச் சேக்கிழார் பெருமான், திருநாவுக்கரசர் சிவசின்னங்கள் விளங்க, தமது மனத்தின்கண் தியானம் அரு உணர்வும், வாயின்கண் ஈறின்றி எழும் திருவாசகமும், கையின்கண் உழவாரமும் கொண்டு, முக்கருவிகளும் தம்முள் மாருகாமல் ஒத்துநிற்கத் திருப்பணி செய்தமையினை, நிரல் நிறை அணி அமைய விளக்கியிருத்தல் அறிந்தின் புறற்பாலது. மேலும், ஈண்டு 'மெய்யுற்ற திருப்பணி' என்பது உண்மைத் தொண்டு எனவும், உடற்ருெண்டு எனவும் இருபொருள்பட அமைந்த நயமும் போற்றத்தகும்.

## (3) ஒழுக்க விழுப்பம் :

இனி, 'செம்மை' என்பதற்கு ஒழுக்கம் எனவும், அறம் எனவும் குறிப்புப் பொருள் கொள்ளுதல் அமையும். திருநாவுக்கரசர் சமண சமயம் சேர்ந்திருந்தபோது, இந்நாளிலும் ஒரு சிலர் கூறிவருதல்போல, 'ஒழுக்கமே போதும். கடவுளுணர்ச்சி வேண்டா' எனக் கருதியிருந்திருத்தல் கூடும். இறைவனுல் ஆட்கொள்ளப் பெற்ற பிறகே, 'இறைவனுணர்ச்சியில்லாத ஒழுக்கம் ஒரு சிறிதும் பயன் இல்லாதது' என்னும் உண்மையை அவர் உணர்ந்தாராகல் வேண்டும்.

''நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்ருய்'' (1)

''புந்திவட்டத் திடைப் புக்கு
நின்ருனையும் பொய் என்பனே'' (2)

''கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியே னுகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடனிருந் தறிதி என்று
வெள்கினேன் வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட் டேனே'' (3)

என்பன போன்று வரும் அவர்தம் திருமொழிகளால் இவ்வுண்மை புலனுகும். இறைவனுணர்ச்சியின்றி வெறும் ஒழுக்கம் மட்டுமே அமையுமெனின், இயற்கை நெறி சிறிதும் பிறழாது தத்தமக்கு அமைந்த வகையில் அன்று தொட்டு இன்றளவும் தவருது நடந்து வரும் விலங்குகள் தாமே விழுப்பம் உடையனவாகக் கருதப்பெறுதல் வேண்டும் எனவே, இறைவனுணர்ச்சியோடு கூடிய ஒழுக்கமே ஒழுக்கம் (திருநின்ற செம்மையே செம்மை) ஆகும் என்று, திருநாவுக்கரசர் பெருமான் தெளிந்துணர்ந்து வாழ்ந்துகாட்டினுர். அச்சிறப்புப் பற்றிச் சுந்தர மூர்த்திகள் ''திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசர்'' எனப் போற்றியுரைப்பாராயினர் எனக் கொள்ளுதலும் பொருந்தும் எனலாம்.

## (4) அறத்திறம் :

இங்ஙனமே, திருநாவுக்கரசர் தமது இளமையில் ''தயாமூல தன்மம்'' என்னும் சமணர் கொள்கையைத் தழுவி, 'ஒருவன் நற்செயல்களை—கடமைகளை—அறங்களைச் செய்தாலே போதும், கடவுளுணர்ச்சியும் வழிபாடும் உடையனுதல் வேண்டுவதில்லை' என்னும் கொள்கையுடையராக ஒழுகி வந்தனர் போலும். திருநாவுக்கரசர் தமது இளமைக் காலத்திலேயே,

''காவளர்த்தும் குளந்தொட்டும்
கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன
மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக
நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத
ஈகைவினைத் துறைநின்ருர்.''

ஆயினும், அவ்வறச் செயல்கள் இறையுணர்ச்சியோடு கூடிய உயரிய நோக்கினவாய் நிகழ்ந்தில என்பது,

''தேசநெறி, நிலையாமை
கண்டறங்கள் செய்வாராய்,
ஆசிலறச் சாலைகளும்
தண்ணீர்ப்பந் தரும் அமைப்பார்''

எனச் சேக்கிழார் சுவாமிகள் கூறுதலாற் பெறப்படும். இறைவனுல் ஆட்கொள்ளப் பெற்ற பிறகே, பசுபுண்ணியம் பதிபுண்ணியங்களுக்குள்ள இடையீடும், ''அரன் அடிக்கு அன்பு செய்கை மாண்பு அறம்.'' ''அரன்றன் பாதம் மறந்து செய்அறங்கள் எல்லாம் வீண்செயல்'' ''அரனடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்—பரனடிக்கு அன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்'' என்பன போன்ற உண்மைகளும், திருநாவுக்கரசர்க்கு விளங்கினவாதல் வேண்டும். ஆட்கொள்ளப் பெறுநிலையில் 'இரப்பவர்க்கு நான் ஈகின்றேன்' என்னும் தன் முனைப்பு அவர்பால் நிகழ்ந்திருக்கும். ஆட்கொள்ளப் பெற்ற நிலையில் ''யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்னும் இக்கோணைஞான எரியால் வெதுப்பி நிமிர்த்துத்தான் செவ்வே நின்றிருப்பார்.'' எனவே அப்போது அவர்க்கு இறைவனே என்னை ''இரப்பவர்க்கு ஈய வைத்தான்'' என்ற அருளுணர்வு மேலோங்கி நின்றது. ''அல்லார் கண்டத்து அண்டர்பிரான் அருளாற் பெற்ற படிக்காசு பல்லாறியன்ற வளம்பெருகப் பரமன் அடியார் ஆனூர்கள் எல்லாம் எய்தி உண்க'' என்புழி, முன்போலன்றி அவர்க்கு அருளுணர்வே மேம்பட்டு முனைத்து விளங்கி நின்றமை காண்க. இந்நிலையின் சிறப்பை வியந்து பாராட்டுதற் பொருட்டும் 'திருநின்ற செம்மை'த் திருநாவுக்கரசர் எனச் சுந்தர மூர்த்திகள் அருளிச் செய்தனராதல் கூடும். இவையன்றி,

''மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்

தம்மையுள் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையும் அன்றே''

என்றுற்போல வரும் திருநாவுக்கரசர் திருமொழிகள் பிறவும், ஈண்டு இயைபுபடுத்து எண்ணி யுணர்தற் குரியன.

## (5) அழுந்திய பயிற்சி :

இன்னோரன்ன உன்னங் (யூகங்)கள் ஒருபுறம் இருப்ப, உண்மையான் நோக்கலுறுவார்க்கு உரைக்கத்தகுவது ஒன்றுளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள், கல்வி கேள்விகளில் வல்லவர். தொல்காப்பியம் திருக்குறள் சங்க இலக்கியங்கள் என்பவற்றை, அவர் நன்கினிது கற்று உணர்ந்திருந்தார் என நாம் துணிதற்குச் சான்றுகள் பல உள்ளன. இறைவனைக் ''கற்ற கல்வியினும் இனியான்'' என அவர் குறிப்பிடுதலும், ''அளவில் தொல் கலைகள் ஆய்ந்து திருமலி சிறப்பின் ஓங்கித் திருமணப் பருவம் சேர்ந்தார்'' எனச் சேக்கிழார் பெருமான் அவரைக் குறித்துப் பாடியிருத்தலும் பிறவும், இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும். மேலும், எத்துணைப் பெரியவர்களின் வாழ்க்கையும், அவர்கட்கு முன்னர் இருந்த பெரியவர்களின் வாழ்க்கையால் உந்தப் பெற்று-உருப் பெற்று-உயர்வடைந்தொளிரும். தவத்திரு. ஞானியார் சுவாமிகளின் வாழ்க்கையால் தம்முடைய வாழ்க்கை வளம்படப்பெற்றோர் மிகப் பலராவர். அத்தகைய ஞானியார் சுவாமிகளின் வாழ்க்கையும் வளம் பெற உதவினோர், அவர்க்கு வழிகாட்டிகளாய் முன்னிருந்த எத்துணையோ பல பெரியோர்கள் ஆதல் கூடும். காந்தியடிகள் இஞ்ஞான்று உலகப்புகழ் பெற்று ஒளிரும் சான்றோராயினும், அவர் அந்நிலையை அடைதற்குரிய முறையில், அவர்தம் வாழ்க்கையைச் செம்மையுற மாற்றித் திருத்தியமைத்துத் தத்தம் நூல்களால் வழிகாட்டிகளாய் உதவினோர் ஒரு ரஷ்யரும் (Tostoy—The Kingdom of God is Within You), ஓர் ஆங்கிலேயரும் (John Ruskin—Unto This Last), ஓர் அமெரிக்கரும் (Henry David Thoreau — Civil Disobedience) பிறரும் ஆவர் எனக் காந்தியடிகளே உடன்பட்டுக் கட்டுரைத்தலைக் காண்கின்றோம். மேலும்,

''பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும், தொடை
புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு, என்றும்
சான்றோர் சான்றோர் பாலர் ஆப''

எனப் புறநானூறு பாடுவது, பொருள் பொதிந்த மொழியே யன்றோ? இக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து காணுங்கால், நம் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கும், அவருக்கு முற்பட்ட பல பெருஞ் சான்றோர்களும், அவர்கள் அருளிச் செய்த அரிய பல நூல்களும் வழிகாட்டிகளாய் உதவியிருத்தல் கூடும் எனக் கருதுதல் தவறுகாது. ஈண்டைக்குச் சிறப்பாக, சுந்தரர் திருநாவுக்கரசரைத் தமது வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொண்டு, அவர்தம் திருப்பதிகங்களை அழுந்திக் கற்றறிந்து உணர்ந்தொழுகி வந்தார் எனத் துணிந்து கூறலாம். ''ஞானத்தால் தொழுவார்கள் தொழக் கண்டு ஞானத்தாய் உனை நானும் தொழுவனே'' என்றதனை ஒட்டி ''தொண்டாடித் தொழுவார்கள் தொழக் கண்டு தொழுதேன் என் வினைபோக'' எனவும், ''பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்றதனைத் தழுவி 'ஒவு நாள் உணர்வொழியும் நாள் உயிர்போகுநாள் உயர்பாடைமேற் காவுநாள் என்றிவையலாற் கருதேன்'' எனவும் பிறவாறும், பலவிடங்களில் திருநாவுக்கரசரின் சொற்பொருட் குறிப்புக்கள் அமையச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியிருத்தல் இக்கருத்திற்கு அரண் செய்யும். இன்னோரன்னவற்றையெல்லாம் 'ஏரல் எழுத்துப்போல் வதோர் விழுக்காடு' எனக்கொண்டு புறக்கணித்தல் பொருந்தாது. ''இணைகொள் ஏழெழுநூறு இரும்பனுவல் ஈன்றவன் திருநாவினுக்கரையன்'' என்றதும், திருநாவுக்கரசர் திருப்பதிகங்களிற் சுந்தரமூர்த்திகள் பெற்றிருந்த அழுந்திய பயிற்சி இணையதென அறிய, அரிய உரிய சான்று பகரும். இத்தகைய சிறந்த பெரும் பயிற்சியின் விளைவாக எழுந்ததே 'திருநின்றசெம்மை' என்னும் செழும் பொருட்டொடர் எனலாம்.

## (6) சிவன் எனும் ஓசை :

சைவசமய ஆசிரியர்களின் காலத்திற்கு முன்னரே இத் தென்றமிழ் நாட்டிற் சிவ வழிபாடு இனிது நிகழ்ந்து போந்ததாயினும், 'சிவம்' 'சைவம்' என்னும் சொற்கள் பண்டைச் சங்க நூல்களில் யாண்டும் பயின்று வரக் காண்கின்றிலம். 'பிறவாயாக்கைப் பெரியோன்' 'நுதல்விழி நாட்டத் திறையோன்' 'மழுவாள் நெடியோன்' 'ஆலமர் செல்வன்' என்றுற்போலவே பண்டைச் சங்க நூல்களிற் சிவ பெருமானைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. மாணிக்க வாசகர் முதலிய நம் சமயாசிரியர்களின் நூல்களில் தான் 'சிவம்' என்னும் சொல் பெரிதும் பயின்று காணத் தலைப்படுகின்றது. எல்லாம் வல்ல இறைவனைக் குறித்தற்கு வேறுபிற சொற்களைக் காட்டிலும் 'சிவம்' என்னும் செந்தமிழ்ச் சொல்லே சிறப்புடையதெனத் தெளிந்து துணிந்து, நம் சமயாசிரியன்மார்கள் பெரிதும் போற்றி வழங்கத் தலைப்பட்டனர். இறைவன்-இயவுள்-கந்தழி-கடவுள்-முனைவன் முதலிய சொற்களைப்போல முழுமுதற் பெரும் பொருளின் ஒவ்வொரு வகை இயல்பினையே குறிப்பதாகாமல், அதன் எல்லாவகை இயல்புகளையும் ஒருங்கினிது குறிக்கும் பெருஞ் சிறப்புடைய சொல்லாக, நம் சமயச் சான்றோர்களால் 'சிவம்' என்னும் செஞ்சொல் செவ்விதிற்றேர்ந்து அமைத்துக் கொள்ளப் பெற்றது போலும்! அதுபற்றியே,

''சிவன் எனும் நாமம் தனக்கே
யுடைய செம்மேனி அம்மான்''

எனவரும் திருநாவுக்கரசர் திருமொழியும் எழுந்தது.

''மன்னுசிவன் சந்நிதியில் மற்றுலகம்சேட்டித்தது
என்னும் மறையின் இயல்மறந்தாய்-சொன்னசிவன்
கண்ணு உளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்காண்
எண்ணுன் சிவன் அசத்தை இன்று''

எனவரும் சிவஞானபோத வெண்பாவின்கண், ஆசிரியர் மெற்கண்டார் 'சிவன்' என்னும் சீரிய சொல்லைப் பேரின்பகாரணன்—முற்றுணர் வினன்-தூய தன்மையன் என்னும் வெவ்வேறு பொருள்கள் அமையுமாறு வழங்கியிருத்தல் ஈண்டுக் கருதியுணர்ந்து இன்புறற்பாலது. இவ்வாற்ருல் 'சிவம்' என்னும் செஞ்சொல் இறைமைக் குணங்களை யெல்லாம் ஒருங்கினிது குறிக்கும் பெருஞ்சிறப்புடையதாதல் பெறப்படும். இத்தகு பெருஞ்சிறப்பினை, முதன்முதலில்

''சிவனெனும் ஓசையல்லது அறையோ
உலகில் திருநின்ற செம்மை யுளதே?''

என அறைகூவி வினவி, யாவருக்கும் ஆணித்தரமாக அறிவுறுத்தருளியவர் திருநாவுக்கரசரே யாவர். இவ் வுண்மையுணர்ந்து வியந்துவந்தே ''திருநின்றசெம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரசர்'' எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதித்தருள்வாராயினர் எனக்கொள்ளுதல், சிவநெறிச் செல்வர் அனைவரும் ஒருசேர ஒப்ப முடிந்த உண்மையாகும்.

**

---

''சிவனெனும் ஓசை யல்லாது அறையோ
உலகில் திருநின்ற செம்மை யுளதே ?

அவனும்ஓர் ஐயம் உண்ணி, அதள்ஆடை
யாவது, அதன்மேல்ஓர் ஆடல் அரவம்,

கவண்அள வுள்ள உள்கு கரிகாடு
கோயில், கலனவது ஓடு, கருதில்

அவனது பெற்றி கண்டும், அவன்நீர்மை
கண்டும், அகன்நேர்வர் தேவ ரவரே. —திருநாவுக்கரசர்.

---

# மதிப்புரை

**சங்கற்ப நிராகரணம்:**

இந்நூல், சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கினுள் ஒன்றும், உமாபதி சிவாசாரியர் (கி. பி. 1313) இயற்றியதும் ஆகும். இதன்கண் மாயாவாதம், ஐக்கியவாதம், பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சங்கிராந்த வாதம், ஈதர அவிதார வாதம் நிமித்த காரண பதிணுமவாதம், சைவவாதம் முதலிய பல கொள்கைகளை எடுத்துரைத்து (சங்கற்பம் செய்து) அவற்றின் கண் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அழகுற மறுத்துரைப்பதனுல் (நிராகரணம் செய்வதனுல்) இந்நூலுக்கு இப்பெயர் அமைந்தது. தத்துவஞான ஆராய்ச்சிகளில் ஈடுபாடு உடையவர்களுக்கு, இந்நூல் ஒரு பெரும் கலைக் களஞ்சியம் ஆகும்.

தருமபுர ஆதீனத்தின் 26-ஆம் குரு முதல்வர் சீலத்திரு சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திருவிளக் குறிப்பின் படி, சைவப் பெரியார், இராவ் சாகிப் திரு நல். முருகேச முதலியார், B.A., அவர்கள், இந்நூலை ஆங்கிலத்தில் அழகுற மொழி பெயர்த்து இயற்றியுள்ளார்கள். திரு முதலியார் அவர்களின் சைவவுணர்வும், சித்தாந்த நூற் பயிற்சியும், சிறந்த ஆங்கிலமொழிப் புலமையும், அறிவாராய்ச்சித் திறங்களும் நாடு அறிந்தவையாகும். அவர்களால் நன்கு இனிது மொழி பெயர்க்கப் பெற்றுள்ள இவ்வாங்கில நூல், தருமையாதீன குருபூசை விழாவில், அண்மையில் சிறப்பு மலராக வெளிவந்துள்ளது. அறிஞர்களுக்கும், சைவ சித்தாந்த அன்பர்களுக்கும், இந்நூல் பெரிதும் பயன்படும். சிறந்த நல்ல அழகிய பதிப்பு.

கிடைக்கும் இடம்:
''மானேஜர், ஞானசம்பந்தம் அச்சகம்''
தருமபுர ஆதீனம், மாயூரம், R.S.,
தஞ்சை மாவட்டம்.

விலை குறிக்கப் பெறவில்லை.

—ஆசிரியர்.

# சேக்கிழார் திருவாக்குண்மை

## சீலத்திரு. சோமசுந்தர நாயகர்

**முன்னுரை :**

*[பெரியபுராண விளக்கப் பேருரையாளர், சிவக்கவிமணி தவத்திரு சம்பந்த சரணாலயத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் (1880-1960), ஒருசமயம் சைவசித்தாந்த மாநாடு ஒன்றற்கு எழுந்தருளி வாழ்த்துரை நிகழ்த்தியபோது, ''பெரியபுராணத்தினைப் பாடியவர் சேக்கிழார் என்றே பலரும் கூறுவர். ஒருவகையில் அது தவறு. நடராசப் பெருமான் பாடினார் என்பதே உண்மை'' என்று குறிப்பிட்டார்கள். சுவாமிகள் சுருக்கமாகக் குறிப்பிட்ட இக்கருத்தினையே, சிவத்திரு மறைமலையடிகளார்க்கு ஆசிரியராகத் திகழ்ந்த சைவசித்தாந்த சண்டமாருதம் சீலத்திரு சோமசுந்தர நாயகர் அவர்கள் தடைவிடைகளுடன், அளவையியல்நெறி வளம் பல செறியவும், தமது நுண்மாண் நுழைபுலம் தோன்றவும் விரிவாக விளக்கி, இற்றைக்கு ஏறத்தாழ 80-90 ஆண்டுகளுக்கு முன்னர், மேலைத் தலைப்பில் வரைந்துள்ள கட்டுரையின் முதன்மை மிக்க பகுதிகள், ஈண்டுத் தொகுத்துத் தரப் பெறுகின்றன. சீலத்திரு நாயகர் அவர்களின் அளப்பரிய நுண்ணுணர்வும் சொல்வன்மையும் பிறவும் இனையவென அறிந்து அன்பர்கள் இன்புறுவார்களாக !*

*—ஆசிரியர்]*

“உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்''

என்னும் இத் திருவாக்கின் மான்மியத்தையுரைப்பது, சிவபெருமானுடைய திருவருள் இருந்தன்றி அமையாது. ''உலகெலாம்'' என்று, நம் நடராஜப் பிரபுவே முதலெடுத்துக் கொடுக்க, சேக்கிழார் சுவாமிகள் பாடியருளியதாகையால், திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தின் முதற் செய்யுள் ஆகிய இதன் பெருமையே பெருமை! இந்தப் பாடலில் கடவுள் வாக்கு ஓர் பாகமும், சேக்கிழார் சுவாமிகள் வாக்கு மற்றைப் பாகமுமாகக் கலந்திருக்கின்றன என்பதன் கருத்தையுய்த்துணருங்கால், எல்லாம் கடவுள்வாக்கு என்பதே உண்மையாக முடியும்.

எங்ஙனமெனில், கடவுள் வாக்குடன், கடவுள் அல்லாதவராகிய நம் சேக்கிழார் சுவாமிகள் வாக்கு விரவியதெனின், கடவுளை நின்மலராகக் கொள்ளுந் தன்மையால் ஒன்றிலொன்று சேர்தல் பொருந்தாது. சேக்கிழார் சுவாமிகள் வாக்கும் கடவுள் வாக்கைப் போல நின்மலம் உடையதாகலின் ஒன்றிலொன்று சேரும் எனின், அப்போது சேக்கிழார் சுவாமிகளும் கடவுளேயாகக் கொள்ளப்பட்டு, இரண்டு கடவுளருக்கு இடஞ் செய்ததாய் முடியும். சேக்கிழார் சுவாமிகள் வாக்கே நின்மலமானபோது அதற்குக் கடவுள் முதல் எடுத்துக் கொடுப்பது ஏன்? என்னும் ஆசங்கையும் வரும். கடவுள் வாக்கும் சேக்கிழார் சுவாமிகள் வாக்கும் ஒன்றிலொன்று தாரதம்மியப்படவே கலந்திருக்கின்றன எனின், சமானக் குறைவாகிய வாக்குடன் தமது வாக்கைக் கடவுள் கலப்பார் என்பது பொருந்தாது. வேதபுருடன் சிவபெருமானை நோக்கித் ''தேவரீரை இதர தெய்வங்களோடு சமானமாக வரித்துத் தீய தோத்திரங்களாற் கோபம் வரச் செய்யமாட்டோம்'' என்று சொல்லியிருப்பதால், அவர் தம்மில் தாழ்ந்தவர் குழுவிற் சேர்ந்து சந்மானத்தையடையாததுபோல, அவர் வாக்கும் தாழ்ந்த வாக்கிற் கலந்து நில்லாது என்க. அவரை வரித்துப் பூசிக்கின்ற காலையில் வேறு தேவர்களை வரித்து அவர் திருமுன்னர்ப் பூசித்தலும், பிறரைப் பூசிக்கின்ற காலையில் அவர்களோடு உடனிருத்திச் சிவபெருமானைப் பூசித்தலும் பொருந்தா என்பது, மேற்காட்டிய வேதபுருடன் கருத்தாக விளங்குகையால், ஒன்றற்கொன்று வேறுவகைப்பட்ட சாமானிய வாக்கு ஒன்றுடன் பரமபதியாகிய அவரே தமது வாக்கைக் கலப்பார் என்பது எங்ஙனம் பொருந்தும்?

பிறர் செய்தாற் குற்றமாகுமேயன்றித் தாமே செய்தாற் குற்றமில்லை எனின், அப்போது கடவுட் டன்மைக்கே குற்றம் வரும். அங்ஙனம் தாமே செய்ய வேண்டிய அவசியந்தான் யாது? என்பதற்கும் சமாதானம் சொல்ல வேண்டி நேரும். மேற்சுருதியாதரவால், பிறர் சிற்றறிவினராகவும், அவர் செய்தற்கே யுடன்படாராகிய அக்கடவுள் தாமே தங்கொள்கையை விரோதிப்பார் என்பது எப்படி அமையும்? சேக்கிழார் வாக்குடன் கடவுள் வாக்கும் கலந்த செய்தி சந்தேகம் எனின், அதைக் காட்டிலும் கடவுளையே சந்தேகிப்பது மிகு விசேடமாம். இன்னும் இதை விசாரிப்பது அவசியம் அன்றெனவிடுப்பதே பெருநலமாம். சைவம் என்னும் சித்தாந்தத்திற் கட்டுண்ட பரிபாகிக்கே இந்த விசாரம் ஆகையால், அவன் இத்தகைய அவநம்பிக்கையில் நிகழ்தல் செய்

யான். அவனுக்கு அச்சமயத்தாற் பெறப்படும் யாவும் உண்மையெனக் கொள்ளும் துணிவு உடைமையால், அத்துணிவு பற்றி விசாரித்தல் ஒன்றே யுரிய கடமையாம். அதனால் இனிப் புறச்சமயிகள் கூற்றைக் கலந்து விவகரியாது விடுப்பாம்.

புறச் சமயிகளுக்கும் ஒப்ப நியாயம் சொல்ல வேண்டுவது தானே எனின், புறச்சமயிகள் அநேகருள், கடவுளேயில்லை என்பவனுக்கு எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் என்ன பலன்? முதலிற் கடவுளிருப்பை அவனுக்கு விளங்கக் காட்டியன்றோ, பின்னர் மற்றைய செய்திகளை யுணர்த்தல் வேண்டும்? அதற்குப் புண்ணியம் இருந்தன்றோ அவனுக்குச் சித்திக்க வேண்டும்? நமது முயற்சி அவனிடம் பயன்படாது என்க. அவன் நாமாகிற வரையில்! அவன் நம் தன்மை அடைவனோ எனின், நாயும் பேயுமே நாளைக்கு நம் தன்மை யடைவது சித்தமாக, எவ்வளவோபடி கடந்து வந்தவனாகிய அவன் வர மாட்டான் என்பது எங்ஙனம்? ''புல்லாகிப் பூடாய்ப்....மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்'' என்னும் அருளாளர் திருமொழிப்படி கண்டு கொள்க. அன்றியும், ''புறச் சமயநெறி நின்றும்....ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்'' என்னும் பிரமாணத்தாலும் காண்க. இந்த அருள் வாக்கியங்களால் இன்றுள்ள அற்பச் சிற்றுயிர்களும் நாளைக்கு ஞானிகளாவர் என்பதும், அப்படியே புறச் சமயிகளும் பரிபாகம் வரப்பெற்றுக் கிருதகிருத்யர் ஆவார்கள் என்பதும் வெளிப்பட்டன. இவ்வாற்றால் இன்றைக்கு அற்பச் சிற்றுயிர்களாக எண்ணப்படுவன, நாளைக்கு ஞானிகள் ஆகப்போவது சித்தமாயிருந்தும், பின்னர் அப்படியாகப் போகிற அற்பச் சிற்றுயிர்களுக்கு இப்போதே அந்த ஞானத்தைச் சித்திக்கச் செய்ய முயல்வது எப்படிக் கஷ்டமும் அறியாமையுமாய் முடியுமோ, அப்படியே புறச்சமயிகள் மாட்டும் கொள்ளத் தக்கதாம். அற்றேல், புறச்சமயிகள் ஒருநலனும் இதனால் எய்திக் குணப்பட இடமுண்டாகாதபோது அவர்களைக் குறித்துச் சிவதத்துவங்களை நமது ஆசாரியர்கள் வெகுவாகப் பிரசங்கித் திருப்பது என்னை யெனின், அதனுண்மையை விளக்குவாம். சிவசாம்பிராஜ்யப் பெருஞ் செல்வத்தை யடைதற்குரிய நம்மவர்கள், அப்புறச் சமயிகள் துர்ப்போதங்களாற் கலங்கா வண்ணமும், புறச் சமயிகள் பகிரங்கமாக வெளிப்பட்டு நம் சமயத்திற் புகுந்து சைவத்தை அவலம்பித்திருக்கும் புண்ணியம் கைகூடாவிட்டாலும், அப்படிக் கூடுதற்கான ஏதுவாக அவர்களுள் எவர் நெஞ்சிலாவது ஒருகால் உண்மை தைத்து உய்யும் வண்ணமும், நம் பெருமக்கள் செய்த செய்கை பெருமை பெற்று நிலைக்கும்! நிலைக்கும் !!

இஃதிங்ஙனம் நிற்க, மேலெடுத்துக் கொண்ட விஷயத்தை விசாரிப்போம். சுவாமிகள் அருளிச் செய்ததாகப் பெறப்படும் அத் திருவாக்கின்கண், ஒரு சிறு பாகமே நடராச மூர்த்தி முதலெடுத்துக்கொடுத்த தன்றி வேறில்லை. ஏனையவெல்லாம் சேக்கிழார் சுவாமிகள் பாடியருளியது. இங்ஙனமாக, அதிக பாகத்துக்கு ஆக்கியோராகிய சேக்கிழார் வாக்கைக் கடவுள் வாக்கில் வியாப்பியம் கூறுவது பொருந்தாதெனின்; அதிக பாகத்தை அருளிச் செய்தவராகிய சேக்கிழார் சுவாமிகள், என்னை அந்த அற்ப பாகமும் சொல்லத் தெரியாதவரா? அவருக்கு ஏன் அந்தப் பாகத்தை முதலாகக் கடவுள் எடுத்துக்கொடுக்க வேண்டும்? சேக்கிழார் சுவாமிகள் அந்தப் பாகமும் சொல்லுவார்! அதற்கு மேலும் சொல்லுவார்! கடவுள் வாக்கில் விஜாதிகம் ஆகியபடி, அவர்தாம் என்னை, யாம் சொல்லமாட்டோமா? எம்மளவுக்கு இசைந்தபடி. எம்மளவின்படி யாம் சொல்லுவது போலவே, சேக்கிழார் சுவாமிகள் தம்மளவின்படித் தாமும் சொல்லுவாரே யன்றி, கடவுள் தம்மளவின்படிக் கூறிய பாகத்தில், எப்படி சாம்யம் பெறும்? கடவுள் சேக்கிழார் ஆகாமையாலும், சேக்கிழார் கடவுள் ஆகாமையாலும், அவரவர் அளவின்படி வாக்குகள் போந்திடுமாயின், அவை தாரதம்மியம் உடையனவாயே இருக்கும் என்பது பெற்றாம். இதனால் சேக்கிழார் சுவாமிகள் தம்மளவின்படித் தாமே அதிக பாகங்களை அருளினார் என்பதும் சேராதொழியும். பெரிய புராணத்தில் 'உலகெலாம்' என்று நடராச மூர்த்தியால் முதலெடுத்துக் கொடுக்கப் பெற்ற அற்ப பாகம் எந்த அளவுடைத்தோ, அந்த அளவே மற்றைய அதிக பாகங்களும் சாம்யம் பெற்று விளங்கலுண்மையால், அவை ஒரே தன்மையின என்றல் அமையும்! இதனால் இரண்டு வாக்குகளும் ஒரே வாக்கு என்பதும் பெறுதும்.

இப்படிக் கொள்ளுங்கால், சேக்கிழார் சுவாமிகள் தமது போதத்தால் அன்றித் திருவருட் போதத்தால் அருளியபடியோ எனின், அவர் என்னை? சிவனடியார் தம்மிற் பலர் திருவருட்போத மேலீட்டாற் பாடினாராகலின் அவர் வாக்குகள் எல்லாம் சிவவாக்காகுமா? சிவனடியார் வாக்குகள் என்பதே போதரும். இதுவும் சேக்கிழார் சுவாமிகள் வாக்கு எனலால், சிவனடியார் வாக்கு என்றலே அமையும் எனின், இதற்கே யன்றி ஏனைய வாக்குகளுக்குக் கடவுள் முதலெடுத்துக் கொடுத்தனரா? இப்போது விசாரமெல்லாம் கடவுள் முதலெடுத்துக் கொடுத்தருளிய முக்கியம் பாராட்டியேயாகையால், ஏனைய சிவனடியார் வாக்குகள் சேக்கிழார் சுவாமிகள் வாக்குடன் சாம்யம் பெறா என்க. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த ''திருத்தொண்டத் தொகை''க்குக் கடவுள் முதலெடுத்துக் கொடுத்தமையால், அவர் திருவாக்கும் சிவவாக்காகுமே எனின், அவரே சிவமாகையால் விசாரிப்பது அவசியம் அன்றாம்; கடவுள் முதலெடுத்துக் கொடுத்தாலும் கொடாவிட்டாலும், அவை ஒரே தன்மை பெறுதலால்; ஆலாலசுந்தரரே சுந்தர மூர்த்திகளாகத் திருவவதாரம் செய்தபடியால். இப்படியே சிவ விபூதிகளாகிய ''குமாரக்கடவுள் ஞானசம்பந்த மூர்த்திகளாவும், சிவகணத் தலைவர் வாகீச மூர்த்திகளாகவும், நந்தியெம்பெருமான் மாணிக்கவாசக மூர்த்திகளாகவும் திருவவதாரம் செய்தமையால், அவர் வாக்குகளும் சிவவாக்கேயாம். நால்வராசிரியர் வாக்குகளோடு சேக்கிழார் சுவாமிகள் வாக்கும் சேர்க்கப்பட்டுத் திருமுறைகளாக எண்ணப்

பட்டதனுல், மற்றைத் திருமுறைகளும் சிவ வாக்காகுமே எனின், அவைகளேயும் திருமுறைகளாக ஆன்ருேர் தொகுத்த முறைமையானே, அவற்றின் ஏற்றம் வெளிப்படலால், அவை சிவ வாக்காதலில் இழுக்காவென்க.

இனி, சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கு எப்படிச் சிவவாக்கு ஆகும் என்பதைச் சற்றே விளக்குவாம். நடராசமூர்த்தி அவருக்கு 'உலகெலாம்' என்று முதலெடுத்துக் கொடுத்தருளினுர் என்பது உண்மையன்ருே? அப்படியெடுத்துக் கொடுக்குங்கால், அவர் என்னே திருமேனி சார்த்தி வெளிப்பட்டு நேரில் நின்று அருளிச் செய்தனரா? அசரீரியாக நின்று அருளிச் செய்ததே யன்றி வேறில்லே. அப்படியே சேக்கிழார் சுவாமிகளே அதிட்டித்து, ஏனைய பாகங்களேயும் அவரே சொல்லியருளினுர் என்பதே மேலோர் கருத்தாம். ஆகாயம் என்னும் ஒருபூதத்தை இடமாகக்கொண்டு, முதலெடுத்துக் கொடுத்த படியே, சேக்கிழார் சுவாமிகளே இடமாகக் கொண்டு, ஏனைய பாகங்களேயும் அருளிச் செய்தபடியாம். இலிங்க வடிவத்தை அதிட்டித்து ''நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப !! என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப !!! '' என்று கண்ணப்ப தேவருக்கு அருளிச் செய்தபடியும், இதற்குப் போந்த நிதரிசனமாம். சிவபெருமான் திருமேனி சார்த்தி வந்தருளிச் செய்தலும், அசரீரியாக நின்றருளிச் செய்தலும், சிலவிங்கப் பெருமானே அதிட்டித்து நின்றருளிச் செய்தலும், சிவனடியார்களே அதிட்டித்து நின்றருளிச் செய்தலும் அருண்மரபு ஆகையால், அவையே ஈண்டு சித்தாந்தம் ஆயிற்றென்க. இந்த உண்மையால் சேக்கிழார் சுவாமிகள் ஒன்றும் சொல்லியதில்லே எனவும், யாவும் நடராசமூர்த்தியே அருளிச் செய்தார் எனவும் வெளிப்பட்டது. இப்படிக்கன்றி வேறு விதத்தாற்கோடல் அமைதி பெருது என்க.

சிவபெருமான் சராசரங்கள்தோறும் கலந்திருந்து, அவ்வவற்றின் இயல்பு அறிந்தியங்கச் செய்வது வேதசம்மதமாகலின், யாவும் யாவரும் அச்சிவனேயன்றி ஒன்றும் செய்யவும் சொல்லவும் கூடாதல்லவா? அப்போது யாவர் சொல்வதும் கடவுள் சொல்வதே யாகிறபடியால் சேக்கிழார் சுவாமிகளுக்கு மாத்திரம் விசேடம் என்னே எனின், யாவர் சொல்லுவதையும் சொல்லுவிக்கின்றவர் கடவுள் என்றபடியே யல்லது, கடவுளே சொல்லுகின்ருர், சொல்லினுர் என்பது பொருந்தா தென்க. கடவுள் சொல்லுவிக்கின்ருர், சொல்லுவித்தார் என்பதே அமையும். சிவலிங்கத்திடம் இருந்து அவர் ஒன்றைச் சொல்லுகையில், சிவலிங்கம் சொல்லிற்று என்பதன்றி, அவர் சொல்லுவித்தார் என்றல் அமையாமை போலவே, சேக்கிழார்சுவாமிகளிடமும் கொள்ளற்பாலதென்க. ஆயின், சேக்கிழார் சுவாமிகளே அதிட்டித்துப் பின்பாகங்களே ஏராளமாய் அருளிச் செய்த கடவுள், முன்பாகத்தைக் கொஞ்சம் ஏன் அசரீரியாக இருந்து சொல்லினுர் எனின், பின் சொல்லப் போகிற பாகத்தின் பெருமைவெளிப்படும் பொருட்டென்க. உலகத்தில் அசரீரியாக நின்று சொல்லியதையே கடவுள் வாக்கென்று கொண்டிருக்கின்றனரேயன்றி, சேக்கிழார் சுவாமிகள் வாக்கை அதிட்டித் துரைத்த படியே அறிந்ததில்லேயன்ருே? உலகத்தில் அதன் பெருமை தோன்ற உரைக்க வந்தவர் ஆகையால், அவ்வுலகர் அநுபவத்தின்படி உசிதம் பெற அசரீரியாக நின்று உரைத்தபடியாம். உண்மையை ஊகிக்கின், அசரீரியால் உரைத்ததென்று நாம் கொண்டிருப்பதைக் காட்டிலும், சேக்கிழார் சுவாமிகளே அதிட்டித்து நின்றுரைத்ததே விசேடமாம்.

எங்ஙனமெனின், அசரீரியாக நின்றுரைத்தார் என்கையில், அங்ஙனம் நின்றருளிய இடம் பூதாகாயமாகையால், அதுவே திருமேனியாகிச் சடத்துவம் பெறும். அப்படியே சேக்கிழார் சுவாமிகளிடம் விசாரிக்கையில், அவருள்ளமாகிய ஞானகாய இடமே திருமேனியாகிச் சித்தாதல் நிலேயுதல் பெறும். இரண்டினும் சித்துக்கே விசேடம் கூறப்படுவதால், சேக்கிழார் சுவாமிகளே அதிட்டித் துரைத்தமையே, சிவபெருமான் இச்சை யிருந்தபடியாம். பூதாகாயத்தில் விரவி யுரைத்தருளியது பின்னுரைக்கப் போகும் அதன் பெருமையை விளக்க ஏதுவாக இருந்தமையின், அதுவும் பொருத்தம் பெறும். இரண்டும் தம்மில் பேதமுறினும் அதிட்டித்த பரன் வாக்கு அபேதமே பெற்று அமையும். சடாகாயத்தை மேல் உண்டாகப் போகிற மகிமைக்கு ஏதுமாத்திரத்தால் அதிட்டித்துச் சிதாகாயத்தையே யுரிமையாகக் கொண்டமையால் பூரணமாக அதிட்டித்து முற்றும் அருளிச் செய்தபடி கண்டுணர்க. மேல் விசாரத்தால் பூதாகாயத்தை இடமாகக் கொண்டு பரன் சொல்லியதும், ஸ்தூலப் பார்வையில் அசரீரியும், சூக்குமப் பார்வையில் சரீரியுமாக நின்று அருளிச் செய்தார் என்பதாகக் கொள்ளவரும். இன்ன மகிமாதிசயங்கள் போதரக் காணும் சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கு ஆகிய பெரிய புராணத்தின் ஏற்றத்தை யாவரே அறிய வல்லார்? சேக்கிழார் வாக்கெனினும், சிவபெருமான் திருவாக்கெனினும் ஒக்குமேனும், சேக்கிழாரும் சிவபெருமானும் ஒருபொருள் அல்ல என்பதும் தெளிந்திடுக! உலகம் மாயையிற் ருேன்றும் எனினும், பரமனிற் ருேன்றும் எனினும் ஒக்குமேனும், மாயையும் பரமனும் ஒன்ருகாத படியை விசாரித்துத் தெளியுமா போல! இவ்விடயத்தில் இன்னும் அநந்த சமாதானங்களே இது கொண்டே புத்திமான்களா யுள்ள பேர்கள் தெளிந்துரைக்கக் கூடுமாகையால் இதை இவ்வளவில் விடுத்தாம்....

''பொன்னவிருஞ் சடைமௌலிப் புண்ணியன்ஐந்
தெழுந்துண்மை புவியில் ஓங்கி
மெய்ந்நெறியாஞ் சைவம்நனி வாழவரும்
மெய்ஞ்ஞான வேந்தாய் அன்பர்
தந்நிலேமை உலகறியத் தம்பிரான்
முதலெடுத்துத் தாஏற் றுண்மை
துன்னுமவர் புராணம்நவின் றிடும்முனியாஞ்
சேக்கிழார் துணேத்தாள் போற்றி''

**முடிவுரை :**

[சேக்கிழார் தாமே தமது புலமையினுற் பெரியபுராணம் பாடினர் எனின், அவர் இறை

யருள் பெற்ற பெரியார் என்பது சிறப்பு முறையிற் பெறப்படாது. நடராசப் பெருமான்தான் பெரியபுராணம் பாடினர் எனின், சேக்கிழார் புலமைச் சிறப்பு மிக்கவர் என்பது விளக்க முருது. இவ்விருதிறக் கூற்றுள்ளும் ஒவ்வொரு பகுதியே யுண்மையாகும்.

> ''அறிபவன் அறியுந் தன்மை
> அருளுவன் என்னில், ஆன்மா
> அறிவில தாகும்; ஈசன்
> அசேதனத் தளித்தி டானே!''

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுட் பகுதி ஈண்டு நினைவு கூரற்பாலது. வெறுங்கல்வி யறிவு ஒன்றினுலேயே நூல்கள் பாடிய ஏனைய பல புலவர்கள் போலல்லாமல்,

> ''உற்கைதரும் பொற்கை
> யுடையவர்போல் உண்மைப்பின்
> நிற்கை அருளார் நிலை''

எனத் திருவருட்பயன் கூறுவது போல, நடராசப் பெருமானின் திருவருளைத் துணையாக முன்னிட்டுக் கொண்டு, அத் திருவருளின் வழி நின்று, சேக்கிழார் தமது ''ஆராய்ந்த கல்வி'' நலனுற் பெரியபுராணம் பாடியருளினர் என்பதே முழுவுண்மையாகும். பெரிய புராணத்துள், அருள் நலமும் ஆராய்ச்சி நலமும் ஆகிய இரண்டும் ஒருங்கே சிறந்தமைந்து ''ததி நெய் போல்'' விளங்கித் திகழ்கின்றன. இவ்விரண்டனுள் ''மயூர நிருத்த நியாயம்'' பற்றிப் பெரிய புராணத்துள் விளங்கித் திகழும் ஆராய்ச்சி நலத்தினும், அருள் நலத்திற்கே முதன்மை கொடுப்போர், அதனை நடராசப் பெருமான் பாடினர் எனவும்; அருள் நலத்தினும் ஆராய்ச்சி நலத்திற்கே முதன்மை யளிப்போர் அதனைச் சேக்கிழார் பாடினர் எனவும் கூறுவர். சேக்கிழார் ஆராய்ச்சியுணர்வும், அநுபூதி யுணர்வும் ஆகிய இரண்டும், ஒருங்கே நிரம்ப வுடையவர் என்பதில் நம்மனோர்க்கு ஐயம் இல்லை. ஆயினும் எடுத்துக் கொண்ட பொருட் பகுதியினைச் சிறப்புடைத்தாக வற்புறுத்துதல் என்னும் ''பிரதிஞ்ஞாஹேது நியாயம்'' பற்றி, இவ்விரண்டனுள் ஏதேனும் ஒன்றற்கு மிக்க சிறப்பளித்துத் தத்தம் நோக்கத்திற்கேற்பப் பேசுதல் அறிஞர்களுக்கு இயல்பேயாம். ஆதலின், இருசாரார் கூற்றும் ஒவ்வொரு வகையிற் பொருந்துவதேயாகுமன்றி, இழுக்குடையதன்று என்க.

—ஆசிரியர்.]

# திருவல்லிக்கேணி

விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்
வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னைப் புரமெரி செய்த
சிவன்உறு துயர்களை தேவைப்
பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு
பார்த்தன்றன் தேர்முன் நின்றானை,
சிற்றவை பணியால் முடிதுறந் தானைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே. (1)

வேதத்தை வேதத்து இன்சுவைப் பயனை
விழுமிய முனிவரர் விழுங்கும்
கோதில் இன்கனியை நந்தனர் களிற்றைக்
குவலயத் தோர்தொழு தேத்தும்,
ஆதியை அமுதை என்னை ஆளுடை
அப்பனை ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழும் மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே. (2)

பரதனும் தம்பி சத்துருக் கனனும்
இலக்கும னோடு மைதிலியும்
இரவும் நன்பகலும் துதிசெய்ய நின்ற
இராவணாந் தகனை, எம்மானை,
குரவமே கமழும் குளிர்பொழில் ஊடு
குயிலொடு மயில்கள்நின்று ஆல,
இரவியின் கதிர்கள் நுழைதல்செய் தறியாத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே. (3)

# பொன்னப்பன்

மகாவித்வான், பத்மவிபூஷண்
திரு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள்,
காஞ்சிபுரம்.

ஆழ்வார்கள் எம்பெருமானைப் பொன்னாக வும் பேசி அநுபவிக்கின்றார்கள். 'பொன்னப்பன் மணியப்பன்' என்றார் நம்மாழ்வார். 'பொன்னை மணியை' 'பொன்னானாய்' என்றார் கலியன். 'பொருதுவருகின்ற பொன்னே' என்றார் பெரியாழ்வார்.

1. இங்ஙனம் எம்பெருமானைப் பொன்னாகக் கூறுவதற்கு ஒரு பொருத்தஞ் சொல்லலாம்; அதாவது: பொன்னைத் தீயிலிட்டுச் சுடுகிறோம்; உளியையிட்டு வெட்டுகிறோம்; உரைகல்லிலேயிட்டுக் கனக்க உரைக்கிறோம்: இன்னம் எத்தனை ஹிம்சைகள் செய்யினும் அவற்றால் பொன் சிறிதும் வருந்தமாட்டாது; வருத்தமில்லையென்பது மாத்திரமேயன்று; அந்த ஹிம்ஸைகளெல்லாம் தனக்குப் பரமபோக்கியமேயென்பது தோன்ற ஒளியை மிகுத்துங்காட்டும்; பொன்னைத் தீயிலிட்டுச் சுடும்போதும், உளியிட்டு வெட்டும்போதும், உரைகல்லிலுரைக்கும்போதும் அதற்கு ஒளிமிகுதலைக் காண்கிறோமன்றோ? ஆனால் அந்தப் பொன்னுக்கு ஒரு வருத்தம் மாத்திரம் சால வுண்டாம்;

அஃது என்னென்னில்; "மிக அற்பமானதொரு குன்றுமணியோடொக்க நம்மை நிறுப்பதே!" என்பதே அதற்கு மிக்க வருத்தமாம். ஒரு தராசில் குன்றுமணியையும் மற்றொரு தராசில் பொன்னையுமிட்டு நிறுக்கக்காண்கிறோமன்றோ. 'பொன் என்று போற்றப்படுகின்ற நமக்குக் கடைகெட்ட குன்றுமணிதானோ ஈடாகவேணும்' என்று வருந்தி மிகவும் குன்றிப் போகாநின்றதாம். அதுபோல எம்பெருமானும் தூதனுப்பப் பெறுகை, தாம்பால் கட்டுண்கை முதலானவற்றால் சிறிதும் வருந்தான் வருந்தாமை மாத்திரமேயன்று அவற்றால் மிக்க முக மலர்ச்சியும் பெற்றிடுவான்; அப்படியுண்டோவென்னில்; இன்னார் தூதனென நின்றான் என்றது கண்டீரே; 'இன்னான் தூதனெனப் பட்டான்' என்னாமல் 'இன்னார்தூதனென நின்றான்' என்கையாலே பாண்டவர்க்குத் தூது செல்லுகையாகிற இழிதொழில் செய்து பாண்டவ தூதனென்று பேர்பெற்ற பின்புதான் எம்பெருமானுக்குத் தரிப்பு உண்டாயிற்றென்பது விளங்கவில்லையா?

இனி, தாம்பால் கட்டுண்கையினால் முக மலர்ச்சியுண்டானமை அறிந்தபடி யெங்கனே யென்னில்; பட்டர் திருக்கோட்டியூரிலெழுந்தருளி யிருக்கும்போது, ஒரு ஸ்வாமி வந்து 'அடியேனுக்கு ஒரு திருவிருத்தம் பொருளருளிச் செய்யவேணும்' என்று பிரார்த்திக்க, 'நம் பெருமாளைப் பிரிந்த துயரத்தினால் எனக்கொன்றும் சொல்லப் போகிறதில்லை. நஞ்சீயர் பக்கலிலே கேட்டுக் கொள்ளும்' என்று சொல்லி நஞ்சீயர்க்கு நியமிக்க, சீயரும் பொருளருளிச் செய்து வருகையில் "அடைக்கலத்தோங்கு கமலத்து"(86) என்ற பாசுரத்தில் "வெண்ணெய்க் கன்று ஆய்ச்சி வன்தாம்புகளால் புடைக்க அலந்தானை" என்றவிடத்திலே 'புடைக்க அலந்தானை' என்கிற பாடப்படியே "தாம்புகளால் கட்டியடிக்க வருத்தப்பட்டவனை" என்று நஞ்சீயர் பொருளுரைக்க, பட்டர் அது கேட்டு 'ஜீயா' 'அலந்தானை' என்ற பாடத்திற்காட்டிலும் 'அலர்ந்தானை' என்ற பாடம் ஆழ்வார் திருவுள்ளத்திற்கு மிகப் பொருந்தும் போலத் தோன்றுகின்றது' என்றருளிச் செய்தாராம். அலந்தான்—வருந்தினவன். அலர்ந்தான்—முகமலர்ச்சியடைந்தவன் என்று பொருள் வாசி காண்க. முகமலர்ச்சி எங்ஙனே என்னில் ? கண்ணபிரான் வெண்ணெய் களவு செய்கிற தன்னை யசோதைப்பிராட்டி அடிக்கடி தாம்பினால் கட்டி வருத்துகின்றாளென்று வீட்டிலுள்ள கயிறுகளைத் துண்டு துண்டாக அறுத்து வைத்துப் பின்பே களவு செய்யப் புகுவான். அவள் இவனை ஒருகையிலே பிடித்துக்கொண்டு கயிறு தேட, அவை துண்டுதுண்டாக இருப்பது கண்டு அவற்றை ஒன்றோடொன்று முடிபோட்டு ஒரு கயிறு வடிவமாக்கி அதுகொண்டு கண்ணபிரானைக் கட்டும்போது, இவன் தன் உடம்புக்கு எட்டம் போராதபடியான அக்கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்ட முடியாதபடி எளிதில் தன்னைத் தப்புவித்துக்கொள்ள வல்லவனாயினும், தனது ஸௌசீல்யம் ஸௌலப்யம் ஆச்ரிதபார தந்திரியம் முதலியகுணங்களை வெளியிடுவதற்கென்றே பரத்வ நிலையைத் தவிர்த்து மநுஷ்ய ஸஜாதீயனாக அவதரித்திருக்கிற தான் உரலோடு கட்டுண்டு அடியுண்டிருக்கை முதலான இவ்வகைகளாலேயே இக்குணங்களை விளங்கச் செய்து கொள்ள வேணுமென்று கொண்டு, ஒரு சுற்றுக்குப் போராத தாம்பு இரண்டு மூன்று சுற்றுக்குப் போரும்படி உடம்பைச் சுருக்கி அமைத்துக்கொண்டு கண்ணிநுண் சிறுத்தாம்பினால்

'கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன்' என்னும்படி ஆவன்.' இங்ஙனே நம்முடைய ஸௌ

சீல்ய ஸௌலப்ய குணங்கள் விளங்கப்பெற்றேமே, அவதார ப்ரயோஜநம் நன்கு நிறைவேறப் பெற்றதன்றே என்று முகமலர்ச்சியடைந்திடுவன் என்க. ஆகவே தூது அனுப்பப்படுதல் தாம்பாலாப்புண்டிருத்தல் முதலிய இழிவான காரியங்களினல் எம்பெருமானுக்குச் சிறிதும் வருத்தமில்லாதிருத்தலோடு மிக்க மகிழ்ச்சியுமுண்டென்பது விளங்கிற்று.

பின்னே எதனல் வருத்தமுண்டாமென்னில் பொன்னுக்குத்தன்னைக் குன்றுமணியோடொக்க நிறுத்தல் எப்படி துக்கஹேதுவோ, அப்படியே ஒத்தார் மிக்காரையிலனய மாமாயனுகிய எம்பெருமானுக்கும் அதிக்ஷுத்ரவஸ்துக்களான சில வற்றேடு தன்னை ஒப்பிடப் பெறுதலே துக்க ஹேதுவாமென்பது ''ஒட்டுரைத் திவ்வுலகுன்னைப் புகழ் வெல்லாம் பெரும்பாலும், பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ'' இத்யாதிகளா லுணரத்தக்கது. இவ்வகையாலே பொன்னேடொக்கச் சொல்லலாம் எம்பெருமானை.

2. பொன்னனது மண்ணில் கலந்திருந்தாலும் சேற்றில் அழுந்திக் கிடந்தாலும் உள்ளே மாசு ஏறப்பெருது. எம்பெருமானும் ஹேயவஸ்துக்களோடே கூடியிருந்தாலும் மாசறு சோதியனே யாவன்.

3. பொன்னின் மதிப்புக்கு ஒருநாளும் குறைவில்லை. பொன்நகைகளுக்கு எக்காலத்திலும் ஏற்றமுண்டன்றே. எம்பெருமானுடைய மதிப்புக்கும் ஒருகாலும் கொத்தையில்லை. இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்கள் கண்டு கொள்க.

## நைச்சியானுசந்தானம்

வாக்குத் தூய்மை யிலாமையி னலே
　　மாதவா உன்னை வாய்க்கொள்ள மாட்டேன்!
நாக்கு நின்னை யல்லால் அறியாது!
　　நான் அது அஞ்சுவன்; என்வசம் அன்று;
மூர்க்குப் பேசுகின்றன் இவன் என்று
　　முனிவாயேலும் என் நாவினுக்கு ஆற்றேன்;
காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்;
　　காரண! கருளக் கொடி யானே. (1)

நன்மை தீமைகள் ஒன்றும் அறியேன்
　　நாரண என்னும் இத்தனை அல்லால்;
புன்மையால் உன்னைப் புள்ளுவம் பேசிப்
　　புகழ்வான் அன்று கண்டாய்; திருமாலே!
உன்னுமாறு உன்னை ஒன்றும் அறியேன்;
　　ஓவாதே 'நமோ நாரண' என்பன்;
வன்மையாவது உன்கோயிலில் வாழும்
　　வைட்டணவன் என்னும் வன்மை கண்டாயே! (2)

— பெரியாழ்வார் திருமொழி.

# வாலி வழக்கு

''முதுபெரும் புலவர்''
திரு. புரிசை சு. முருகேச முதலியார்,
திருவண்ணாமலை

—(முற்றொடர்ச்சி)

## இலக்குவப் பெருந்தகை

''வீழ் நாள் படாமை நன்காற்றின் அஃ தொருவன் வாழ்நாள் வழியடைக்குங்கல்'' என்ற வள்ளுவர் வாக்கிற்குத் தெள்ளியெடுத்த இலக்கியமாகிய ஏந்தல் இலக்குவன். தாங்கள் ஒரு அரை நாள் உழைத்து அரைநாள் தூங்கி ஒருநாளெல்லாம் உழைத்தோமென ஒலமிடுகின் றனர் உலகவர். இரவென்பது ஒன்று உண்டா? அது எங்கே இருக்கிறது? எப்படி இருக்கும்? என்று கேட்கும் ஏந்தல் இலக்குவன். இந்த இலக்குவனும் தப்பிதம் செய்துவிட்டுத் தலை குனிந்த நாள் ஒன்று உண்டு. சற்றே உன்னிப் பார்க்கும் பொழுது அதுவும் பிழையல்ல, பெரு மிதப்பிழை.

பெருவிலை கொடுத்துப் பெருமதிப்புள்ள பசுவொன்றை வாங்கினன் ஒருவன். அதை நாள்தோறும் மேய்ப்பான், தேய்ப்பான். புல் லும் நீரும் புகட்டினன். குழந்தை போல் வளமுற வளர்த்தான். அது கருவுற்றது, கன் றையீன்றெடுத்தது. இத்தனை நாளும் இப்படி வளர்த்த அவனை அது துரத்துகின்றது, முட்ட வருகின்றது. இது உலக நிகழ்வு. ஏன் அது. அக்கன்றின் மேல் வைத்த அளவு கடந்த காதல். அதுபோல, சித்திரகூடத்தில், மலைச்சிகரத்தில் அண்ணனுக்கு அருங்கனி தேடிநின்ற அருந்த வன் இலக்குவன். வடக்கேயிருந்த பரதன் படைகளைக் கண்டனன். இச்சிறியவன் பெரிய வர்மேல் படையெடுத்து வந்தனனென எண்ணி மனம் பேதுற்றனன். வெகுண்டனன் வில்லை வளைத்தனன். பரதனை அறைகூவப் பதைத்த னன். அண்ணல் தடுத்து, அப்பா நீ பரதனை அப்படியெண்ணதே. அவன் வருவது என்னை அழைக்கவே. சற்றே நின்று பார் எனப்பொறுத் துப் பார்த்து உள்ளம் உருகினன்.

''தொழுதுயர் கையினன் துவண்ட மேனியன்
அழுதழி கண்ணினன் அவலம் ஈதென
எழுதிய வடிவம் ஒத்து எய்து வான்தனை
முழுதுணர் கேள்வியான முடிய நோக்கினன்.

''எல்லொடுங் கியமுகத் திளவல் நின்றனன்
மல்லொடுங் கியபுயத் தவனை வைதெழும்
சொல்லொடுஞ் சினத்தொடும் உணர்வு சோர்தர
வில்லொடும் கண்ணினீர் நிலத்தில் வீழவே.

இப்படி மனமாறுபட்டு வெகுண்டு வெட்க முற்றயர்ந்த நிலை. இந்த ஒரு காலத்தில்தான் ஐயன் இலக்குவனை அணுகிற்று. இதுவும் பசு கன்றின் மேல் உண்டான பற்றினல் வளர்த் தவனைப்பாய வந்தது போன்ற ஒன்று. இராம பிரான் மேல் கொண்ட அளவற்ற அன்பினல் இலக்குவன், பரதனைப் பகைவனய் நினைக்க நேர்ந்தது. ஈதன்றி எந்தக்காலத்திலும் ஏந்தல் அறங்கோண அமைதியிழந்ததே கிடையாது. இராமபிரானின் வாழ்நாள் முழுவதுமே வரு வதை முன்னறிந்து சொல்லும் வன்மையனகத் திகழ்ந்த செம்மலே இலக்குவன்.

இப்படி அன்பே உருவான, வருவதை வகுக்கவல்ல தம்பிக்கு வாலிவதையில் அண் ணனேடு பேசவாய்ப்பே இல்லாமல் போய்விட் டது. ஏன் அது? அவ்வானர வீரர்கள் செய்த வகையால் தான். அவர்கள் இருவரையும்இடை விடாமல் மொய்த்துக்கொண்டேயிருந்தார்கள். அதே நேரத்தில் அவர்கள் மாத்திரம் இரகசியம் பேசப் பிரிகின்ருர்கள். அவர்கள் பலர், இவர்கள் இருவரே. அவர்களில் சிலர் சென்ரு லும், பலர் இவர்களை விட்டு நீங்குவதேயில்லை. அது அவர்கள் நாகரிகமாக இருந்தது. இந்த முற்றுகையிலிருந்து முன்னவனும் பின்னவனும் கலந்து பேசவே காலங்கிடைக்காமல்போயிற்று. அனுமன் செயற்பாடுகளனைத்தையும் உள்ளு ணர்வோடு நோக்கி வருகின்ற இளவலுக்கும் ஒருகாலம் நேர்ந்தது. அது வாலிக்கு வம்பு வந்துவிட்ட நேரம்.

மராமரம் எய்தாயிற்று, வணங்காமுடி சேகரன் வணங்கியாயிற்று. அன்னை கலன்களைக் காட்டியாயிற்று, அண்ணல் கருத்தில் வாலி வதைக்கு முதன்மை கொடுத்து இருத்தியாயிற் யிற்று. உடனடியாகப் போருக்குப் புறப்பட்டு விட்டார்கள். வாலியின் கோட்டை மைதா னத்தைக் குறுகியுமாயிற்று. அனுமனை அரசன் படைகளில் உள்ளவர்களையெல்லாம் ஒருமூலை யில் சென்று நிற்கப் பணித்து விட்டார்கள். அவர்களும் ஆணையின் படிச் சென்ருர்கள். முக் கோண வடிவமானது அந்தப் போரிடம். அதில் ஒரு கோணத்தில் நின்ருர்கள். இந்த அனுமனு தியர் நின்ற நிலை ஒரு கோணத்தில், அதற்கு ஒரே மற்ருெரு மூலை வாலியின் கோட்டை வாயிற்படி. இந்த இரு கோணங்களுக்கும் நேர் நேராகப் பொருந்தும் மற்ருெரு கோணத்தில் உள்ள ஒரு சோலையில் சுக்கிரீவனேடு இராமன் சென்று நின்றனன். ஏந்தலொடு என்றும்

போல இளவலுந்தான். இது போர்கள் அமைப்பு. மிகவும் நுணுக்கமான இடம் இது. அதாவது, அனுமனுதியரோடு, இராம இலக்குவ சுக்கிரீவர்கள் இல்லை. இவர்களும் அனுமனுதிய படைஞர்களும் வேறுவேருக வெவ்வேறு கோணங்களில் நின்றனர். இவ்விருபாலாருக்கும் நேருக்கு நேராக நிற்கின்றது வாலி கோட்டை வாயிற்படி.

இப்படி நின்ற அந்தநேரத்தில் இராமன் சுக்கிரீபனை அழைத்து, அரசே. நீ இங்கிருந்து சென்று வாலியை ஓசையிட்டு உரப்பிப் போருக்கு அழைக்க வேண்டும். அவன் வந்து எதிர்ப்பான் அல்லவா? அவனேடு நீயே நேர் நின்று போர் செய்ய வேண்டும். அப்படிப்போர் புரிகையில் தக்கநேரமும் அமைதியும் நேரும் பொழுது, நான் வாளியை விட்டு வாலியை அடித்து முடிப்பேன். இது என்னுடைய கருத்து என்றனன். அதனைக் கேட்ட சுக்கிரீவன், இது மிக நல்ல முடிவு. அப்படியே செல்கின்றேன். நீங்கள் குறித்தபடி செய்யுங்கள் எனக் கூறிப் புறப்பட்டனன் (வாலி வதை 1).

இங்கே சுக்கிரீவனுக்குக் கம்பர் தரும்பேர் ''தெவ் அடக்கும் வென்றியாளன்'' பொருள் என்ன? அறமோ மறமோ நாம் செய்வது எந்த விதப்போரோ. தெவ் என்ருல் பகைவன். அவனை அழித்துத் தொலைக்க வேண்டும். இதுதான் இப்பொழுது வேண்டியது. அதற்குத் தகுந்த திட்டந்தான். நமது தலைவன் குறிப்பிடும் முறை என ஒத்துக் கொண்டனன் சுக்கிரீவன். ஆதலால் அவன் வீர வெற்றியனுக விரும்ப வில்லை. எப்படியோ எதிரியைத் தொலைப்பதில் மட்டில் கண்ணுங்கருத்துமாக இருந்தனன் என் பது பொருள்.

''அவ்விடத்து இராமன், நீஅழைத்து வாலியான தோர்
வெவ்விடத்தில் வந்து போர் விளைத்தகாலை வேறு நின்று
எவ்விடத் துணிந்து அமைந்தது என்கருத்து இது என்றனன்.
தெவ் அடக்கும் வென்றியானும் நன்று இது என்று சிந்தியா''

இவன் சென்ருன், இடியிடித்தது போல உரப்பினுன். அவன் என்ன குறைந்தவனு? அவனும் இடியிடிப்பது போல் சிரித்து எழுந்தான். தாரை தடுத்தாள். அவன் இராமனைப் பற்றி எண்ணியிருந்த எண்ணங்களையெல்லாம் சொல்லி அமைதிப்படுத்திவிட்டுப் போர்க் களத் திற்கு வந்துவிட்டான். போர் தொடர்ந்து நடந்தது. இராமனுக்குச் சுக்கிரீவனைத் தெரியும். வாலியைத் தெரியாது. அண்ணல் இப் பொழுதுதான் வாலியை அமைய நோக்குகின் ருர். வாலி சுக்கிரீவன் இருவரும் சரியான அண்ணன் தம்பிகள். ஒரே தோற்றம்; ஒரே நிறம். அவ்வொத்த நிலைகண்டு வியப்புற்று அவர்கள் இடும் போரையுங்கண்டு இராமன் தனது தம்பியை ஐய! இந்தப் பெரும் போரையும் இவர்கள் தோற்றத்தையும் பார். உலகில் அமரர் அசுரர் போர் நிற்க. எந்த இரண்டு பெரும் மேகங்கள், இரண்டு சூராவளிகள், இரு உகாந்த கால நெருப்புக் கோளங்கள், எதிரெதிரில் போரிடினும் இவர்களுக்கு ஒப்புரைக்க முடியுமா? என்று கூறிவியந்தனன்.

இப்படிக் கூறிப் போரை வியக்கின்ற அண்ணலை, அல்ல, அல்ல, வள்ளலை நோக்கி இளைய இலக்குவன் பேசலுற்றனன். அண்ணல் என்று கூறி அல்ல என்பதேன் என்கின்றீர்களா? கம்பர் இங்கு வள்ளல் என்று கூறுகின்ருர். அதை விடுத்தால் உண்மை விளங்காது என்பதற்காகத்தான். சிவபெருமான் வள்ளன்மையையும்திருமால் வள்ளன்மையையும் பக்தர்கள் விவரிப்பார்கள். சிவபெருமான் கொடைக்குணம் மேம்பட்டு ஏமாந்தனராம். வருந்திக் கேட்பவர்களுக்கு வாரி வாரிக் கொடுத்து, பிறகு தமக்கே அல்லல் வந்தாலும் படுகின்றவர் அவர். அது போலத் திருமால் தருவதில்லைத் துன்பம் படுவதுமில்லை யென்பார்கள். இங்கே இராம பிரான் வாழ்க்கை முழுதுமே மிக இரக்க மனதுடையராய் வருந்திக் கேட்டவர்களுக்குக் கேட்டபடி கொடுத்து விட்டுப் பிறகு வரும் துன்பங் களிலெல்லாந் தோய்ந்து தோய்ந்து பொறுத்துக் கொண்டு அழுகிறதும் அவர் வழக்கமாகிவிட்டது. எதிரியின் வரத்தை, வாழ்க்கைத் தரத்தைக் கேளாமலேயே அழுது புலம்பிய சுக்கிரீவனுக்கு வாக்கைக் கொடுத்துவிட்டு வருந்துகின்றனர் என்ற குறிப்பையுடையது வள்ளல் என்ற சொல்: இங்கே இலக்குவன் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. எனது உள்ளம் மிக ஆழ்ந்த துன்பத்தில் மூழ்கிக் கிடக்கின்றது. இந்த சுக்கிரீவன் உங்களைச் சக்ரவர்த்தித் திருமகனுக ஒன்றும் கருதவில்லை. அவன் தன் தமையனைக் கொல்லத்தகுந்த ஒரு எமன் எனவே உங்களை எண்ணுகின்றனன். இந்தக் குரங்கின் குறும் போர் எனக்கொன்றும் பிடிக்கவில்லை. யான் எங்கே போரின் காட்சியைக் கண்டு களிக்கப் போகின்றேன் என்றனன்.

இலக்குவன் இவ்வளவு வெறுத்துச் சுக்கிரீவனைக் கூறுவானேன் எனக்கருதுதல் வேண்டும். முன்னமே வரத்தைக் கொடுத்தாயிற்று. பிறகு தெரிந்தது சிவபிரானுல் வரம் பெற்ற நிகழ்ச்சி. அதற்கு மேல் அண்ணலை ஓய விடாமல் தொடர்ந்து வாலியின் மேல் சீற்றம் வளருவதற்கான வகைகளையெல்லாம் செய்து வருகிருர்கள். எப்படி வரம் பெற்றிருக்கின்றனரோ அவ்வரத்திற்கு உள்ளாகத் தான் போரிட முடியும். அதற்காகவே அண்ணல் இங்கு படைஞரை விட்டுப் பார்வையற்ற இடத்தில் சோலையில் நிற்கவேண்டி வந்தது. அதற்குமேல் இந்தப் போர் எதிரிக்குத் தன் எதிரிகள் யாவர் என்று அவன் உணர வழியில்லாமல் நடக்கின்றது. போருக்கு அழைக்கின்றவன் சுக்கிரீவன். அவனேடு போரிடுகின்ற பொழுது கொல்ல நிற்கின்றவர் தனது அருமை அண்ணலார். இதன் முடிவில் கிடைப்பதென்ன? சுக்கிரீவனுக்கு அரசு. ஒரு மலையனைய தமது பேரரசைத் தந்தையின் வாக்கைக் காப்பாற்ற விட்டு விட்டு வந்த வள்ளல், இந்த கடுகத்தனைய அரசை ஒருவனுக்கு வாங்கித் தர இந்தப் பாடெல்லாம் படுகின்ருரென்ருல் இளைய பெருமானுக்கு எப்படியிருக்கும்? இப்போர், பழிக்குப் பாத்திரமான குரங்கின் குரங்குத்தனங் குன்ருத போர்.

இது என் உள்ளத்தில் ஊன்றிய துன்பத்தை விளைத்து விட்டது. இவன் உங்கள் பெருமையைக் காப்பாற்றச் சிறிதும் விரும்பவில்லை. தனது பகைவனைத் தொலைக்கும் ஒன்றிலேயே கண்ணுங்கருத்துமாக நிற்கின்றவன் என்றனன் இலக்குவன்.

உலகத்தில் நடக்கும் உண்மைகள் உத்தமருள்ளத்தில் எப்படியோ வந்து படிந்துவிடும். அந்த அனுமனே சுக்கிரீவனுக்குத் தங்கள் கருத்திற்கேற்றவனுக ஒரு போர் வீரன் கிடைத்து விட்டனன் என்று ஆனந்தக் கூத்தாடினன் முதவிலேயே. இராமன் வருகையைத் தங்கள் கூட்டத்திற்கு உணர்த்த வந்த அனுமன், அகமகிழ்ந்து ஆடினுன். அவன் வாலியை வதைக்க ஒரு புதிய எமன் வந்திருக்கின்றனன் என்று சொல்லி ஆடினுனும். அது பெரிய ஆட்டமாம். அவ்வாடல் ஆலகாலமுண்ட சிவபெருமான் ஆடுவதைப் போல இருந்ததாம் (மராமரப் படலம் 40)

''மேலவன் திருமாலுக்கு உரை செய்வான். விரை செய்தார்
வாலி என்று அளவு இலா வலியினன் உயிர் தெறக்
காலன் வந்தனன் நாம் இடர்க்கடல் கடந்தனம் என்று
ஆலம் உண்டவனின் நின்று அருநடம் புரிகுவான்''

என வருகிறது. அது முதல் இதுவரை அனுமசுக்கிரீவர்களின் உள்ளக்கிடக்கை இதுவாகவே இருக்கின்றது. இக்குறிப்புகளை ஆங்காங்குச் சிந்தித்துவருகின்றனன் இளவல். ஆனுல் அண்ணலோடு கலந்து உரையாட இடமில்லை. அந்த உள்ளத்துணர்ச்சிகளெல்லாம் இடங்கிடைத்த இப்பொழுது வெளி வருகின்றன. மேலும் சிறிதும் மனம் ஆருத செம்மல் அறமே உருவான உங்கள் உள்ளம் சற்றும் அறத்தொடு பொருந்தாத இந்தக் கொடும்போரைச் செய்து ஆவதென்ன? பண்பாடு இத்தகைய தென்று அறிய முடியாத ஒருவனைத் துணையாகத் தேடுவானேன்? உடன் பிறந்த அண்ணனைக் கொல்ல இத்தனை விரைவு காட்டுகின்றவன் அயலார்களோடு பகை வந்தால், எவ்வளவு பொறுமையைக் கையாளுவான் என்றெல்லாம் எண்ண வேண்டாமா? இந்த அறநெறி வழுவாத அழகு மிக்க துணைவர்களைத் தேடித்தான் இராவணனை வெல்ல வேண்டுமா? கரனைத் திரிசிரனைத் தூடணனை, முடித்தபொழுதெல்லாம் யாராவது எங்களுக்குத் துணை வந்தவருண்டா என்பது குறிப்பில் வர, வீர! என முன்னவனைக் கூறி முடிக்கின்றுன் இளைய பெம்மான் (வாலி வதை 33-34)

''வள்ளற்கு இளையன் பகர்வான் இவன் தம் முன் வாழ்நாள்
கொள்ளக்கொடுங் கூற்றுவனைக் கொணர்ந்தான்
எள்ளற்கு உரித்தாம் குரங்கின் செயல் என்னும் இன்னல்
உள்ளத்தில் ஊன்ற உணர்வு உற்றிலன் ஒன்றும் என்றுன்''

''ஆற்றுது பின்னும் பகர்வான் அறத்தாறு அழுங்கத்
தேற்றுதவர் தங்களைத் தேறுதல் செவ்விது அன்றுல்
மாற்றுன் எனத் தம்முன் உயிர் வவ்விய வந்து நின்றுன்
வேற்றுேர்கள் திறத்து இவன் தஞ்சம் என் வீர என்றுன்''

உள்ளம் பதைக்கும் இந்த ஒள்ளிய தம்பியை எப்படியோ சரிசெய்ய வேண்டிய இன்னலில் நிற்கின்றனன் இராமன். ஏன்? இலக்குவன் கருத்தோ இதற்கு முன் தெரியவில்லை. இலக்குவன் கருத்திற்கு மாருன எந்த வேலையும் ஒத்து வந்து செய்வனே முடிவதும் வழக்காற்றில் இல்லை. இதற்குச் சற்று முன்னர் கருத்தறித் திருந்தாலும் நின்று நிதானித்து ஏதாவது ஒரு வழியைத் தேடியிருக்கலாம். தம்பி மனைவியைக் கவர்ந்தான் அண்ணன் என்ற சொல் கேட்ட வுடனே தொடர்பில்லாது, நமது மனைவியை வஞ்சித்த இராவணனைவிடத் தானே பார்த்துப் பெண் தேடித் தம்பிக்கு மணம் செய்து வைக்கும் அண்ணன் ஒருவன் அந்தப் பெண்ணையே அபகரித்தானென்றுல் அவன் குற்றத்தை விட இவன் குற்றம் மிகுதியானது. இவனைத்தான் முன்னர் முடிக்க வேண்டும் எனச்சுக்கிரீவன் சொல்வதையும் கேளாமல் விரைவுபடுத்தினேம். அவனை அறைகூவ நாமே ஏவிவிட்டோம். அவனே அல்லலில் நிற்கின்றுன். அவனுக்கு ஆதரவுங்கூறி அவதியிலும் விட்டவராகின்றேம். என்ன செய்வது? இனி அவர்களோடு பேச வழியில்லை. இளவலை ஒருமைப் படுத்துவது ஒன்றே தான் வழி என்று உன்ன வேண்டி வந்தது இராமனுக்கு.

பிடிவாதத்தில் ஒரே நெறியில் சிறுவர்களை மாற்ற எண்ணும் பொழுது பெரியவர்கள் தம்பி தம்பியென்று கெஞ்சுவார்கள். இல்லையானுல் வெல்ல முடியாது. இவ்வழக்கம் இராமனுக்கு மாத்திரம் மாறுபட இருக்க முடியாது. அவரும் உலக வாழ்வில் தான் இப்பொழுது இருக்கின்றனர். ஆதலால் இங்கிதமாக ஐயா என அழைத்தனன் இராமன் இளவலை. அத்தா-ஐயா! இதைக் கொஞ்சம் நீ கேட்க வேண்டும். இதுகளெல்லாம் காட்டுக்குரங்குகள் தான். பரதன் என்னையெப்படி மதிக்கின்றனன் அப்படியே உலகத் தம்பிகளெல்லாம் தங்கள் அண்ணன்மார்களை மதித்து நடப்பார்கள் என்றுல் பரதனுக்கு அவ்வளவு பெருஞ்சிறப்பு எப்படி வரப்போகின்றது. சிறிது சிந்திக்க வேண்டுமப்பா என்றனன் இராமன். பின்னும் இளவலை நோக்கி ஒரு வில்லை ஏந்திக் கொண்டு நிற்கும் மலையனைய தோளுடைய இளவலே! இந்த உலகத்தில் உண்மை ஒழுங்கு இவற்றிற்காகப் பாடுபடுகின்றவர்கள் ஒரு சிலரே. அதற்கு மாருனவர்களே பெரும்பாலோரும். நமக்கு ஒரு தலைவன் வேண்டும். நமக்கு இன்றியமையாத வேலை. நமது வேலைக்கு உகந்த ஒருவனைத் தேடிக் கொள்ளுகின்றதா? அல்லது நேர்மையானவனு? ஒழுக்கமுடையவனு? நல்ல மரபில் வந்தவனு என்றெல்லாம் தேடிக் கொண்டு செல்லுவதா? எனவும் கூறினன் இராமன், தன் அருமை இளவல் கருத்தை மாற்ற.

ஆனுல் இளவல் கருத்து மாறவில்லை. வயதில் மூத்தவர் இராமபிரான். ஆனுலும், அனுபவத்தில் இளவலுக்கு ஒரு சிறப்பிருந்தது. அது என்னவெனில், நற்குணமுள்ள ஒரு அண்ணன் தனது தம்பிமாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது மாத்திரம்தான் இராமபிரானுக்குத் தெரியும். அவர் குடியில்

அவரே பெரியவர். மற்றவரெல்லாம் இளைய வர்கள். இலக்குவப் பெருந்தகைக்கு, இரு அண்ணன் மாரும் உளர். ஒரு தம்பியும் உண்டு. இதனால் இருவித அநுபவமும் இருந்தது. ஒரு தம்பியின் மனைவியைக் கைக்கொள்ளும் அண்ணனும் ஒரு அண்ணனா? அவனை உடனே தொலைக்க வேண்டாமா? என்று எண்ணுகின்றனன் இராமன். உடன் பிறந்த, தனக்கும் எல்லா வகையாலும் சிறந்த, தந்தைக்கே நிகரான அண்ணனுக்கு ஒரு ஆபத்து வந்துவிட்டதென்றால், மனைவியாவது மற்றவராவது? இந்த அண்ணனுக்கு முந்தியா நமக்கு அவள் மனைவியாக வந்துவிட்டனள்? என எண்ணித் தனது மனைவியாகிய ஊர்மிளா தேவிக்கு ஒரு சொல் கூடச் சொல்லாமல் மரவுரி தரித்துப் புறப்பட்டு இன்னும் தனக்கொரு மனைவியிருப்பதாகவும் எண்ணாமல், அண்ணனார் அரும்பணியிலேயே நிற்பவர் இலக்குவனார். இவ்வளவு பரந்த நிறைந்த உளப்பாங்குள்ள இலக்குவனுக்கு, ஒரு தம்பி உடன் பிறந்த ஒப்பற்ற ஒரு அண்ணனை ஒழிக்க இவ்வளவு திட்டமிட்டிருக்கின்றனன் என்றால், இக்கொடுஞ் செயலுக்கு உலகம் ஏழும் மதிக்கும் ஒரு பெருமகன் கூட்டாகவும் சம்பவித்தது என்றால், எப்படியிருந்திருக்கும் இளவலின் உள்ளம்? அதனால் தான் இராம பிரான் கெஞ்சிப் பேசும் ஒன்றும் இளவல் மனத்தை மாற்ற முடியவில்லை.

தொடரும்

## அரங்கனைப் போற்றல்

துப்புடையாரை அடைவ தெல்லாம்
சோர்விடத்துத் துணையாவர் என்றே;
ஒப்பிலேன் ஆகிலும்நின் அடைந்தேன்;
ஆனைக்கு நீ அருள் செய்தமையால்;
எய்ப்பு என்னை வந்து நலியும்போது, அங்கு
ஏதும் நான் உன்னை நினைக்க மாட்டேன்;
அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத்து அரவணைப் பள்ளி யானே.

மாயவனை மதுசூதனனை
மாதவனை மறையோர்கள் ஏத்தும்
ஆயர்கள் ஏற்றினை அச்சுதனை
அரங்கத்து அரவணைப் பள்ளி யானை,
வேயர் புகழும் வில்லிபுத்தூர் மன்
விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும்,
தூய மனத்தனர் ஆகி வல்லார்
தூமணி வண்ணனுக்கு ஆளர் தாமே

—பெரியாழ்வார் திருமொழி.

# மதிப்புரை

பொய்யுரையாத புண்ணியன் :

பொய்யுரையாத புண்ணியன்: கல்வியிற் சிறந்த கவிஞர் பெருமான் ஆகிய கம்பரின், இணையற்ற இராமாவதாரம் என்னும் காவிய நாடகத்தில் வரும் முதன்மை மிக்க கதைப் பாத்திரங்களுள், வாலி ஒருவன். வாலி வலியவன், பெரியவன், அரியவன்! அவனது அருமை பெருமைகள் அளப்பரியன! வாலி மிகச் சிறந்த பெரு வீரன் மட்டும் அல்லன்; சிறந்த நல்ல சிவ பக்தனும் ஆவான். அவனை இராமபிரான் மறைந்து நின்று கொன்றருளிய வரலாறு பற்றி அறிஞர்களிடையில் பலவகை ஆராய்ச்சிகளும், வழக்கீடுகளும், தொன்றுதொட்டு, ஓய்வு ஒழிவு இன்றி இடையறுது நிகழ்ந்து வருகின்றன. அவ்வகை ஆராய்ச்சி நூல்களுள், இந்நூலும் ஒன்று, மிகவும் தலை சிறந்ததொன்று. காலஞ் சென்ற பேரறிஞர்—''கலா நிலையம்'' பத்திராதிபர்—திரு டி. என். சேஷாசலம் ஐயர் பி.ஏ. பி.எல். அவர்களின் கருத்துக்களைத் தழுவி, விளக்கி, இந்நூல் புதிய முறையில் அழகுற எழுதப்பெற்றுள்ளது. இந்நூலாசிரியர் திரு பெ. இராமானுஜன் அவர்கள், கம்பரையும் வால்மீகரையும், ஷேக்ஸ்பியரையும் நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றுள்ளார். நூலாசிரியரின் நுண்மாண் நுழை புலம், நூல் முழுவதும் பரவி விரவித் திகழ்கின்றது. அறிவுக்கு விருந்து அளிக்கும் பயன்மிக்க நல்ல ஆராய்ச்சி நூல்! விலை ரூ. 3-50

கிடைக்குமிடம் :

திரு. பெ. இராமானுஜன், கம்பர் நிலையம், தேவானூர் அஞ்சல், முசிரி வட்டம், திருச்சி மாவட்டம்.

—ஆசிரியர்.

158613
சென்னை-600 00





திருத்தணிகைத் தங்கத்தேர் வெள்ளோட்டத்தினை, வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் அரசுச் செயலர் திரு. ஜி. எஸ். சேஷாத்திரி, ஐ. ஏ. எஸ்., அவர்களும், அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., அவர்களும், பிறரும் தொடங்கி வைத்துச் சிறப்பித்தல். *(14-4-76)*

←திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமியின் தங்கத்தேர்த் திருவுலாக் காட்சி *(14-4-76)*

# இல்லங்களைப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம் – காதி கிராப்ட்

கோடைக்கேற்ற கதர் பருத்தி வகைகள் கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பட்டு தினுசுகள், தாகம் தணிக்க பதநீர், சுவை மிகுந்த தேன், அக்மார்க் செய்யப்பட்ட செக்கெண்ணெய், உடலுக்கு உறுதி அளிக்கும் பனைவெல்லம், மணமும், அழகும் பெருக்கும் குறிஞ்சி வாசனை சோப்பு, வெள்ளை வெளேர் சலவைக்குக் கோபுரம் சோப்பு, சிறந்த முறையில் செய்யப்பட்ட காலணிகள், தோல் பொருட்கள், வேலைப்பாடு மிக்க மண்பாண்டங்கள், இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச் சாமான்கள், பிரம்பு, மூங்கிலிலான பொருட்கள் மலிவு விலை தீப்பெட்டிகள், அழைப்பிதழ் அச்சிட கைக்காகிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180

**காதி கிராப்ட்** களிலும்

மலிவு விலையில் கிடைக்கும்.
வாங்கிப் பயன் பெறுவீர்!
கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிப்பீர்!




வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்!

- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள் !
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது !
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து !
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

## இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009



நெடுங்கல் மன்றம்



எழுநிலை மாடம்

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.